உங்கள் தேவையறிந்து
எங்களின் சேவை

குமாரர்ஸ்
Kumars Jewels S.A.R.L.
80, Bld. Barbes, 75018 Paris.
M°: Marcadet Poissonniers
Tél: 42 59 11 52 Fax: 42 59 35 00

France: 10FFrs. GB: 90P Germany: 2.50DM Suisse: 2.50SFrs.

# ஈழமுரசு

Eelamurasu Weekly
முரசு: 2 19 - 25 செப்டெம்பர் 1996 முழக்கம் : 88

Kumars Shop S. A. R. L.
80, Bld. Barbes, 75018 Paris.
M°: Marcadet Poissonniers
Tél: 42 59 35 10 / Fax: 42 59 35 00

குமாரர்ஸ்
K.T.C. Jewels
193, Rue du Fg. S<sup></sup>t.Denis, 75010 Paris.
M°: Gare du Nord / La Chapelle
Tél: 42 05 41 36

# கட்டாய இராணுவ சேவை மூலம் 75 ஆயிரம் பேரை திரட்ட முடிவு

**கட்டாய இராணுவ சேவை என்கின்ற சிறீலங்கா அரசின் திட்டம் ஊசலாடிக் கொண்டிருக்கின்ற வேளையில் இராணுவப் படைப்பிரிவுகளை பூரணமாய் பலப்படுத்தும் வகையில் எழுபத்தையாயிரம் பேரை சேர்த்துக் கொள்ளுவது என அரசு இப்போது தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.**

இந்தத் தீர்மானத்துக்கமைய இராணுவத்துக்கு ஆட்களை சேர்க்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோஹான் தலுவத்த, இராணுவ ஆட்சேர்ப்புப் பணிப்பாளர் கேணல் என் ஜனதிலக்காவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்போவதாக உள்நாட்டையும் சர்வதேசத்தையும் ஏமாற்றிக் கொண்டிருக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் திரைமறைவில் படைகளைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. பதினெட்டு வயதுக்கும் நாற்பத்தி ஐந்து வயதுக்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## காலிப் பிராந்தியம் அமெரிக்காவிடம்?

(கொழும்பு)

சிறீலங்காவின் தென்பகுதியிலுள்ள காலிப் பிராந்தியத்தின் ஒரு பகுதியை அமெரிக்க வர்த்தகர்கள் பொறுப்பெடுத்து சர்வதேச விமான நிலையம், வர்த்தக வலயம், உல்லாசக் கிராமம், தொலைத் தொடர்புக் கிராமம், களஞ்சியப்படுத்தல் பண்டசாலைகள் என்பனவற்றை அமைக்க ஆலோசித்து வருவதாகச் சொல்லப்படுகின்றது.

இது தொடர்பாக செய்தி வெளியிட்டுள்ள கொழும்புப் பத்திரிகை ஒன்று, 20 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் 27500 மில்லியன் ரூபா செலவில் இதை அமைக்க இருப்பதாக தென் மாகாண அபிவிருத்திச் சபைத் தலைவர் நளின் குணரத்னா தெரிவித்ததாகச் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க முதலீட்டாளர் குழுவொன்று காலிக்குச் சென்று திரும்பியுள்ளது. இந்த வாரம் விமானக் கம்பனி அதிபர்கள் அமெரிக்க நிதி நிறுவன அதிபர்கள் அடங்கிய

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## வில்பத்துக் காட்டில் புலி வேட்டையாம்

(கொழும்பு)

அனுராதபுரத்திலுள்ள மகாதாம் போதியைத் தாக்க வந்த புலிகள் வில்பத்துக் காட்டில் தங்கியுள்ளனர் எனக் கூறி புத்தளம் மாவட்டத்திலுள்ள அக் காட்டில் சிறீலங்கா படையினர் தேடுதல் வேட்டை ஒன்றை நடாத்தி வருவதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இது பற்றி செய்தி வெளியிட்டுள்ள கொழும்பு பத்திரிகை ஒன்று யாழ்ப்பாணத்திலும் ஏன் கொழும்பிலும் கூட இராணுவத்தின் மீதும் அரசாங்க இலக்குகள் மீதும் தாக்குதல் நடாத்தும் உண்மையான விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை தேடிக் கண்டு பிடிக்க முடியாத அரசாங்கம் அடர்ந்த காடான வில்பத்துக் காட்டுக்குள் நான்கு கால் மிருகங்களான மான்களையும் புலிகளையும் தான் வேட்டையாட படையினரை அனுப்பியுள்ளதாக செய்தி வெளியிட்டுள்ளது.

# இந்தோ - சிறீலங்கா பேச்சுவார்த்தை விடுதலைப்புலிகள் விவகாரம் ஆராயப்படுமாம்

சிறீலங்கா அரசாங்கமும், இந்திய அரசாங்கமும் இருதரப்பு உறவுகள் தொடர்பாக அடுத்த மாதத் தொடக்கத்தில் வெளிநாட்டு அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக கொழும்பில் சிறீலங்கா அரசாங்க மட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் இந்தர் குமார் குஜ்ராலும் சந்தித்துப் பேச விருக்கும் இக்கூட்டத்தில் முக்கியமாக விடுதலைப் புலிகளின் விவகாரம் ஆராயப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்தியக் கடற்படையின் உதவியைப் பெறுவது மற்றும் இராணுவ நிபுணத்துவ உதவிகளை பெறுவது, தமிழ் நாட்டில் புலிகளிற்கான ஆதரவு உருவாவதை தடுப்பது முதலான விடயங்கள் பற்றி அடுத்த மாதம் கொழும்பிற்கு வரவிருக்கும் குஜ்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## கதிர்காமர் தமிழகத்திற்கு வருவதை தமிழக அரசு விரும்பவில்லை

(கொழும்பு)

இவ் வருட ஆரம்பத்தில் புதுடெல்லிக்குச் சென்றிருந்த சிறீலங்காவின் வெளிநாட்டமைச்சர் லஷ்மன் கதிர்காமர் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் மருமகனும் மத்திய அமைச்சருமான முரசொலிமாறனைச் சந்தித்து பேசிய போது விரைவில் தமிழ்நாட்டுக்கு வருவேன் என்று கூறியிருந்ததாகச் செய்திகள் வெளியாகியிருந்தன. ஒரு தமிழனாகப் பிறந்து மந்திரிப் பதவிக்காக தமிழினத்தை அழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள சிங்கள பௌத்த அரசாங்கத்திற்கு துணை போகும் கதிர்காமர் தமிழகத்திற்கு வந்தால் தாங்கள் அதை எதிர்த்துப் போராடுவோம் என்று பல்வேறு தமிழீழ ஆதரவுக் கட்சிகள் போர்க்கொடி தூக்கியிருந்தன.

குறிப்பாக பாட்டாளி மக்கள் கட்சி, தமிழர் தேசிய இயக்கம்,

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## மன்னாரில் மீன்பிடித் தடை

மன்னார் கடற் பகுதியில் கடந்த 11.09.96 முதல் வாரத்தில் மூன்று நாட்களுக்கு கடலில் மீன் பிடிப்பதற்கு சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு தடை விதித்துள்ளது.

இதனால் நானாந்த வருமானத்தை எதிர் நோக்கி இருக்கும்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## யாழ் சின்னக்கடையில் ஒரு சிறு நீதி மன்றம்

யாழ்ப்பாணம் சின்னக்கடைப் பகுதியில் ஒரு நீதிபதி தலைமையிலான நீதிமன்றம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. அங்கு தினசரி 200க்கும் மேற்பட்ட மக்கள் காணாமல் போன தமது பிள்ளைகளையும், உறவினர்களையும் கண்டு பிடித்துத் தருமாறு மனுச் செய்ய நீதிமன்றத்தை முற்றுகையிட்டு வருகின்றனர்.

இவ்வாறு வருபவர்கள் புகைப் படங்களுடன் வந்து நீதிபதியிடம் முறைப்பாடு செய்கின்றனர். சுற்றிவர இராணுவத்தினர் துப்பாக்கி முனையில் நிற்கின்ற நிலையில் நீதிபதி மக்களின் புகார்களை கேட்டறிந்து தீர்த்துவைக்க முடியாத நிலையில் இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.


ஏசியன் என்ரபிறைஸ்
பட்டுவேட்டி, மாறுகரை வேட்டி ,நாலுமுழ வேட்டி, கிப்ஸ் சாறம்,
பெண்களுக்கான அலங்காரப் பொருட்கள், திருமணத்திற்கான அனைத்துப்
பொருட்களும் கூறைச்சேலை, பாவாடை, சட்டை, இந்தியாவிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட எல்லா நிறங்களிலுமான சட்டைத்துணிகள்
* தங்க நகைகளுக்கு உத்தரவாதமும் பற்றுச்சீட்டும் வழங்கப்படும் *
AE
ASIAN ENTERPRISE
Tel: 01/291 46 52
Fax: 01/291 46 37
Hohl.Str 78,
8004 Zurich.

## உள்ளதைக் கொஞ்சம் ஒழுங்காக் கதைப்பம்

ஒன்பதாம் ஆண்டு நினைவு..

நெஞ்செல்லாம் நிறைஞ்ச பெருமகனுக்கு... நினைவு விழாக்கள் ஆரம்பிச்சிருக்கு. ஒன்பது வருடங்கள் உருண்டோடி மறைஞ்சாலும், கண் வழி உருண்டோடிய கண்ணின் துளி ஈரம் உலரேல்ல. நெஞ்சமும் அப்பிடியே. நேற்று நடந்தது மாதிரிக் கிடக்குது..... மறக்கேலுமே..?

இதுக்கெல்லாம் எவ்வளவு அழுத்தமான உள்ளம் வேணும். சனத்தை எவ்வளவு இறுக்கமாகவும் நெருக்கமாகவும் நேசிச்சிருக்க வேணும். யோசிச்சுப் பாருங்கோ.. அற்வான்ஸ்லெவல் படிக்கேக்கையே ஒரு கெட்டாம் வந்திடும்.. அதிலும் 'நல்ல றிசல்ட்' வந்து.. கம்பசுக்கு என்ர பண்ணிறதெண்டால் சொல்லி வேலையில்லை. பொடிக்கு.. தலைகால் தெரியாது. தாய் தகப்பனுக்கு.. தலையிலை கொம்பு முளைச்சிடும். இஞ்சினியர் டாக்குத்தர் எக்கவுண்டன் எண்டால்.. சொல்லி விளைவேச வேணுமே. படலைக்குள்ளை பிள்ளை விட்டார் பெட்டியளோட வந்து நிற்பினம். சோதினையில பாஸ் பண்ணின பொடி... ஊர் உலகத்திலை காலால நடக்காது... கலவிலை: மிதக்கும். நடக்கிறதோ இல்லையோ.. சனர் 'திலவரங்களை யோசியுங்கோ... உண்மைதானே..

திலீபனும் நல்லாப் படிச்ச பிள்ளை. நல்ல கெட்டிக்காரன். அற்வான்ஸ் லெவல் பாஸ் பண்ணி.. கம்பசுக்கு தெரிவான பிள்ளை.. ஆனால் நாட்டு நிலைமை மனசு தாங்கேல்லை. இனிமையான காதல் கனவுகளோட சைக்கிளில கால் நோக பெடல் மிதிச்சு காதல் வலை விரிச்சு.. அழகில் சொக்கிச் கிறுங்கும் இளம் பருவத்தில்... நாட்டுக்காய் வெம்பிக் களம்போன வீரப்புலி திலீபன். இந்திய ஆமி வந்ததுதானே... வந்திட்டுது. சனம் எல்லாம் வாய் பிளந்து வரலாற்றை மறந்து.. வரும் ஆபத்தை மறந்து.. கிறுங்கிப் போயிருந்த நேரத்திலை..

எதிர்காலத் தீங்கை எண்ணி மனம் நொந்து.. கண்ணீரும் செந்நீரும் சிந்தி வளர்த்த விடுதலைப் பயிரை காக்க திருவுளம் கொண்டு.. அந்த வரலாறு.. தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டது.

உண்ணா விரதம் இருந்து போராடப்போறன். சனத்தை மீட்கப் போறன். விடுதலைப்போராட்டத்தைக் காக்கப் போறன். முக மூடியைக் கிழிக்கப் போறன். அடம் பிடித்தது அந்த வரலாறு. உண்ணா விரதம் எண்டு சொன்னால்.. உடன ஞாபகத்துக்கு வாறது.. காலைத் தேத்தண்ணியோட வந்தமர்ந்து.. மாலைக் குளிர் பானத்தோட போராட்டத்தை முடிக்கிறதெண்டது. ஆனால் இது அப்பிடியில்லை. எதிரிக்கெதிராக துப்பாக்கி தூக்கேக்க இருந்த மன அழுத்தம் இதிலும். எந் நேரமும் சாவு வரலாம். ஆனால வரிந்த கொள்கையில் இருந்து வழுவக் கூடாது என்ற வெறி.. எவ்வளவு நெஞ்சழுத்தம் வேணும் தனக்கில்லாமல் பிறருக்காக. இந்த மக்களுக்காக அழுந்தி அழுந்திச் சாக ஒரு இளைஞன் சந்தோசமாக விடாப்பிடியாக முன்வருகின்றான் என்டால். மக்கள் மீது அவன் கொண்ட பாசம் நேசம் எவ்வளவு இருக்க வேணும். போராட்டத்தின் மீது இருந்த மாக மறுவற்ற பிடிப்பு எத்துணை பெரியது என்பதற்கு.. ஒவ்வொரு மணித்துளியும் ஏற்படுத்திய இறுக்கமே சான்று. எல்லாரும் யோசிக்க வேண்டிய விசயம்.. எங்கட குழந்தையளுக்கு போதிக்க வேண்டிய விசயம்.. சந்ததி சந்ததியாய் எம்மில் பாதுகாக்க வேண்டிய பொக்கிச நினைவு.

இந்த புனிதத்தை எண்ணிப் பார்க்க மறுப்பவன்.. மனிசனாய் இருக்க முடியாது. அதிலும் தமிழனாய் இருக்க முடியாது. சுயத்தை இழந்த பரதேசியாய் இருக்க வேணும். தாயை மறந்த தற்குறியாய் இருக்க வேணும்.

**சடையர்**

உனக்காக உன் குழந்தைகளுக்காக.. உன் சுதந்திரமான வாழ்வுக்காக.. உன் உரிமைக்காக உன் மொழிக்காக உன் சந்தோசத்துக்காக.. அந்த இனிமையான சுபாவம் மெல்ல மெல்லக் கரைந்து போனதே.. நினைத்தால் நெஞ்சில் ஈரம் துளிர் விட்டால்.. நீ மனிதன் எனத் துணிந்து உரைத்துக்கொள். கண் கலங்கி.. மெய் உருக நீ சம்மதம் என்றால்.. நீ தமிழனே சந்தேகமில்லாமல் சந்தோசப்படு. நன்றி மறவாத மானிடப் பிறப்பில் நீயும் ஒரு அங்கம் என துணிந்து உரிமை பாராட்டிக்கொள்ளலாம்.

அந்த அற்புதமான தியாகியின் புகழ் வாழட்டும் வளரட்டும்.

மேலைத் தேசத்தில்.. இயந்திர வாழ் விறைட்டே.. வாழ்வின் இருப்பை இயக்கத்தை.. அதன் அடி நாதத்தை தொலைத்து நிற்கும் எம்மவரே... இந்த அன்பின் இழை. இந்த அர்ப்பணிப்பின் இழை. தற்கொடையின் இழையால் உறவுகளைக் கட்டிப் போடுங்கள். நாளை மலரும் எங்கள் சுதந்திர தேசத்தில்.. உங்கள் எதிர் காலச் செல்வங்களும் வாழ வேண்டும் என்றால். அந்த அன்புறவின் சாரல்களில் அவை நிச்சயமாய் நனைந்திருக்க வேணும். வெள்ளைக்காரன் பிள்ளைகளாய்.. மாற்றுக் குணங்குறியனோடு.. அந்த புனித மண்ணை தரிசிக்க எங்கள் குழந்தைகளுக்கு உரிமையில்லாமல் செய்து விடாதீர்கள்.

அந்த உரிமையை குழந்தைகளின் மனங்களில் தெளித்துவிடுங்கள். திக்குத் தெரியாத காட்டில் யாருமற்ற அனாதைகளாய் உங்கள் குழந்தைகளை விட்டு விட்டு... காலத்தின் அழைப்பில் கண்மூடிப் போவது எத்துணை பெரிய துரோகம். உங்களுக்கும்... எங்களுக்கும்... எங்கள் குழந்தைகளுக்கும்.. சுதந்திரமான நாடு உண்டு. அங்கு அற்புதமான மனித உறவுகளைக் கொண்ட அன்புப் பின்னல் உண்டு. அந்த அற்புதத்தை அனுபவிக்கலாம். அதற்கான உரிமை எமக்கு உண்டா? அதை நாம் தான் தீர்மானிக்க வேண்டும். எமது ஈடுபாடு தான் அதைத் தீர்மானிக்கும். எங்களது செயற்பாடுதான் அதைத் தீர்மானிக்கும். வேண்டாத விருந்தாளியாய் நாம் மாற வேண்டாம். எங்கள் மண் எங்களை.. எங்கள் குழந்தைகளை கை நீட்டி அழைத்து அள்ளிக் கொள்ள வேண்டும்.

அப்ப நாங்கள் என்ன செய்ய வேணும்? ஒரு உணர்வு பூர்வமான போராட்டம் நடக்கிற.. அதி அற்புத தியாகம் செழிக்கிற பூமியில பிரதிநிதியள் எண்டேக்க.. நாங்கள்.. எவ்வளவு பொறுப்போட நடக்கவேணும். அந்த உணர்வில எப்பன் எண்டாலும் எங்களிலை இருக்க வேணாமோ? அதை விட்டிட்டு.. காவாலி கழிசடையளாகத் திரியேலுமே? தற்குறியளாய் காசு பண்ணிறதில மாத்திரம் கருத்தைச் செலுத்தேலுமே..? ஊத்தைக் குணங்களோட ஊதாரியாய் ஊர்வலம் வரேலுமே..?

யோசிச்சுப் பாருங்கோ..

தியாகி திலீபனின்ரை எழுச்சி வாரம் நடக்குது... இப்ப எண்டாலும் நாட்டுக்கு நல்லது செய்ய வேணும் எண்டு உறுதியெடுக்கலாம். காசைக் கரியாக்காமல்.. நாட்டுக்கு அனுப்பினால்.. நாலு சனங்கள் ஒரு நேரத்துக்கெண்டா

# நமக்காக ஒரு தென்றல் நின்று போனது; நாம் என்ன செய்தோம் ?

**சுதந்திர தேசத்தில்... உங்கள் எதிர் காலச் செல்வங்களும் வாழ வேண்டும் என்றால்.. அந்த அன்புறவின் சாரல்களில் அவை நிச்சயமாய் நனைந்திருக்க வேணும். வெள்ளைக்காரன் பிள்ளைகளாய்.. மாற்றுக் குணங்குறியனோடு.. அந்த புனித மண்ணை தரிசிக்க எங்கள் குழந்தைகளுக்கு உரிமையில்லாமல் செய்து விடாதீர்கள்.**

### ஓர் அலசல்

ஓயும் வயிறு குளிரச் சாப்பிடுங்கள் எண்டு நினைக்கத் தோன்ற வேணும். அல்லது போனா.. இப்பிடிச் சிலவழிக்கிறதில மிச்சம் பிடிச்சா.. தாய் தகப்பனை இழந்த குஞ்சுகளை வாழ வைக்கப் போடலாம் என்டு மனசு நினைக்க வேணும். மரங்களுக்குக் கீழயும்.. காட்டிலும் ரோட்டிலும் ஓண்டி வாழுகிற சனங்களுக்கு இப்பிடி மிச்சம் பிடிச்சனுப்பினால்.. சந்தோசமாக இருந்தெழும்ப ஒரு கொட்டில் கிடைக்கும் என்டு உள்ளம் உரைக்க வேணும்.

உள்ளம் மகிழச் சிரித்தபடி... வந்தமர்ந்து.. நமக்காக எரிந்த அந்த மெழுகு வர்த்தியின் நினைவோட... இப்பிடியா சிந்திக்க எமக்கு நாமே கட்டளையிடுவோமா?

**நான் மரணிப்பதால்..**
**மக்கள் எழுச்சி ஏற்படுமானால்**
**மக்களுக்கு விடிவு கிடைக்குமானால்**
**நான் மரணமடைவதையே விரும்புகின்றேன்.**

அவர் சொன்னது மாதிரி..
நாம் எழுச்சி கொள்வோமா..?


மேற்கு இலண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The BROADWAY,
Southall, Middx.
T.P: 0181 / 813 9126
(ADV)

லண்டன் மாநகரில்
ஸ்ரீ லட்சுமி என்ரபிறைசஸ்
கன்னியர் முதல் சிறுவர் வரை
முதல் தர புடவை மாளிகை
SREE LAKSHMI ENTERPRISES
IMPORTER & EXPORTER, WHOLESALER & RETAILER
Large Collection of Wedding Sarees, Silk Sarees & Barathanatya Costumes
50 THE BROADWAY, SOUTHALL,
MIDDLESEX, UB1 1QB
TEL: 0181-843 9495 / 01831-662 824
- FAX: 0181-606 9709
(ADV)

இலண்டனில் நகைத் தெரிவுகளுக்கு...
ராஜு பட்னி அன் சன்
PATTNI HOUSE
58-60 EALING ROAD WEMBLEY,
MIDDX HA0 4TQ
TEL: 0181-903 6677 / 2859,
0181-902 0577
FAX: 0181- 903 4887
(ADV)

# பெண் எரித்துக் கொலை; கணவன்- மாமனார், மாமியாருக்கு தூக்குத் தண்டனை

நகைக்காக ஒரு பிள்ளையின் தாயை எரித்துக் கொன்ற, கணவன், மாமனார், மாமியாருக்கு திருச்சி நீதிமன்றத்தில் மரணதண்டனை விதிக்கப்பட்டது.

பாலக்கரையில் படக்கடை நடத்திவந்த பாசித் (23) என்பவருக்கும், சென்னையைச் சேர்ந்த சர்புன்னிசா என்கிற ராசாத்திக்கும் இரண்டு வருடங்களுக்கு முன்னர் திருமணம் நடைபெற்று ஒரு பெண் குழந்தையும் உள்ளது.

பாசித்தின் பெற்றோர் வீடு ஒன்றை வாங்குவதற்காக சர்புன்னிசாவிடம் நகைகளை கழற்றித் தருமாறு கேட்டுள்ளனர். அதற்கு அவர் மறுத்துவிட்டார். கடந்த 21.09.95 அன்று சர்புன்னிசா திருச்சியிலுள்ள தனது பெற்றோரின் இல்லத்திற்கு சென்றிருந்தார். அங்கு சென்ற அவரது கணவர் பாசித் வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டார். மதியம் 1 மணியளவில் உசேன், சரிபாபி ஆகியோர் இருந்தார்கள். அப்போது மனைவியிடம் பாசித் நகைகளை கேட்டுள்ளார். அவர் நகைகளை கொடுக்க மறுக்கவே, பாசித், சர்புனிசா மீது மண்ணெண்ணையை ஊற்றி தீவைத்துள்ளார். பின் அவரும், அவரது பெற்றோரும் சேர்ந்து எரிந்து கொண்டிருந்த சர்புனிசாவை வீட்டுக்குள் வைத்துப் பூட்டிவிட்டு வெளியே சென்றுவிட்டனர். அவரது அலறல் சத்தம் கேட்டு அயலவர்கள் வீட்டின் ஓட்டை பிரித்து உள்ளே இறங்கி அவரைக் காப்பாற்றி அரச மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் ஐந்து தினங்களின் பின்னர் மரணமாகியுள்ளார்.

சர்புனிசாவின் மரணத்திற்கு அவரது கணவர் பாசித், மாமனார் உசேன், மாமியார் சரிபாபீ ஆகிய மூன்று பேர்தான் காரணம் என விசாரணையில் தெரியவந்ததைத் தொடர்ந்து அவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கு கடந்த வியாழக்கிழமை 12.09.96 விசாரணைக்கு வந்தபோது, விசாரணை முடிவில் இம் மூவருக்கும் தூக்குத் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

நீதிபதி தனது தீர்ப்பில், தாங்கள் நிரபராதிகள் என்றும், சர்புன்னிசா மரணத்திற்கு தாங்கள் பொறுப்பல்ல, மரணதண்டனை வேண்டாமென்று கூறினார்கள். இவ் மூன்று எதிரிகளும் எவ்வித இரக்கத்தையும் பெற அருகதையற்றவர்கள்.

தங்களை நம்பி வந்த பெண்ணின் வாழ்க்கையை அவர்கள் நாசப்படுத்தி விட்டார்கள். மாற்றுப் பெண் என்பதால் சர்புன்னிச்சாவை இவர்கள் மாய்த்து விட்டார்கள்.

ஒரு பெண் குழந்தையின் தாய் என்பதையும் பாராமல் அவரை எதிரிகள் கல்லறைக்கு அனுப்பிவிட்டார்கள். சொத்துக்களை வாங்க மருமகள், அவருடைய நகைகளை தர மறுக்கிறாள் என்ற ஒரே காரணத்திற்காக மாமனாரும், மாமியாரும், மகனை தூண்டிவிட்டு மருமகளை கொன்று விட்டார்கள்.

இப்படிப்பட்ட கொலையாளிகளை காப்பாற்ற கொலை செய்யப்பட்ட பெண்ணின் பெற்றோரும், சகோதரரும் முன் வந்தது இந் நீதிமன்றத்திற்கு வேதனை அளிக்கிறது.

மரண தண்டனையைத் தவிர இவ் வழக்கில் வேறு எந்த தண்டனையும் நினைத்து பார்க்க முடியவில்லை. மூன்றாவது எதிரி ஒரு பெண் என்றாலும் இவர் வேறொரு பெண்ணுக்கு இரக்கம் காட்டவில்லை என்பதால் அவருக்கும் மரணதண்டனை விதிக்க முடிவு செய்கிறேன். இது தான் நீதிக்கு உகந்ததாக அமையும் என நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

## விரைவில் டான்சி வழக்கு குற்றப்பத்திரிகை தாக்கல்?

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, அவரது தோழி சசிகலாவும் பங்குதாரராக உள்ள ஜெயா பப்பிளிக்கேசன் நிறுவனத்திற்கு, அரசுக்கு சொந்தமான டான்சி நிறுவன நிலத்தை வாங்கியதில் முறைகேடு நடந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் பத்து வாரத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதன் பேரில் இந்த வழக்கை விசாரித்துவரும் சி.பி.சி.ஐ.டி பொலிசார் தீவிரமாக குற்றப்பத்திரிகை தயாரித்து வருகிறார்கள். இது தொடர்பாக 60ற்கு மேற்பட்ட சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வருகிறார்கள்.

டான்சி நிறுவனத்தில் அதிகாரிகளாக இருந்த ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் சீனிவாசன், மத்யூஸ், குற்றாலிங்கம் ஆகியோர் பொலிசாரால் விசாரிக்கப் பட்டுள்ளனர்.

இந்த அதிகாரிகளின் வாக்குமூலத்தை பொலிசார் பதிவு செய்துள்ளனர். நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் பத்து வாரத்திற்குள் குற்றப்பத்திரிகை தாக்கலாகும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை கைது செய்ய தாமதம் ஏன்?

ஜெயலலிதாவை கைது செய்வதற்கு சி.பி.ஐ தாமதம் காட்டி வருவது ஏன்? என்பது குறித்து இந்தியப் பிரதமர் தேவகவுடாவுடன் மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம், மற்றும் என்.ஆர். பாலசுப்பிரமணியம் ஆலோசனை நடத்தியுள்ளார்கள்.

ஜெயலலிதா மீதான லஞ்ச ஊழல் புகார்கள் மீது சி.பி.ஐ வேகமாக நடவடிக்கை எடுக்கும் என்று தி.மு.கவும், த.மா.கா.வும் எதிர்பார்த்தன. ஆனால் அப்படி நடக்கவில்லை. இதனால் அவ்விரு கட்சிகளும் ஏமாற்றத்திற்கு உள்ளாகி உள்ளன.

மன்மோகன்சிங் நிதி அமைச்சராக இருந்தபோது பல சலுகைகளை வழங்கினார். வெளிநாட்டில் இருந்து பெறும் பரிசுப் பொருட்கள் தொடர்பாக கேள்வி கேட்கப்பட மாட்டாது என்பது முக்கிய சலுகை ஆகும். இந்தத் திட்டத்தில் அரசு பணியாளர்களுக்கு விலக்கு அளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஜெயலலிதா முதல்வராக இருந்த போது 5 கோடி ரூபா வரை அவர் வெகுமதிகளை பெற்றதாகக் குற்றச் சாட்டு உள்ளது. ஒரு கோடி ரூபாவிற்கு அவர் அமெரிக்க டாலர்களை பெற்றுள்ளார். முதல்வராக இருந்த ஒருவர் இவ்வாறு கோடிக் கணக்கில் பரிசுப் பொருளை பெற்றது ஏற்கத்தக்கது அல்ல என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. தார்மீக ரீதியாக வேண்டுமானால் இது தவறாக இருக்கலாமே தவிர சட்டரீதியாக இது தவறு அல்ல என்ற வாதம் எடுத்துரைக்கப் பட்டுள்ளது. இதை அலட்சியப்படுத்திவிட முடியாது.

ஜெயலலிதா மீது நடவடிக்கை எடுக்க போதுமான ஆதாரங்கள் இல்லை என்று கூறப்படுகிறது. சி.பி.ஐ அதிகாரிகளே இவ்வாறு கூறியுள்ளனர். பிரதமரிடம் சி.பி.ஐ இயக்குனர் இதைத் தெரிவித்துள்ளார். இதனாலேயே ஜெயலலிதாமீது நடவடிக்கை எடுக்க தேவகவுடா தயக்கம் காட்டுவதாகவும் சொல்லப் படுகிறது.

## உத்தர பிரதேச தேர்தலுக்குப் பின் காங்கிரஸ் காரியகமிட்டி கூட்டம்

உத்தரப்பிரதேச சட்டசபை தேர்தலுக்குப் பின்னர் இந்திரா காங்கிரஸ் கட்சியின் காரியக் கமிட்டிக் கூட்டம் கூட்டப்படும் என நரசிம்மராவ் அறிவித்துள்ளார்.

அதிருப்தியாளர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததின் விளைவாக நரசிம்மராவ் தனது பிடிவாதத்தை கைவிட்டு காரியக் கமிட்டிக் கூட்டதைக் கூட்ட ஒப்புக் கொண்டுள்ளார்.

அதிருப்தியாளர்கள் 15 நாட்களுக்குள் காரியக் கமிட்டிக் கூட்டத்தை கூட்டாவிட்டால் தாம் போட்டி மகாநாடு நடத்துவோம் என கருணாகரன் எச்சரித்ததைத் தொடர்ந்தே நரசிம்மராவ் இவ்வாறு அறிவித்துள்ளார்.

## சந்திரலேகாவை எல்லோரும் ஆதரிக்கவேண்டும்

**- சுப்பிரமணியசாமி -**

மு.க. ஸ்டாலினை எதிர்த்து பொது வேட்பாளராக சந்திரலேகாவை எல்லாக் கட்சிகளும் ஆதரிக்க வேண்டும் என்று சுப்பிரமணியசாமி அறிக்கை மூலம் கேட்டுள்ளார்.

சென்னை மாநகராட்சி மேயர் பதவிக்கு 16 பேர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

தி.மு.க சார்பில் மு.க.ஸ்டாலினும், அ.தி.மு.க சார்பில் டி. ஜெயக்குமாரும், ம.தி.மு.க சார்பில் எஸ்.எஸ்.சந்திரனும், இந்திரா காங்கிரஸ் ஜனதா கூட்டணி சார்பில் சந்திரலேகாவும் போட்டியிடுகிறார்.





சந்திரலேகா மீது அசிட் வீசியதாக அ.தி.மு.க. மீது சுப்பிரமணியசாமியால் வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளது தெரிந்ததே. கடந்த வெள்ளிக்கிழமை 13.09.96 அன்று அ.தி.மு.க. கட்சியின் சென்னை மேயர் வேட்பாளர் டி.ஜெயக்குமார் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் தமது கட்சி சந்திரலேகாவிற்கு ஆதரவு அளிக்கும் எனத் தெரிவித்திருந்தார். அதேதினம் அ.தி.மு.க பொதுச் செயளாளர் ஜெயலலிதாவும் தனது அறிக்கையில் அ.தி.மு.க சந்திரலேகாவிற்கு ஆதரவு வழங்கும் எனத் தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதாவின் இவ் அறிவிப்பானது அ.தி.மு.க பிளவுபட்டுள்ள நிலையில் தமக்கு வெற்றி வாய்ப்பு கிடைப்பது கடினம் என்ற காரணத்தாலும், சந்திரலேகாவிற்கு ஆதரவளிப்பதன மூலம் சுப்பிரமணியசாமி தொடுத்துள்ள வழக்கிலிருந்து தப்புவதற்காகவும் எனவும் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

## மதுரை மீனாட்சி கோவில் குண்டு வெடிப்பு தொடர்பாக அ.தி.மு.க பிரமுகர் கைது

நான்கு மாதங்களுக்கு முன்னதாக மதுரை மீனாட்சி கோவிலில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு தொடர்பாக அ.தி. மு.க. பிரமுகர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப் பட்டு வருகிறார்.

இந்த வழக்கு தற்போது சி.பி.ஐ பொறுப்பேற்று விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. இவ் வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்ட வெங்கடேஷ் என்பவரை சி.பி. ஐ. விசாரித்ததில் பல முக்கிய பிரமுகர்களுக்கும் இக் குண்டு வெடிப்புக்கும் தொடர்புள்ளது தெரியவந்துள்ளது.

இதைத் தொடர்ந்து திமுர் நகரைச் சேர்ந்த 32 வது வட்ட அ.தி.மு.க செயலாளர் செந்தில் கைது செய்யப்பட்டு சி.பி.ஐ. யால் விசாரிக்கப்பட்டு வருகிறார்.

இவர் முன்பு மதுரை வட்டார போக்குவரத்து அலுவலக திறப்புவிழாவின் போது அப்போதைய அமைச்சர் செங்கோட்டையன் கலந்து கொள்ள வந்த போது அவரது காரை முந்திச் சென்ற ஆத்திரத்தில் கட்டப்பொம்மன் போக்குவரத்துக் கழக பஸ் டிரைவரை கத்தியால் வெட்டியவர். இது தொடர்பான வழக்கில் பஸ்டிரைவர் கேட்டுக் கொண்டதின் பேரில் இவர் மீது பொலிசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அடுத்தடுத்து இக் குண்டு வெடிப்பு சம்பவத்தின் ஆதாரங்கள் சிக்கிவருவதால் முக்கிய அரசியல் பெரும் புள்ளியும் இன்னும் ஓரிரு வாரத்தில் கைது செய்யப்படுவார் என பிறிதொரு செய்தி தெரிவிக்கின்றது.

# காங்கிரஸ் மாநாட்டை 15 நாட்களுக்குள் கூட்டாவிட்டால் போட்டி மாநாடு நடத்துவோம்

## நரசிம்மராவுக்கு கருணாகரன் எச்சரிக்கை

15 நாட்களுக்குள் காங்கிரஸ் மாநாட்டை கூட்டாவிட்டால் போட்டி மாநாடு நடத்துவோம் என காங்கிரஸ் கட்சித் தலைவர் நரசிம்மராவுக்கு கருணாகரன் திடீர் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி மாநாட்டை 15 நாட்களுக்குள் கூட்டவேண்டும் என்று காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினர்கள் கருணாகரன், சரத்பவார், ராஜேஸ்பைலட், குலாம்நபி ஆசாத், பால்ராம் ஜாக்கர், அகமது பட்டேல் ஆகியோர் காங்கிரஸ் கட்சித் தலைவர் நரசிம்மராவுக்கு கடிதம் எழுதியுள்ளனர். இதற்காக கையெழுத்து சேகரிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

காங்கிரஸ் மாநாட்டை எப்போதுகூட்ட வேண்டும் என்று நரசிம்மராவ்தான் முடிவுசெய்ய வேண்டும். இது குறித்து மேற்கொண்டு கருத்துச் சொல்ல விரும்பவில்லை என்று காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் வி. என். காட்கில் தெரிவித்துள்ளார்.



காங்கிரஸ் மாநாடு உடனடியாக கூட்டப்பட மாட்டாது என்று தெரியவருகிறது. உத்தரப் பிரதேச சட்டசபைத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. காங்கிரஸ் உறுப்பினர் சேர்க்கை, கட்சித் தேர்தல் ஆகியவற்றிலும் கவனம் செலுத்த வேண்டி இருப்பதால் காங்கிரஸ் மாநாட்டை உடனடியாகக் கூட்ட முடியாது என்று நரசிம்மராவ் ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து பத்திரிகையாளரிடம் பேசிய கேரள முன்னாள் முதல்வரும் காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினருமான கருணாகரன், டெல்லியில், 15 நாட்களுக்குள் காங்கிரஸ் மாநாட்டைக் கூட்ட வேண்டும் என்று கட்சித் தலைவர்கள் நரசிம்மராவை வற்புறுத்தியுள்ளோம். ஆனால் அவர் பதிலளிக்கவில்லை. அவர் எந்த நடவடிக்கையும் எடுக்காவிட்டால் நாங்களே காங்கிரஸ் மாநாட்டைக் கூட்டுவோம்.

காங்கிரஸ் தலைவர் இல்லாமலேயே காங்கிரஸ் மாநாடு கூட்டப்பட்டுள்ளது என்பதற்கு கடந்த காலத்தில் பல உதாரங்கள் உள்ளன. நானும்கூட இத்தகைய மாநாடு ஒன்றுக்கு தலைமை தாங்கியுள்ளேன்.

ஒற்றுமை மற்றும் ஊழல் ஒழிப்பே முக்கிய குறிக்கோள். காங்கிரஸ் மாநாட்டுக்கு அகில இந்திய காங்கிரஸ் உறுப்பினர்கள் 800 பேரும் வருவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. பெரும்பான்மையான உறுப்பினர்கள் வந்தாலே போதுமானது.

காங்கிரஸ் கட்சி பிளவுபடாது. அதற்கான சாத்தியமில்லை வேண்டுமானால் ஒரு சிலர் கட்சியைவிட்டு வெளியேறலாம்.

நரசிம்மராவ் விலகினால் ஏ.கே.அந்தோணி தலைவராவார் என்பது முழுக்க முழுக்க உண்மையல்ல. பரிசிலனை செய்யப்படும் தலைவர்களின் பெயர்களில் அவர் பெயரும் உள்ளது அவ்வளவுதான் என அவர் தெரிவித்துள்ளார்.

# அமிதாப்பச்சனுக்கு 30 அடி நிர்வாண கட்அவுட் வைப்போம் - கன்னடர்சங்கம்

உலக அழகுராணிப்போட்டி நடத்தினால் அமிர்தாப்பச்சனுக்கு 30 அடி உயர நிர்வாண கட்அவுட் வைப்போம் என கன்னடர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. பெங்களூரில் உலக அழகுராணிப் போட்டியை நடத்துவது என்று நடிகர்



அமிதாப்பச்சனுக்குச் சொந்தமான அமிதாப்பச்சன் காப்பரேஷன் அறிவித்திருந்தது. இதற்கு கர்நாடக மாநிலத்தில் பரவலாக எதிர்ப்புக்கிளம்பியுள்ளது.

இது தொடர்பாக கன்னடசாளு வாலி கட்சித் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில், நவம்பர் 3ம் திகதி உலக அழகுராணிப் போட்டியை நடத்துவது என அமிதாப்பச்சன் காப்பரேஷன் அறிவித்துள்ளது. மேலை நாட்டுக் கலாச்சாரத்தை பரப்பும் இந்த போட்டி நடப்பது அறிந்து கன்னட மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இந்து மதத்தின் பாதுகாவலர் பால்தக்கரே இப்படி ஒரு அழகுராணிப் போட்டியை பம்பாயில் அமிதாப்பச்சன் நடத்த அனுமதிப்பாரா?

அரை நிர்வாண அழகிகளைக் கொண்டு உலக அழகுராணிப் போட்டியை நடத்தினால், அமிதாப்பச்சனின் 30 அடி உயரமுள்ள முழு நிர்வாண கட் அவுட்டுக்களை பெங்களூரின் முக்கிய வீதிகளில் எல்லாம் வைப்பது என்று முடிவு செய்துள்ளோம்.

உலக அழகுராணிப் போட்டி நடத்துவது தொடர்பான அறிவிப்பை வெளியிட்ட அரசாங்க அலுவலகத்தை பயன்படுத்த அமிதாப்பச்சனுக்கு கர்நாடக முதல்வர் ஜேஎச். பட்டேல் அனுமதி அளித்திருக்கிறார். இது போல வேறு தனியார் நிறுவனங்களுக்கு அவர் அனுமதியளிப்பாரா என அறிய விரும்புகிறேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

பெங்களூரில் அழகுராணிப் போட்டி நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மகளிர் அமைப்பு ஒன்றினால் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம் மனு விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்படுமா என்பது தொடர்பாக இன்னும் அறிவிக்கப்படவில்லை.

# பாரதீய ஜனதாவில்

## புதிய குழப்பம்

பாரதீய ஜனதா கட்சி சமீபகாலமாக பல்வேறு சிக்கல்களில் சிக்கித் தவித்துவருகிறது. ஹவாலா மோசடிக் குற்றச்சாட்டு, குஜராத் நெருக்கடி, கோஷ்டிப் பூசல்கள் என்று



பல்வேறு பிரச்சினைகள் தோன்றினாலும் தற்போது புதிய பிரச்சினை தோன்றியுள்ளது.

கட்சித்தலைவர் அத்வானியின் பதவிக்காலம் அடுத்த வருடத் துவக்கத்தில் முடிவடைகிறது. கட்சி அமைப்புச் சட்டப்படி ஒருவர் 2 முறைக்குமேல் தலைவர்பதவி வகிக்க முடியாது. அத்வானிக்கு அது இரண்டாவது முறையாகும். அவருக்கு அடுத்தபடியாக யாரைக் கட்சித் தலைவராக்குவது என்பதில் சிக்கல் தோன்றியுள்ளது.

முரளி மனோகர் ஜோஷிக்கு தலைவர் பதவி கொடுக்கலாம் என்றால், அதில் பாரத ஜனதாத் தலைவர்களுக்கு விருப்பம் இல்லை. முன்பு அவர் தலைவராக இருந்தபோது கட்சி சீரழிந்தது என்று குற்றம்சாட்டுகிறார்கள். ஆர்.எஸ்.எஸ். இயக்க பொதுச் செயலாளர் ரஜீந்தா சிங், முரளிமனோகர் ஜோஷி நியமனத்திற்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்.

வாஜ்பாயை தலைவராக்குவதிலும் கருத்துவேறுபாடு நிலவுகிறது. எல்லாவற்றிற்கும் அவரைத்தான் நம்பி இருக்கவேண்டி உள்ளது என்ற மற்றவர்களின் குற்றச்சாட்டும் இதற்கு காரணம்.



தற்போது கோவிந்தாச்சார்யா, பிரமோத்மகாஜன், கல்யாண்சிங் ஆகியோரது பெயர்கள் அடிபடுகின்றன. இவர்களில் கோவிந்தாச்சார்யா அனுபவம் மிக்கவர். உத்தரபிரதேச தேர்தலின் முடிவினைப் பொறுத்து அவர் தலைவராக்கப்படலாம்.

# கிராம நாட்டாமை பெற்றோல் ஊற்றிக் கொலை

கும்பகோணத்தை அடுத்த திருப்பனந்தாள் அருகே உள்ள விசுவநாதபுரம் கிராமத்தில நாட்டாமையாக இருந்தவர் சாமிநாதபடையாச்சி (வயது 57).

கிராமத்தில் கலிய மூர்த்தியின் மகன் முருகேசன் (21) என்ற ரவுடி திருட்டு மற்றும் அடிதடிகளில் ஈடுபட்டு வந்ததால் ஊர்பஞ்சாயத்தை கூட்டி அவனைக் கண்டிக்குமாறு மக்கள் நாட்டாமை சாமிநாதனிடம் முறையிட்டனர். அதைத் தொடர்ந்து ஊர்ப் பஞ்சாயத்து கூட்டப்பட்டது. ரவுடி முருகேசனை எச்சரித்த நாட்டாமை அபராதத் தொகை விதித்துத் தீர்ப்புக் கூறினார்.

இதனால் மனமுடைந்த ரவுடி முருகேசனின் அப்பா, அம்மா, தங்கை ஆகியோர் அவமானம் தாங்காமல் தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொண்டனர். இதனால் ஆத்திரமடைந்த ரவுடி முருகேசன் நாட்டாமையை பெற்றோல் ஊற்றி எரித்து கொன்றுள்ளான்.

ORIENT TEXTILIEN & SCHMUCK

KOENIGSWALL 16 (AM FBF), 44137 DORTMUND - TEL: 0231-162377 - FAX: 49-231-147836

* ஜேர்மனியில் தங்க நகைகளின் தரத்திற்கும், தேர்விற்கும் தனிச் சிறப்பு பெற்ற ஸ்தாபனம்! சிங்கப்பூர் விலையில் S D 158,
* ஆடைகளின் நிரந்தர மலிவு விலைகள்: பனாறிஸ் சாறி 79; மைசூர் சில்க் 85; பட்டபிளை சாறி 25; குப்தா சாறி DM25;
பஞ்சாபி DM 26; பட்டுவேட்டி DM 35, * கன, தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள் , * புத்தம் புதிய டிசைன்களில் அலங்கார
ஆபரணங்கள், பரதநாட்டிய ஆபரண செட் ab DM 119, * உங்கள் பழைய பவுணிற்கு குறைந்த கூலியில் உடனடியாகவே புதிய
நகைகள் மாற்றிப் பெறுவதற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்!

தரம்! உத்தரவாதம்!! அதிக தேர்வு!!! மலிவு!!!!

தரமான பொருட்களை தரமற்ற பொருட்களுடன் ஒப்பிடாதீர்கள்

# முன்னாள் அமைச்சர் முத்துச்சாமி வீட்டில் லஞ்ச ஒழிப்பு பொலிசாரால் நகை, பணம் பறிமுதல்

முன்னாள் அமைச்சர் முத்துச்சாமி வீட்டில் ரூபா ஒரு கோடி பெறுமதியான நகைகள், பணம் பறிமுதல் செய்யப்பட்டன. 100 கோடிக்கு சொத்துச் சேர்த்திருப்பது விசாரணையில் தெரிய வந்திருக்கிறது.

அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில் நடந்த லஞ்ச ஊழல் குறித்து அடுக்கடுக்கான புகார்கள் வந்ததைத் தொடர்ந்து லஞ்ச ஒழிப்புப் பொலிசார் அதிரடி வேட்டை நடத்தி வருகின்றனர்.

முன்னாள் அமைச்சர்கள் பலர் மீது இவ்விதமான சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பல கோடி ரூபா பணம், பொருட்கள் கைப்பற்றப்பட்டது தெரிந்ததே.

கடந்தவாரம் முன்னாள் அமைச்சர்கள் முத்துச்சாமி, அரங்கநாயகம், செங்கோட்டையன் வீடுகளில் சோதனை நடந்தது.

சென்னையில் 9 இடங்களிலும், கோவையில் 6 இடங்களிலும், பெரியார் மாவட்டத்தில் 19 இடங்களிலும், சேலம் மாவட்டத்தில் 3 இடங்களுமாக ஒரே நேரத்தில் 37 இடங்களில் சோதனை நடந்தது.

முத்துச்சாமியின் கீழ்ப்பாக்கம் லேண்டன்ஸ் ரோடு வீட்டுக்கு பிரதிப் பொலிஸ் சுப்பிரெண்டன் தலைமையில் 10 பேர் அடங்கிய குழுவினர் காலை 9.00 மணி தொடக்கம் இரவு வரை சோதனை நடத்தினர். இந்த வீட்டின் பெறுமதி 5 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

கீழ்ப்பாக்கம் ஈ.வெ.ரா. பெரியார் ரோட்டில் கிங்ஸ் பார்க் என்ற 8 மாடி ஹோட்டல் முத்துச் சாமியின் மனைவி, மைத்துனர் மற்றும் மகள் பெயரில் உள்ளது. இந்தக் ஹோட்டலிலும் சோதனை நடந்தது. இதன் பெறுமதி 15 கோடி. பல்வேறு வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்ட 1 கோடி 40 இலட்சம் ரூபாவிற்கான பாஸ்புத்தங்கள் கைப்பற்றப்பட்டன.

கிங்ஸ் பார்க் ஹோட்டல் அருகே உள்ள குமரன் மருத்துவமனை, பூந்தமல்லி வேலப்பன் சாவடியிலுள்ள கவிதா பல் மருத்துவமனை மற்றும் முத்துச்சாமியின் நெருங்கிய நண்பர்கள் நால்வரின் வீட்டில் சோதனை நடந்தது. குமரன் மருத்துவமனையின் பெறுமதி ஒரு கோடி.

இந்தச் சோதனைகளில் பணம், நகைகள் தவிர ஏராளமான ஆவணங்களும் சிக்கின. முத்துச்சாமிக்கு மொத்தம் 100 கோடி ரூபாவிற்கு சொத்து உள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை முன்னாள் அமைச்சர் பொன்னுச்சாமி வங்கியில் வைத்திருந்த லாக்கரை லஞ்சப் பொலிசார் திறந்து பார்த்த போது தங்கம், வைர நகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவற்றின் பெறுமதி 2 கோடி இருக்கும் எனக் கூறப்படுகிறது.

# ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் காட்டில் மழை

தற்போது கர்நாடக மாநில ஐ.ஏ.எஸ்.அதிகாரிகள் காட்டில் மழைபெய்த வருகிறது. கர்நாடகத்தை சேர்ந்த ஐ.ஏ.எஸ் அதிகாரி சிரஞ்சீவ் சிங் முதல் அமைச்சர்களுடன் நல்லுறவு வைத்திருந்தார். ஹெக்டே, பொம்மை ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார்.

பொம்மை மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சரானதும், சிரஞ்சீவ் சிங்கை யுனெஸ்கோ அமைப்பின் நிரந்தர பிரதிநிதியாக நியமிக்க வேண்டும் என்று சிபார்சு செய்தார்.

ஐ.எப்.எஸ் (இந்திய அயல் நாட்டு சேவை) அதிகாரிகள் மட்டுமே இந்தப் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டு வந்தனர். பல்வேறு ஐ.எப்.எஸ் அதிகாரிகள் இந்தப் பதவியின் மீது கண் வைத்து இருந்தனர். வெளியுறவுச் செயலக செய்தி தொடர்பாளர் ஒருவர் இந்தப் பதவி மீது ஆசை வைத்திருந்தார். சிரஞ்சீவ் சிங் பெயர் இந்த பதவிக்கு அடிபட்டதும், அதிர்ச்சி அடைந்தார் திவாரி காங்கிரஸ் தலைவர் அர்ஜுன்சிங்கிடம் போய் முறையிட்டார்.

தற்போது அதிகார வர்த்தகத்தினர் மத்தியில் ஒரு மர்ம சுற்றறிக்கை சுற்றிவருகிறது. அதில் சிரஞ்சீவ் சிங் இந்தப் பதவிக்கு லாயக்கற்றவர் என்று குறிப்பிடப்பட்டு உள்ளது. பொற்கோவிலுக்குள் இராணுவம் நுழைந்ததற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியவர் என்று அந்த அறிக்கை குற்றஞ்சாட்டியது.

ஆனால், சிரஞ்சீவ் சிங்கின் நியமன பைல் பிரதமர் தேவ கௌடாவிடம் சென்ற போது அவர் உடனடியாக அவரது நியமனத்தை உறுதிப்படுத்தினார். சிரஞ்சீவ் சிங்கிற்கு எதிரான பிரசாரம் தேவகௌடாவிடம் எடுபடவில்லை. ஐ.எப்.எஸ் அதிகாரிகளுக்கு ஒரு முக்கிய பதவி பறிபோனதுதான் மிச்சம்.

# ரூபா 100 கோடிக்கு மேல் ஊழல் செய்த நிதிநிறுவன அதிபர் குடும்பத்துடன் கைது

100 கோடி ரூபாவிற்கு மேற்பட்ட பணத்தை நிதி நிறுவனத்திற்கு சேகரித்துவிட்டு தலைமறைவான சிநேகம் நிதிநிறுவன அதிபர் அரவிந்த், அவரது மனைவி மற்றும் உறவினர்கள், நிறுவன ஊழியர்கள் 11 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இந நிதி நிறுவனம் மோசடி செய்ததாக புகார்கள் வந்ததைத் தொடர்ந்து சிநேகம் நிதி நிறுவன கிளைகள் மூடப்பட்டன. இந்நிறுவனத்தின் அதிபர் குடும்பத்துடன் தலைமறைவாகினார். இவரைக் கண்டுபிடிக்க தனிப் பொலிஸ்படை அமைக்கப்பட்டது. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் நிதிநிறுவனத்தில் பணிபுரிந்த மனேஜர்கள் மரியதாஸ், சத்தியமூர்த்தி, திருமாறன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து கோவை சிங்கநல்லூரில் மில் மனேஜர் பாஸ்கரன் வீட்டில் நடத்திய சோதனைக்குப் பின்னர் அரவிந்த் எங்கிருக்கிறார் என்ற தகவல் பொலிசாருக்குக் கிடைத்தது. அதைத் தொடர்ந்து அரவிந்த் குடும்பத்துடன் மைசூரில் வைத்து கைது செய்யப்பட்டார்.

பின்னர் இவர்கள் சென்னைக்கு கொண்டுவரப்பட்டனர். பொலிஸ் வாகனத்திலிருந்து இறங்கிய அனைவரும் தங்கள் முகங்களை மறைத்த வண்ணம் சென்றனர்.

இம் மோசடிக் கும்பலைக் கைது செய்ய உதவி புரிந்த அனைத்து பொலிசாரையும், அதிகாரிகளையும் டி.ஜி.பி பாராட்டினார்.

இதேவேளை மேலும் இரண்டு மோசடி நிதி நிறுவனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவற்றின் அதிபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 'திருமகள்' நிதிநிறுவனத்தில் 2000 பேரிடமிருந்து மூன்று கோடி ரூபாவும், 'ஒமேகா' நிதி நிறுவனத்தில் 250 பேரிடமிருந்து 30 இலட்சம் ரூபாவும் மோசடி நடந்துள்ளது.

திருமகள் இயக்குனர் ராஜசேகரன் (47) மேலாளர் கோதண்டராமன் (22), கணக்காளர் (24) மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒமேகா நிர்வாக இயக்குனர் டாக்டர் பிரபு கைது செய்யப்பட்டுள்ளார்.

# முன்னாள் அமைச்சர் சுக்ராம் பணம் குவித்தது எப்படி ?

முன்னாள் தொலைத் தொடர்பு அமைச்சர் சுக்ராம் வீட்டில் சி.பி.ஐ அதிகாரிகள் சோதனை நடத்தி கோடிக்கணக்கான ரூபாய் பணத்தை கைப்பற்றியது அறிந்ததே. பூஜை அறையில் பெட்டி பெட்டியாக இந்தப் பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. இந்தப் பணம் இவரது வீட்டிற்குள் எவ்வாறு வந்தது என அதிகாரிகள் திகைத்தார்கள். ஏனெனில் அமைச்சரின் வீட்டிற்குள் வருபவர்கள் பலத்த சோதனைக்கு உட்படுவார்கள். அவர்கள் கொண்டுவரும் பொருட்களை பாதுகாப்பு அதிகாரிகள் குறித்துக் கொள்வார்கள்.

ஆகவே பெட்டி, பெட்டியாக பணம் வந்தது எப்படி, அவ்வாறு பணத்தைக் கொண்டு வந்தது யார் என்பது குறித்து அவர்கள் விசாரணை நடத்தினார்கள். அப்போது பல சுவாரசியமான தகவல்களை வெளியிட்டனர்.

மந்திரியை பார்க்க வருபவர்கள் இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டு ஒரு பிரிவினர் முன்பக்க வாசல் வழியாகவும், மற்றப் பிரிவினர் சூட்கேஸ் அல்லது பத்திரிகைகளால் சுற்றப்பட்ட பார்சலை கொண்டு வருபவர்கள்; இவர்கள் வீட்டின் பின்புறமாக அழைக்கப்படுவார்கள். இவர்கள் சென்றதும் சுக்கிராமின் நம்பிக்கைக்குரிய ஒரு உதவியாளர் வெளியேவந்து பார்சலையோ, பெட்டியையோ வாங்கிக் கொண்டு அனுப்பிவிடுவார். இவை அனைத்தும் ஒருசில நிமிடங்களிலேயே முடிந்துவிடும். இது வேறு யாருக்கும் தெரியாது. சுக்ராம் வீட்டில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இதே போன்று தான் சம்பவங்கள் நடைபெறும்.

# பதவியை பயன்படுத்தி புத்தகங்களை விற்கும் சி.பி.ஐ இயக்குனர்

சி.பி.ஐ இயக்குனராக ஜோகிந்தர்சிங் நியமிக்கப்பட்டது விமர்சனங்களுக்கு உள்ளானபோதும், அவர் இந்தப் பதவியைப் பயன்படுத்தி தனது புத்தகங்களை விற்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார். இவர் இரண்டு புத்தகங்களை எழுதியுள்ளார்.

'சில சொல்லப்படாத கதைகள்' ,'வாழ்க்கையில் வெற்றி பெறவும் மகிழ்ச்சியாக வாழவும் வழிகள்' ஆகிய இரண்டு புத்தகங்களை அவர் எழுதியுள்ளார். சி.பி.ஐ இயக்குனராக அவர் பதவி ஏற்ற பின்னரே இப் புத்தகங்கள் வெளியிடப்பட்டன. பத்திரிகைகளில் தினந்தோறும் அவரது பெயர் வெளிவந்ததால் அவரது புத்தகங்களுக்கு தனி மதிப்பு கூடியது. தன்னைப் பார்க்கவரும் முக்கிய பிரமுகர்களுக்கு தானே கையெழுத்திட்ட புத்தகங்களை வழங்கி வருகிறார். அவரது முக்கியத்துவத்தை உணர்ந்த பெரிய நிறுவனங்கள் அவரது புத்தகங்களில் ஏராளமான பிரதிகள் கேட்டு பணம் கொடுத்துள்ளன.

எலக்றிசிற்றி, பைப் லைனிங், மாபிள் பதித்தல், பேப்பர் ஒட்டுதல், பெயின்ரிங், P.V.C யன்னல்கள் மற்றும் கட்டட வேலைகள், தச்சு வேலைகள் அனைத்திற்கும்,

பகீ என்ரபிறைஸ்

உங்கள் வீடுகளுக்கான இன்சூரன்ஸ், கடன் ஏற்பாடுகளுக்கு தேவையான Devis வழங்கப்படும்

Devis 200Frs - Deplacement 150Frs

புதிய தொலைபேசி இலக்கம்: 48 48 39 64 / 09.27.32.00

(ADV)

## இடைக்கால நிர்வாக சபை விடயம்

**நண்டார் பக்கம்**

# டக்ளஸ் முகத்தில் கரி பூசிய சந்திரிகா !

வடக்குக் கிழக்கு மாகாணத்திற்கான ஒரு ஒருங்கிணைப்புச் சபை அமைக்கப்பட்டு விட்டாயிற்று. வட கிழக்குப் பகுதிக்கு அல்லது குறைந்த பட்சம் வடக்குப் பகுதிக்கு ஒரு இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படும். அச் சபைக்குத் தலைவராக அல்லது ஒரு தற்காலிக முதல்வராக "முடி



சூடிக்கொள்ளலாம்" எனக் காத்திருந்த டக்ளசின் நிலை இலவு காத்த கிளியின் கதையாயிற்று.

வடக்குக்கு ஒரு இடைக்கால நிர்வாக சபை தேவையென்ற தனது வேண்டுகோள் நிறைவேற்றப்படும் எனபதில் ஒரு அசையாத நம்பிக்கை டக்ளஸ் தேவானந்தாவுக்கு இருந்திருக்க வேண்டும். தனது கையில் இருக்கும் 10 பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை சந்திரிகா உதாசீனம் செய்து விட முடியாது என்ற எண்ணமும் தேவானந்தாவுக்கு இருந்தது. அதனால் சந்திரிகாவுக்கு சற்று அழுத்தம் கொடுத்தால்: வடக்கு மாகாணத்துக்கு இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்பட்டு விடும் என்ற எண்ணமும் இருந்தது. அந்த நிர்வாக சபை தனது பொறுப்பில் தரப்படும் என்றே டக்ளஸ் கருதினார்.

ஆனால், கிணறு வெட்டப் பூதம் கிளம்பியதுபோல இடைக்கால நிர்வாக சபை என்ற கோரிக்கைக்கு பதிலாக ஒரு ஒருங்கிணைப்புச் சபையின் பணி வட கிழக்கு நிலைமை தொடர்பாக சந்திரிகாவுக்கு அறிக்கை சமர்ப்பிப்பது தான். இன்னொரு வகையில் கூறுவதாயின், இது எதுவுமேசெய்ய முடியாத வெற்றுச் சபை. இவ் வெற்றுச் சபையின தலைமைப் பதவி கூட டக்ளசுக்கு கிடைக்கவில்லை. அப்பதவி முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் அஸ்ரப் கையிலேயே போய்ச் சேர்ந்து கொண்டது. வடக்குக்கு இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படா விட்டாலும், அமைக்கப்பட்ட ஒருங்கிணைப்புச் சபைக்குத் தன்னை தலைவராக நியமிக்காது விட்டமை டக்ளசின் கோபத்தினைக் கிளறியுள்ளதாம்.

டக்ளஸ் ஏன் வடக்குக்கு ஒரு இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படுவதில் கவனம் செலுத்த வேண்டும்? அவ்வாறு நிர்வாக சபை அமைக்கப்படாது போனாலும், அமைக்கப்பட்ட ஒருங்கிணைப்புச் சபையின் தலைமைப் பதவி தன்னிடம் இருக்க வேண்டும் என்பதில் அக்கறை கொள்ளவேண்டும்?

இது. பதவி ஆசையின் வெளிப்பாடா? அல்லது இதற்கு வேறு ஏதாவது காரணங்கள் உண்டா?

டக்ளசைப் பொறுத்த வரையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை என்பதோ அல்லது அவர்களது அரசியல் அபிலாசைகள் என்பதோ எல்லாம் இரண்டாம் பட்சம்தான். ஸ்ரீலங்காவின் அரசியலில் தான் ஒரு குறிப்பிடத்தக்க புள்ளி என்ற நிலையினை அடைந்து விட்டார். ஏராளமான அரசியல் வாதிகளுடன் தொடர்பும் பழக்கமும் ஏற்பட்டு விட்டது. வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் தொடர்பும் ஏற்பட்டிருக்கின்றது. விருந்துபசாரங்கள் முதல் இரவு நடன கேளிக்கைகள் வரை எல்லாவற்றிலும் பங்கு கொண்டு, கொழும்பு நகர மேற்தட்டு அரசியல் வாதியாக அவர் வாழப் பழகிக் கொண்டார். சிங்கள பௌத்த மேலாதிக்கம் மிகுந்த கொழும்பு அரசியலில் தற்போது அவரும் ஒரு தமிழர் "பிரதிநிதி"

இந்த "தமிழர் பிரதிநிதி" வேடத்தினை அவரால் ஆட முடிவதற்கு முக்கியமானதொரு காரணம் யாழ் மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளில் ஒன்றினைத் தவிர மிகுதி அவர் கையில் இருப்பது தான். அப்பதவிகள், 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள் இருந்த யாழ் மாவட்டத்தில், வெறும் 10000 வாக்குகள் மூலம் தான் அப் பதவிகள் பெறப்பட்டவை என்பதோ, அப்பத்தாயிரம் வாக்குகளிலும் பெரும்பாலானவை டக்ளஸ் குழுவினராலேயே கள்ளமாகப் போடப்பட்டவை என்பதோ, சட்டத்தின் முன் 'மக்கள் பிரதிநிதிகள்' என்ற அந்தஸ்த்தை டக்ளஸ் குழுவினர் பெறுவதற்குத் தடையாக இருக்கவில்லை. இது 'ஜனநாயக முறை' மூலம் மக்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் தேர்தல் முறையின் ஒரு சோகம்.

தனது கையில் இருக்கும் பாராளுமன்றப் பதவிகள் பறி



போய்விடுமானால், கொழும்பு அரசியலில் தனது இடமும் மெல்ல மெல்லப் பறி போய் விடும் என்பது டக்ளஸ் தேவானந்தாவுக்கு நன்கு தெரியும். அதனால் அதற்கிடையில், தனது நிலையினைப் பலப்படுத்துவதற்குரிய முயற்சிகளை அவர் எடுத்து வருகின்றார். இந்த தனது நிலையினைப் பலப்படுத்தும் முயற்சியில் ஒரு அங்கமே வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்பட வேண்டும் எனவும் அச் சபைக்குத் தன்னைத் தலைவராக நியமிக்க வேண்டும் எனவும் சந்திரிகாவுக்கு டக்ளஸ் விடுத்த கோரிக்கை.

தற்போதைய பாராளுமன்றம் ஒரு பலவீனமான நிலையிலேயே உள்ளது. 225 பேரைக் கொண்ட பாராளுமன்றத்தில் 105 பேரே பொதுஜன ஐக்கிய முன்னணியிடம் உள்ளது. முஸ்லீம் காங்கிரசின் ஏழு இடங்களும், மலையக மக்கள் முன்னணியின் ஒரு இடமும் சேர்த்தே சாதாரண பெரும்பான்மையான 113 இடங்களை சந்திரிகா அரசு பெற்றுள்ளது.

**தனது கையில் இருக்கும் பாராளுமன்றப் பதவிகள் பறிபோய்விடுமானால், கொழும்பு அரசியலில் தனது இடமும் மெல்ல மெல்லப் பறி போய் விடும் என்பது டக்ளஸ் தேவானந்தாவுக்கு நன்கு தெரியும். அதனால் அதற்கிடையில், தனது நிலையினைப் பலப்படுத்துவதற்குரிய முயற்சிகளை அவர் எடுத்து வருகின்றார்**

பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் குழப்பம் உள்ள சூழலில், அரசுக்கு புற அழுத்தங்கள் உள்ள ஒரு சூழலில், இந்தப் பாராளுமன்றத்தின் ஆயுள் முழுமையாக ஆறு வருட காலத்திற்கு இருக்கும் என நம்ப டக்ளஸ் தயாராக இல்லை. இந்தப் பாராளுமன்றத்தின் ஆயுள் முடியும் போது டக்ளசின் பாராளுமன்றப் பதவிகள் அவரது கையினை விட்டுப் போய்விடும். இதுவும் தேவானந்தாவுக்கு நன்கு தெரியும். அவ்வாறு பாராளுமன்றப் பதவிகள் கையை விட்டுப் போய்விடின், தனது கொழும்பு அரசியல் வாழ்வில் "கௌரவம் போய் விடும்" என டக்ளஸ் அஞ்சுகிறார். முன்னைய பிரேமதாசா காலததில் தான் தொங்கி நின்றதனை விட, தான் மட்டுமல்ல தற்போது கொழும்பு அரசியல் வாதிகள் தன்னிலும் தொங்கி நிற்கும் சூழல் உருவாக்கக் கூடிய நிலை இருப்பது டக்ளசுக்கு மகிழ்வையே தருகின்றது. இதனால் அடுத்த பாராளுமன்றத் தேர்தலின போதும் தனது பாராளுமன்ற பதவிகளைத் தக்க வைத்துக் கொள்வது அவருக்கு முக்கியமாக இருக்கின்றது.

இத்தகைய ஒரு சூழலில் வடக்கிற்கான இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படின் யாழ் மாவட்ட மக்களைத் தனது செல்வாக்குக்கு உட்படுத்தும் முயற்சியினை ஆரம்பிக்கலாம் என டக்ளஸ் திட்டமிட்டிருந்தார். இராணுவ ஆக்கிரமிப்பின் போது மக்கள் படும் வேதனைகளைக் கண்டித்து குரல் எழுப்பி, மக்களுக்கு ஏற்படும் கஸ்டங்களைப் போக்குவதில் ஒரு சில நடவடிக்கைகளை எடுத்தால், இராணுவப் பிடியினுள் சிக்குண்டிருக்கும் மக்கள் மனதை கவரலாம் என்று டக்ளஸ் எண்ணியிருக்கலாம். இதனை விட யாழ் மாவட்டத்தின் நிர்வாகத்தினை தனது கட்டுப்பாட்டில்கொண்டு வரின், தேர்தல் என்று வரும் போது தான் வெற்றி பெறுவதற்குத் தேவையான "திருவிளையாடல்களையும்" திட்டமிட்டுச் செய்தல் இலகு என்று அவர்



கருதியிருக்கலாம். இதனால், வடக்குக்கு இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படுவதற்கும், அதற்குத் தான் தலைவராக நியமிக்கப்படுவதற்கும் டக்ளஸ் முக்கியத்துவம் வழங்கினார்.

**வடக்குப் பகுதிக்கு ஒரு இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படும். அச் சபைக்குத் தலைவராக அல்லது ஒரு தற்காலிக முதல்வராக "முடி சூடிக் கொள்ளலாம்" எனக் காத்திருந்த டக்ளசின் நிலை இலவு காத்த கிளியின் கதையாயிற்று**

ஆனால், இன்று டக்ளசின் திட்டங்கள் யாவுக்கும் சந்திரிகா பலத்த அடி வழங்கியுள்ளார். இன்னொரு வகையில் கூறுவதாயின், டக்ளசின் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக அவரின் முகத்தில் சந்திரிகா கரி பூசியுள்ளார். டக்ளஸ் மட்டுமல்ல எந்த தமிழ்க் குழுவையும், யாழ் குடாநாட்டுப் பகுதியில் காலூன்ற விடுவதற்கு சந்திரிகா தயாராக இல்லை. சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினைத் தமிழ் மக்கள் மீது திணித்து நீண்ட காலத்தில் அவர்களின் சுய அடையாளத்தினை சிதைத்து விடுவதில் அக்கறை கொண்டுள்ள சிங்கள இனவாதப் பூதம், அடிப்படையில, நீண்ட கால நோக்கில் எந்த தமிழரையும் நம்பத் தயாராக இல்லை.

மக்களுக்குத் எவ்வளவுக்கு துரோகம் செய்தாலும் பரவாயில்லை. தனது அரசியல் நலனே முக்கியமானது என்ற எண்ணத்தில் செயற்படும் டக்ளஸ் இறுதியில் தமிழ் மக்கள் மத்தியில் துரோகியாக மட்டுமல்ல கொழும்பு அரசியலிலும் அனாதரவாக நிற்கும் நிலை தோன்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# மதுரைக்கு வந்த ரோமாபுரி பிராமணர்கள்

35

யாழ்ப்பாணத்தில் தமது ஆட்சிக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழாதவாறு தடுப்பதற்காக ஒலிவேரா கையாண்ட கிறிஸ்தவ மதமாற்ற யுக்தி பெரும் பலனளித்தது. யாழ்ப்பாணப் பிரதானிகள், தமக்கு தமது இந்து மத நம்பிக்கையில் இருந்து விலகுவதற்கு விருப்பம் இல்லாவிட்டாலும், ஒலிவேராவினது கோபத்துக்கு ஆளாகமல் இருப்பதற்காக, 'இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன' கணக்கில் ஒப்புக்குத் தாங்களும் கிறிஸ்தவர்களாக நடித்து பதவிகளைப் பெற்றுக்கொண்டனர்.

இவ்வாறு அவர்களது எதிர்ப்பு, மதமாற்றத்தாலும், பதவிகள் வழங்கலாலும் முறியடிக்கப்பட்டாலும், தமிழ்நாட்டில் தஞ்சாவூரில் இருந்து அரசாண்ட மராட்டிய வம்சத்தைச் சேர்ந்த இந்து மன்னர்களால், அடிக்கடி தொல்லைகள் ஏற்பட்டது. அவர்கள் யாழ்ப்பாண பிரதானிகள் ஒலிவேரா பக்கம் சேர்ந்தவுடன் கண்டிய அரசர்களுக்கு படை உதவி செய்து போர்த்துக்கேயர்களுக்கு தொல்லை கொடுக்க ஆரம்பித்தனர்.

யாழ்ப்பாண முஸ்மாதிரியில் தமிழ்நாட்டில் மதமாற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களை விழுத்துவதற்கு போர்த்துக்கேயரால் முடியவில்லை. அவர்களுடைய மதமாற்றும் கரையோர மீனவக் கிராமங்களிலேயே நின்றுவிட்டது. தஞ்சை, திருச்சி, மதுரை, புதுக்கோட்டை போன்ற நகரங்களிலும் அவற்றைச் சுற்றியுள்ள விவசாயக் கிராமங்களிலும் பிராமணியக் கட்டுப்பாடுகள் மிக ஆழமாக இருந்தன. யாழ்ப்பாணத்தில் பிராமணர்கள் பெரிய ஆளுமையுள்ளவர்களாகவும், சமூகத்தைத் தங்கள் பிடியிலிருந்து விலகிச் செல்லாமல் காப்பாற்றி வைத்திருக்கக் கூடியவர்களாகவும் இருக்கவில்லை. யாழ்ப்பாணத்தில், வரலாற்றின் தொடக்க காலத்தில் தமிழர் மதமும், பிற்காலத்தில் தமிழ் பௌத்தமும், சமணமும் ஆளுமை பெற்றிருந்ததே அதற்குக் காரணமாகும். அதைவிட பிராமணர்கள் அநேகமாக தமிழ்நாட்டிலிருந்து வந்து குடியேறியவர்களாகவே இருந்தார்கள்.

தமிழ்நாட்டு நிலைமை அப்படி இருக்கவில்லை. அங்கு சங்க காலத்திற்கு முன்பே பிராமணியம் வந்து ஆழமாக வேரூன்றி விட்டதாலும் தமிழ்நாட்டு சமூக அமைப்பு அக் காலத்தில் மன்னனையும், நிலப்பிரபுக்களையும், கோவில் நிலத்தையும் சார்ந்தே இயங்கியதாலும் அவற்றை உடைப்பது முடியாத காரியமாக இருந்தது. ஆனால் மீனவக் கிராமங்கள் கடலை சார்ந்து இயங்கியதால் கடலை கட்டுப்பாட்டுக் கொண்டுவந்தவுடன் அந்த சமூக அமைப்பை போர்த்துக்கேயரால் வெல்ல முடிந்தது.

எனவே தமிழ் நாட்டின் உட்பிரதேசங்களுக்குள் ஊடுருவி மதமாற்ற வேலைகள் செய்வதற்கு அவர்கள் ஒரு புதிய தந்திரத்தைக் கையாண்டார்கள்.

> தமிழ்நாட்டின் உட்பிரதேசங்களுக்குள் ஊடுருவி மதமாற்ற வேலைகள் செய்வதற்கு அவர்கள் ஒரு புதிய தந்திரத்தைக் கையாண்டார்கள். அதாவது, தமது கிறிஸ்தவ தலைமைப் பீடமான வத்திக்கானிலிருந்து ரோமாபுரிப் பிராமணர்களை வரவழைத்தார்கள். இவ்வாறு ஒலிவேராவின் காலத்தில் மதுரைக்கு வந்த முதல் வெள்ளைக்கார பிராமணர், தத்துவபோத ஞான சுவாமி பின்பு வந்தவர் வீரமா முனிவர்

அதாவது, தமது கிறிஸ்தவ தலைமைப் பீடமான வத்திக்கானிலிருந்து ரோமாபுரிப் பிராமணர்களை வரவழைத்தார்கள் (உண்மையில் அவர்கள் பிராமணர்கள் கிடையாது. ஐரோப்பிய இனத்தவர்களான அவர்கள் மேல்தட்டு இந்து மதத்தினரைக் கவருவதற்காக தம்மை ரோம் நகரப் பிராமணர்களாகச் சொல்லிக் கொண்டார்கள்).

இவ்வாறு ஒலிவேராவின் காலத்தில் மதுரைக்கு வந்த முதல் வெள்ளைக்காரப் பிராமணர், தத்துவபோத ஞான சுவாமி (Robert de Nobilis) பின்பு வந்தவர் வீரமா முனிவர் (Father Beschi). இந்த இருவரும், மதுரைக்கு வந்ததும் முதல் வேலையாக பூணூல் அணிந்து வேட்டி உடுத்து மிதியடியில் நடந்து சைவ உணவை மட்டுமே உண்டார்கள். அதன் பின் தமிழ் மொழியைக் கற்க ஆரம்பித்தனர். அவர்கள் வந்த நோக்கம் கபடத் தனமானதாக இருந்தாலும், தமிழ் மொழியை கற்க ஆரம்பித்ததும் அவர்களுக்கு அதன் மேல் அபிமானம் ஏற்பட்டது. ஆனாலும் அந்த அபிமானத்தால் தங்களுடைய நோக்கத்துக்கு இடையூறு வராத வகையில் கிறிஸ்தவ மத நூல்களை எல்லாம் தமிழில் மொழி பெயர்த்தார்கள். தமிழ் இலக்கணத்திலும் இலக்கியத்திலும் சில மாறுதல்களைச் செய்தார்கள்.

இவர்களது நன்நடத்தையாலும் தமிழ் மொழிக்குச் செய்த சீர்திருத்தம் மற்றும் இவர்களது வாதத் திறமையாலும் தமிழகத்திலுள்ள மேல்தட்டுப் பிரிவினரும் இந்த ரோமாபுரி பிராமணர்களின் வழியில் நடப்பதே சரி என்று கருதி கிறிஸ்தவ மதத்தில் சேர ஆரம்பித்தனர்.

இந்த இருவரில் முன்னவரான தத்துவபோத ஞான சுவாமி யாழ்ப்பாணத்தில் வசித்ததாகவும் இன்றைய ரூபத் தமிழுக்கு (புதினத் தமிழ், நாவல், சிறுகதை, செய்தி) அவரே முன்னோடியாக இருந்தவர் என்றும் ஐதீகக் கதை ஒன்று உள்ளதாக முதலியார் இராஜநாயகம் தமது 'யாழ்ப்பாணச் சரித்திரம்' என்ற நூலில் கூறுகிறார். இவர் கி.பி. 1650-ல் இறந்ததாகச் சொல்லப்படுகிறது.

இவரது காலத்திலேயே கிறிஸ்தவ தேவாலயங்களுடன் மதக் கல்வி கற்பிக்க பாடசாலைகளும் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இப் பாடசாலைகளில் மதப் பிரச்சாரக் கல்வி பிரதானமானதாக இருந்தாலும் தமிழும் போர்த்துக்கேய மொழியும்கூட கற்பிக்கப்பட்டது. சாதாரண பாடசாலைகளில் மதக் கல்வியில் சித்தியடைபவர்கள் பின்பு யாழ்ப்பாணம் சொரியில் (பிற்காலத்தில் பறங்கித் தெரு என்று அழைக்கப்பட்டது) உயர் பாடசாலையில் கல்வி கற்க அனுப்பப்பட்டனர். அதிலும் தேர்ச்சி பெறுபவர்கள் போர்த்துக்கேய மொழியில் கல்வி கற்க கோவாவுக்கு அனுப்பப்பட்டனர்.




ஒலிவேராவின் காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாடு 32 கோயில் பற்றுக்களைக (நிர்வாகப் பிரிவாக) பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பற்றுக்கும் ஒவ்வொரு கோவில் அமைக்கப்பட்டது.

**வலிகாமம்:**

நல்லூர், கஸ்டிக்குளி, வண்ணார்பண்ணை, மானிப்பாய், சங்கானை, பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, உடுவில், மல்லாகம், தெல்லிப்பளை, மயிலிட்டி, அச்சுவேலி, புத்தூர், கோப்பாய் என்று பதின்னான்கு பற்றுக்களாகவும்,

**வடமராட்சி:**

பருத்தித்துறை, உடுப்பிட்டி, கட்டைவேலி என மூன்று பற்றுக்களாகவும்

**தென்மராட்சி:**

நாவற்குழி, சாவகச்சேரி, கச்சாய், வரணி, எழுதுமட்டுவாள் என 5 பற்றுக்களாகவும்

**பச்சிலைப்பள்ளி:**

முகமாலை, புலோப்பளை, தம்பகாமம், முள்ளிப்பற்று என 4 பற்றுக்களாகவும்

**தீவுப் பகுதி:**

காரைதீவு (நகர்), ஊர்காவற்துறை, வேலணை, அல்லைப்பிட்டி, புங்குடுதீவு, நயினாதீவு என ஆறு பற்றுக்களாகவும் பிரிக்கப்பட்டது.

கி.பி. 1627-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22-ம் திகதி யாழ்ப்பாணக் குடாநாட்டில் அது வரை இல்லாத அளவில் மிகப் பெரிய புயல் ஒன்று வீசியது. அந்தப் புயலின் உக்கிரத்தால் கடல் பொங்கி எழுந்து கரையோரக் கிராமங்களுக்குள் எல்லாம் புகுந்தது. மக்களது குடிசைகளும், வீடுகளும் இடிந்து தரைமட்டமாகியது மட்டுமல்ல, போர்த்துக்கேயர்கள் கட்டிய கோவில்களும் கூட இடிந்து வீழ்ந்தன. ஆயிரக் கணக்கான மக்கள் மடிந்தனர். அம்மை நோயும், வாந்திபேதியும் வேகமாகப் பரவின. உணவுக் களஞ்சியங்களும், விவசாய நிலங்களும் புயலின் உக்கிரத்தால் அழிந்துபோய்விட்டதால் எங்கும் பெரும் பஞ்சம் ஏற்பட்டது.

இந்தப் புயல் மழையால் போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணத் தேசாதிபதி பிலிப் து ஒலிவேரா கூட நோய்வாய்ப்பட்டான். 1627-ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ம் திகதி அதாவது யாழ்ப்பாணத்தில் புயற் காற்று ஊழித் தாண்டவம் ஆடி சரியாக ஒரு மாதத்தில் அவன் தனது நோய் குணமாகாமலே தனது 53வது வயதில் மரணமானான். அவனது உடல் யாழ்ப்பாணத்தில் இருந்த அற்புத மாதா கோயில் வளாகத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

அவனுக்குப் பின் லாக்றோட்து செயிக்ஸாஸ் கப்றேரா (Lancrote de Seyxas Cabrera) என்பவன் யாழ்ப்பாணத்தின் போர்த்துக்கேய கப்பித்தன் மேஜரானான்.

இவன் காலத்தில் கண்டி அரசனாக இருந்த செனரத் என்பவன் யாழ்ப்பாண அரச குமாரியாகிய வியூக்கு குமாரனின் மகளை தன் மகன் மணம் முடித்ததால், யாழ்ப்பாண அரசுரிமை தனக்குரியது என்று கூறி யாழ்ப்பாணத்தின் மீது ஒரு படையெடுப்பை நடத்தினான். இந்தப் படையெடுப்பு கி.பி. 1629-ம் ஆண்டு நடந்து. அத்தப்பத்து முதலியார் எனப்படும் சிங்களவனே 10 ஆயிரம் பேர் கொண்ட இந்தப் படையை தலைமை தாங்கி அழைத்து வந்தான்.

- நக்கீரன்

சிறுகதை

# சொந்தக் கால்

## உஞ்சை ராசன்

"பாழாகப் போக... இப்படி கல்லுலேயும் முள்ளுலேயும் கஷ்டப்பட வைச்சிட்டுப் போயிட்டாளே... சனியம் புடிச்ச மாடு என்னைக்குமில்லாம வெறிச்சுக் கெளம்புதே... ஊருக்குப் போன முருகன் வரட்டும்... உண்டு இல்லேன்னு பார்த்துப்புடுறேன். இஞ்செழ..ஓ..." கவுண்டச்சியின் கோபம் எல்லை கடந்தது. வெள்ளைக் காளை துள்ளிக் குதித்து அருகிலுள்ள கல்லைக்காய் தோட்டத்துக்குள் புகுந்தது. இரைக்க இரைக்க நடந்த கவுண்டச்சியின் காலில் நெருஞ்சி முள். கண்ணீர் வந்துவிடும்போலிருந்தது. கையிலிருந்த தடியை சுழற்றி வீசினான். குனிந்து மேய்ந்த காளை வீட்டை நோக்கி ஓடியது.

"கொஞ்சம் அமைதியா இருங்கம்மா... பொழுது போச்சில்ல. விடிகாலையிலே அவன்கிட்டே ரெண்டில ஒன்னு கேட்டுப்புடுறேன்..."

"டேய்... ஒன்னோட தாராளப் புத்தியினாலே தாண்டா அந்தப் பற நாய்ங்க இப்படிச் செய்யுதுக... கொட்டுக்குக் கொட்டு மண்ணு போட்டா இப்படி வளருமா... ஓடுற காளைய கூடுற வயசாடா... ஒனக்கென்ன... பெரிசா.. உத்தியோகம் பாக்கிறே.. ஒங்கப்பன் போனதிலிருந்து காட்டையும், வீட்டையும் கட்டிக் காக்கிறேனில்ல... துளியாச்சும் கவலையிருக்கா ஒனக்கு.."

"சரிம்மா.. வுடுங்கம்மா... அவன்களுக்கு என்ன பிரச்சனையோ... கொஞ்சம் அனுசரிச்சுப் போகணும்மா.. ஒங்க காலம் இல்லேம்மா.. மாமாவையும் அழைச்சுக்கிட்டுப் போயி கேக்கிறேன்.. நீங்க மொதல்ல அமைதியா இருங்க.."

"தம்பி அவெங்க சும்மாவா வேலை செய்தானுக. மொத்தமா வருஷத்துக்குப் பேசி பணமுல்ல கொடுத்திருக்கு இப்ப பாதியிலே சொல்லாம கொள்ளாம வரலேயின்னா... வீட்டு வேலைய யார்டா பாக்குறது கட்டுலேயே கெடந்த மாடு அறுத்துக்கிட்டுப் போச்சி. இருந்தாலும் இந்தக் கவதிப் பயலுகளுக்கு இம்புட்டுத் துமுரு இருக்கப்படாதுப்பா- பறக்கம்னாட்டிங்க.."

"இந்தாக்கா... நீ வேறெ வந்துட்டியா.. நீ போயி வேலையெப்பாரு. மாமாவெ வரச் சொல்லு. அவருதானே நின்னு பேசிவிட்டாரு. கண்டதப் பேசி வம்பு இழுத்துப்புடாதே.."

கயிற்றுக் கட்டிலில் கால்மேல் கால் போட்டுப் படுத்திருந்தான் முருகன். மேகத்திட்டுகளில் ஒளிந்தது விளையாடிய நிலவை வெறித்துப் பார்த்தபடி ஆழ்ந்த சிந்தனையிலிருந்த முருகனுக்கு அந்த நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது.

விவசாயி மேனியப் போல் கருத்துக் கிடந்த நிலத்தை காலத்தோடு உழுதால்தான் ஆச்சு. மாடும் ஏருமாக மண்ணு போயிக் கொண்டிருந்தார். விடிகாலை நான்கு மணிக்கு மாட்டுக்கு பருத்திக் கொட்டை அரைத்து, தவிடு பிசைந்து வைத்து, தண்ணி காட்டி சோளத் தட்டை வெட்டிப் போட்டு நாயக்கன் கடையில் சாரத்திலிருந்து ஈயக் குவளையில் எட்டி நின்று டீ குடித்து, போயிலைப் பொட்டணம் வாங்கி உள்ளங்கையில் கொஞ்சம் வைத்து கட்டை விரலால் அழுத்தி கசக்கி கடைவாயில் அடக்கிக் கொண்டு காட்டுக்கு வருவதற்குள் இத்தனை நேரமாச்சு. கவுண்டச்சி பேசும். மண்ணு அதட்டி ஓட்டினார். கவுண்டர் இருந்த காலத்திலிருந்து மண்ணுதான் வேலையாள். வருசத்துக்குப் பேசி பணமோ தானியமோ வாங்கி விடுவார். தவணையாகவும் கிடைக்கும். தீபாவளி பொங்கலுக்கு இனாமாக வேட்டி துண்டு பேச்சியம்மாவுக்கு சேலை கிடைக்கும். மண்ணும் சும்மா விட்டுவிட மாட்டார். கவுண்டர் வீட்லதான் பொழைக்கிறோம் என்று தீபாவளிக்கு எப்படியும் கஷ்டப்பட்டு ஒரு கிலோ கறி வாங்கிப் போட்டுவிடுவார். அது மாதிரி நாலு நாளைக்கு முன்னாடியே கருவைக் காட்டுக்குப் போயி கட்டை வெட்டி காயவைத்து நாலு கட்டு விறகாவது கொண்டுபோய்ப் போட்டுவிடுவார். பொங்கல் வந்துவிட்டால் பச்சை மண் எங்கிருந்தாலும் கவுண்டர் வீட்டு வண்டியெ ஓட்டிக்கொண்டு போய் வெட்டிக் கொண்டு வந்து குழைத்து வைத்துவிடுவார். பரம்பரைப் பழக்கத்தெ எப்படி நெறுத்த முடியும்..தன் மகனுக்குச் சொல்லி வைப்பார்.

கவுண்டச்சி அழைத்தாள். முருகனும் வந்திருந்தான். ஏர் ஓட்டிப் பார்க்க முருகனுக்கு ஆசை... மண்ணு... அனுமதிக்கவில்லை. "கவுண்டரையே ஓட்ட விடமாட்டேன். ஒங்களையா ஓட்ட விட்டுப்போறேன்... சும்மா வேடிக்கை பாருங்க கவுண்டரே. நீங்க நல்லாப் படிங்க. அரிச்சுவடி தெரியாத இந்த மண்ணு மகனுக்கு கையெழுத்துப் போட கத்துக்குடுங்க சாமி" அம்பது வயதுக்கு மேலேயிருக்கும் மண்ணுசாமி.., கவுண்டர் என்றது முருகனுக்கு நெஞ்சில் தைத்தது.

மேற்கே பார்க்க ஏரை நிறுத்திவிட்டு மண்ணு குனிந்து கொஞ்ச மண் எடுத்து பல் தேய்த்தார். கவுண்டச்சி சோளக்கஞ்சி கலக்கி வைத்தாள். மண்ணுவிடம் மரக்காலில் இருந்த கஞ்சியையும் கொடுத்தாள். முருகனுக்கு அம்மா மேல் கோபம் வந்தது. என்றாலும் ஒன்றும் செய்யத் தோன்றவில்லை. மரக்காலையும் சில்வர் சொம்பையும் மாறிமாறிப் பார்த்தான். வேறுபாடு தெரிந்தது. மண்ணுவையும் சோலைமலையையும் பார்த்தான். இருவரிடத்திலும் வேறுபாடு தெரியவில்லை. பழமையை எண்ணி எரிச்சலுற்றான் முருகன்.

கவுண்டச்சி முருகனை அழைத்தாள். அமைதியாக நடந்தான். குளித்துவிட்டு வந்தான். அம்மா சோறு போட்டாள். மரக்காலும் சொம்பும் மனதை நெருடின. தீண்டாமையின் வடிவத்தை எண்ணிக் குமைந்தான். அம்மாவைத் திருத்தலாம். கேட்டான். கோபப்பட்டாள். சோலைமலை நம்ம ஆள் என்றாள். மண்ணு சொம்பில குடுத்தா குடிக்கமாட்டான் என்றாள். முருகனுக்குப் புரியவில்லை. யார் தீண்டாமை பாராட்டுவது. மண்ணு மீது கோபம் வந்தது. பார்ப்பனர்கள் பறையர்களை ஒதுக்கியதையும், பறையர்கள் பார்ப்பனர்களை ஒதுக்கியதையும் அம்பேத்கார் எழுதியது நினைவில் வந்தது.இந்தச் சின்ன விசயத்தைக்கூட மாற்ற முடியவில்லையே. தன் தாயிடம் மண்ணுக்காகப் பரிந்து பேசி மரக்காலை மாற்ற முடியாத தன் இயலாமையை எண்ணி வருந்தினான்.

கருமேகங்கள் நிலவை மறைத்தன. ஆந்தை அலறியது. நேரமானதை உணர்ந்து நித்திரை கொண்டான்.

"பளப்பளன்னு விடிஞ்சிருச்சி. மண்ணையும் அவென் மகன் செல்வராசையும் அழைச்ச. பேரைப்பாரு செல்வராசி.. எங்கென கெடந்த செல்லாக்காசுப் பயலுக்கு பேரைப் பாரு. பேரை... ரொக்கமா எண்ணில்ல குடுத்திருக்கு. பேசினபடி வேலைக்கி வர்ரானா.. இல்லே ஊரைக்கூட்டி அவதாரம் போடணுமான்ன ரெண்டில ஒன்னு கேட்டுப்புட்டு வா. கட்டுன மாடு வங்கொலையா கெடக்கே.." கத்தினாள் கவுண்டச்சி.

மாமாவை அழைத்துக் கொண்டு முருகன் மண்ணு வீட்டுக்குப் போனான். இடுப்பு வேட்டியைப் போர்த்தி வெயில் காய்ந்தார் மண்ணு. கவுண்டர் வருவதைக் கண்ட மண்ணு சத்தம் போட்டு பேச்சியம்மாளை அழைத்தார்.

"அப்பவே.. சொன்னேன்.. கவுண்டரு கோவிச்சுக்குவாங்கடா செல்வம். வேலை கெடந்தாலும் கெடக்கட்டும் போடான்னெ..." பேச்சியம்மாள் கெஞ்சலாகக் கூறினாள்.

"ஏய் அறிவு கெட்டவளே.. மொதல்ல வெள்ளையன் வீட்டுக் கட்டிலை தூக்கிட்டு வாடி..என்னைக்கும் வராத கவுண்டரு தம்பி வந்திருக்கு"

"உட்காருங்க சாமி..." பேச்சியம்மாள் பரபரத்தாள்.

இரவல் வாங்கிய தடிக் கம்புடன் வந்தான் செல்வராசு. கவுண்டரும் அவர் மாமாவும் வந்திருப்பதைப் பார்த்துப் பயந்தான் என்றாலும்முடிவாகச் சொல்லித்தானே ஆகவேண்டும். தனக்குள் எண்ணிக்கொண்டான்.

"மண்ணு"

"ஏஞ்சாமீ.."

"என்னடா... ஒங்க சட்டமாப் போச்சு. கையைக் காலைப் புடிச்சி காசை வாங்கிப்புடுறிய. அப்புறம் புத்தியக் காட்டிப்புடுறிய... ஏன்டா.. நேத்து வேலைக்கி வர்ல.." மாமா கோபமானது முருகனுக்குப் பிடிக்கவில்லை.

"மண்ணு... வேலெ செய்யப் பிடிக்கல்லேன்னா... முறையாச் சொல்லிபிட்டு நிக்கக்கூடாதா... அம்மா ரொம்பக் கோவிச்சுக்கிறாங்கப்பா.." முருகன் அமைதியாகக் கேட்டான்.

"கவுண்டரெ... மாத்திப்புடனும்னு எண்ணலேங்கய்ய.. எனக்குப் பாருங்க.. வயசாயிப் போச்சு.. முன்னே மாதிரி வேலெ செய்ய முடியல.. இது வரைக்கும்.. கவுண்டச்சியெக் கேளுங்க. நான் வந்ததிலேயிருந்து வேலெதொடங்க ஆயிருக்க. முடிஞ்சவரைக்கும் ஒழைச்சேன். இப்ப முடியலே இந்தா இப்ப கூட காச்சதான்.."

"சரி மண்ணு.. அம்மா திட்ராங்கல்ல.. செல்வராசை.. பேசினபடி அனுப்பறதா இல்லையா.."

"இந்த வைக்கக் கூலத்தை அள்ளிப் போரு போட்டு வைச்சா... கவுண்ட வீட்டுலெ கையேந்த வேண்டியதில்லேன்னு நான்தாந் சாமி நிக்கச் சொன்னேன்.."

"சரி மண்ணு பணம் குடுத்திருக்கோமில்லே.."

"டேய்.. என்ன நீ.. கெஞ்சிக் கெடக்குற... மயிருப்பய வர முடிஞ்சா வரட்டும் இல்லேன்னா.. கணக்குப் பாத்து காசெக் குடுத்துட்டு ஒதுங்கிக்கட்டும்.." மாமா கடுப்பானார்.

பேச்சியம்மாள் பயந்தாள். ராமுக் கவுண்டர், கண்ணம்மா மகனெ போன வாரம் கட்டிவைச்சி அடிச்சதை நினைத்துக் கலங்கிப் போனாள். தன் மகனையும்... நினைக்கும்போதே நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது.

"ஐயா... ஒங்க கால்ல விழுகிறேன். அந்த மனுசனுக்கு முடியாமெப் போச்சின்னுதான் மகனெ அலைச்சிக்கிட்டிய. அப்பிடி இப்படின்னு வீட்ல கொஞ்சம் வேலையாப் போச்சு சாமி... மவராசனா இருப்பிய.." கையெடுத்துக் கும்பிட்டாள்.

மாமா மீது முருகனுக்குக் கோபம் வந்தது. எப்படியாவது இந்த இடத்தைவிட்டுப் போய்விட வேண்டும் என்று எண்ணினான். ஆனால் அம்மா கத்துமே... வேலை கிடந்து போகுமே. அவசரத்துக்கு ஆள் பிடிக்க முடியாதே.. எண்ணிய முருகன்,

"செல்வராசு... நீ என்ன சொல்றே வர்றியா இல்லே கணக்கப் பார்த்து ஒதுங்கிக்கிறயா.."

"முருகா.. என்ன நீ... கணக்கப் பாத்துங்கெற பேசினபடி வேலைக்குத்தான் வரணும். இல்லெ.. அப்புறம் நான் யாருன்னு காட்டவேண்டி வரும்.."

முன்னுக்குப் பின் முரணாகப் பேசும் மாமாவை கொஞ்சமும் பிடிக்கவில்லை. முதல்ல கணக்கப் பாருன்னாரு..இப்ப முடியாதெங்கிறாரு... முருகன் மனதுக்குள் திட்டினான்.

"கவுண்டரெ... எம் பாட்டன் பூட்டன் காலத்திலேயிருந்து ஓங்க குடும்பத்துக்குத்தான் ஒழைச்சிப் போடுறோம். வருசாவருசம் உங்க சொத்து ஓசருது. நீங்க நல்லாப் படிச்சிட்டீங்க ஆனா.. நாங்க... அப்படியேதான் இருக்கோம்" செல்வராசு பேசும்போதே இடைமறித்த மாமா, "அது ஒந்தலையெழுத்து... பரம்பரையா செஞ்ச பாவத்துக்கு அனுபவிக்கிறீங்க. அதுக்கு நாங்க என்னடா பண்ணுறது. போற போக்கப் பாத்தா நான் ஒழைச்சேன்னு பங்கு கேப்பே போலிருக்கு.."

"விடுங்க மாமா தேவையில்லாம பேசிக்கிட்டு.." எரிச்சலுடன் கண்டித்தான் முருகன்.

"நீ.. முடிவா என்ன சொல்றே செல்வராசு.." என்ற முருகனிடம்,

"வர முடியாதுங்க கவுண்டரெ... கோவிச்சுக்காதீங்க. கணக்குப் பாத்தா நீங்க குடுக்குறாப்புலெதான் இருக்கும். வேணும்னா சொல்லுங்க அண்ணன்னைக்கி வந்து பாக்கிறேன். கூலி குடுங்க. இனிமே மொத்தமா பேசிக்கிட்டெல்லாம் இருக்க முடியாது. இனிமேலாவது சுயமா சம்பாரிச்சுப் பார்க்குறோம்.." என்று செல்வராசு முடித்தான்.

மண்ணு கூடைக்குள் கத்திக்கொண்டு கிடந்த ஆட்டுக்குட்டிகளைத் திறந்து விட்டார். குதூகலித்துத் தன் தாயிடம் ஓடின.

நன்றி: கோடாங்கி



# பாரதிராஜாவின் சினிமா:

அந்திமந்தாரை, அந்திமந்தாரைக்குப் பின் தமிழ்செல்வன் என இரண்டு அரசியல் படங்கள் கொடுத்திருக்கிறார் பாரதிராஜா இரண்டு படங்களுமே பல்வேறு தர்க்க முரண்களை தனக்குள் கொண்டிருப்பதால் பார்வையாளனின் அக்கறைக்குள் இரு படங்களுமே போகவில்லை.

மிகப் பொதுவாக அரசியல் நடவடிக்கைகள், அனுபவங்களைக் கொண்டிருப்பவர்களுக்கே இப் படங்கள் நிகழ்காலத்தில் ஸ்தூலமான அரசியலில் வேர் கொள்ளவில்லை என்பது தெரிந்துவிடும். சுதந்திரப் போராட்ட தியாகி என்றால் அவரது அரசியல் மனோவியல் வெளிப்பட வேண்டும். முதிய வயதுக் காதலெனில் அரசியலின் முக்கியத்துவம் வெகு குறைவு. கலெக்டர் அலுவலக நடைமுறை பற்றிய குறைந்தபட்ச ஆய்வோ, கலெக்டரின் வாழ்க்கை முறை பற்றிய ஆய்வோ படத்தில் கிஞ்சித்தும் இல்லை.

பாரதிராஜாவின் படங்களில் நிலவும் போக்குகளை அவதானித்துப் பார்ப்போமானால் அரசியல் படங்களில் பாரதிராஜா தவறவிடுகிற அம்சங்கள் பற்றி நாம் யோசிக்க முடியும்.

பாரதிராஜாவின் படங்களில் மூன்று விதமான போக்குகளை அவதானிக்க முடிகிறது.

1. கிராமிய வாழ்வின் உறவு சார்ந்த பிரச்சினைப் படங்கள் (Relationships) பசும்பொன், கிழக்குச் சீமையிலே, முதல் மரியாதை என.



2. நகர்ப்புற மனிதர்கள் கிராம வாழ்வில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் பற்றிய படங்கள். பதினாறு வயதினிலே, புதிய வார்ப்புகள், கருத்தம்மா, என்னுயிர்த் தோழன் என.
3. நகர்ப்புற வாழ்வின் அரசியல் பற்றிய படங்கள்: அந்திமந்தாரை, தமிழ்ச் செல்வன், கேப்டன் மகள் என.

அவரது பிற படங்களிலும் இத்தகைய பண்புகளில் ஒன்று அதிகமாக இருப்பதைக் காண முடியும்.

அ. கிராமிய வாழ்வின் உறவு சார்ந்த பிரச்சினைகள் தீவிரமான வாழ்ந்து பெற்ற உக்கிரமான அனுபவங்களில் இருந்து விளைபவை.

உணர்ச்சிகரமானவை, கண்ணீரும், இரத்தமும், வியர்வையும், துக்கமும் நிறைந்தவை. மண்ணின் தன்மையும், ஆதாரத் தன்மையும் கொண்டவை. ஆய்வுக் கண்ணோட்டம் (Reserch) இங்கு இரண்டாம் பட்சமானவை.

ஆ. நகர்ப்புற மனிதர்கள் கிராம வாழ்வில் ஏற்படுத்தும் பாதிப்புக்களை கிராமியப் பண்பாட்டுக்கு ஏற்படும் நெருக்கடிகளாக கிராம மனிதன் உணர முடியும்.

குறிப்பாக பெண்களின் மீதான பாலியல் சுரண்டல். (பதினாறு வயதினிலே, என்னுயிர்த் தோழன்) கிராமிய வாழ்வின் சமூக பொருளியல் நெருக்கடிகளைச் சொல்ல வேண்டுமாயின் கிராமிய சமூகம் பற்றிய அரசியல் வர்க்க ஆய்வுகள் வேண்டும்.

பாரதிராஜாவின் கிராமிய நெருக்கடி பற்றிய படங்களில் பாலியல் சுரண்டல் பெறும் இடத்தை பொருளாதாரச்

## மூன்று போக்குகள்

சுரண்டல், வன்முறை போன்றன பெறுவதில்லை. இதற்கு ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும். ஸ்தூலமான சித்தரிப்புக்கள் வேண்டும்.

என்னுயிர்த்தோழன் போன்ற படங்களில் இத்தகைய ஸ்தூலமான ஆய்வுகள் சித்தரிப்புகள் இன்றி அருவமான திராவிட இயக்கக் கலாச்சாரப் பாதிப்புக்கள் பேசப்படுகிறது.

நகர்ப்புற - கிராமப்புற வாழ்வு பற்றிய படங்களில் அனுபவம் பெறுகிற ஆதாரத் தன்மையை அசலான சித்தரிப்பை, அரசியல் ஆய்வு பெறவில்லை. காரணம், நகர்ப்புற அரசியலின் ஊடுருவல் பற்றிய நிகழ்கால ஆய்வுகள் தவறுவது தான்.

இ. காப்டன் மகள், அந்திமந்தாரை, தமிழ்செல்வன் படங்களில் காப்டன் மகள் தவிர்த்து இரண்டு படங்களும் தீவிர அரசியல் நிலைப்பாடுகள் மேற்கொள்கின்றன.

இங்கு உறவுகள் குறித்த அனுபவம் முக்கிய பிரச்சினையில்லை. நகர்ப்புற மனிதர்கள் கிராம வாழ்வில் ஏற்படுத்தும் அனுபவம் பிரச்சினையில்லை. மாறாக அரசியலின் வழியே தான் அரசியல் உறவுகள் கட்டமைக்கப்படுகின்றன.

இம் மூன்று படங்களிலும், வன்முறை அரசியல் (நக்ஸலைட் பிரச்சினை), தியாக அரசியல் (காந்தீயம்), வன்முறை மறுப்பு (சாத்வீக அரசியல்), கொத்தடிமை எதிர்ப்பு ஆயுதப் போராட்டம் (கிராமிய வன்முறை) இடம்பெறுகிறன.

இந்தக் குறிப்பிட்ட விஷயங்களில் படம் செய்யும்போது இந்தக் குறிப்பிட்ட விஷயங்கள், மனிதர்கள், சூழல், அதிகாரக் கட்டமைப்புக்கள், வரலாறு, நிகழ்காலச் சம்பவங்கள் குறித்த ஆய்வறிவு கட்டாயமாக வேண்டும்.

பாரதிராஜாவில் சிந்தனையமைப்பின் மிகப் பலமான சக்தியாக கிராமிய சமூகம் பற்றிய அனுபவ அறிவின் உக்கிரம் இங்கு பொருந்தி வராது. அது தேவையில்லாததும் ஆகிறது.

கிராமிய வாழ்வின் இரத்தமும் சதையுமான உணர்ச்சி, தரமான வாழ்வு, நகர்ப்புற மயமான அரசியலில் காரணகாரியம் நிறைந்ததாக, மனிதர்களைப் பயன்படுத்தும் இயந்திரமயமான வாழ்வாக மாறுகிறது.

பாரதிராஜா தனது கிராமிய மனிதர்கள் தொடர்பான அனுபவ / உணர்ச்சி / உறவுக் கதை சொல்லலையே இயந்திரமயமான வேகமான நகர்ப்புற அரசியலின் கொடூரத்தைச் சொல்லவும் பயன்படுத்துகிறார்.

அந்திமந்தாரை, கப்டன மகள், தமிழ்செல்வன் போன்ற படங்கள் பாரதிராஜாவின் பிற கிராமிய, கிராம - நகர்ப்புற படங்களைப் போல் பார்வையினால் உள்வாங்கப்படாததற்கான காரணம் இதுதான்.

பம்பாய் படத்தில் பத்திரிகையாளன், அவனது உறவுகள், சூழல் சித்தரிக்கப்பட்ட விதமும், குருதிப் புனலில் வன்முறை அரசியலில் வாழ நேர்ந்த பொலிஸ் அதிகாரியின் உறவு,



சூழல், அறிவு சித்தரிக்கப்பட்ட விதமும், தமிழ்செல்வனில் சித்தரிக்கப்பட்ட விதமும் இங்கு சிந்திக்கத் தக்கன.

பம்பாயப் பத்திரிகையாளன், குருதிப் புனல் பொலிஸ் அதிகாரி போன்றவர்கள் வாழ நேர்ந்த சூழல் நிகழ்காலத்தில் கொந்தளிப்பான அரசியல் சூழல். தமிழ்செல்வனில் இந்தக் கொந்தளிப்பு, சூழல், ஆய்வறிவு



பெறும் இடத்தை உணர்ச்சிகரமான பாரதிராஜாவின் கதை சொல்லல் எடுத்துக் கொள்கிறது. இந்த முறை தமிழ்செல்வனுக்குப் பொருந்தி வராமல் போவதின் காரணம் இதுதான்: நிகழ்கால அரசியல் ஆய்வு இன்மை.

கேப்டன் மகள் படம் ஒரு திகில் படம் போல் (Pshycological thriller) சிதைந்த முகமுள்ள மனிதன் எழுப்பும் கோரமான பயத்துடன் தொடங்குகிறது. பிறகு அரசியல் திரில்லராகுகிறது. மிகப் பெரிய முரண் இதில் எழுகிறது.

> **பாரதிராஜா உணர்ச்சிமயமான கலைஞன். நல்ல சினிமாவை உருவாக்க வேண்டும் என்று விரும்புகிறார். தமிழ் மண்ணின் பண்பை, மனித உறவுகளின் உன்னதத்தை கிராமியச் சூழலில் அற்புதமாகச் செய்தும் காட்டுகிறார்**

மனோவியல் திகிலுக்கான காரணங்கள் தனிநபர் மனோவியல் சார்ந்தது. அரசியல் திகில் சமூகக் காரணங்கள், வன்முறை திடமான முடிவுகள் வேகம் சார்ந்தது. இதை இரண்டையும் குழப்பினால் மிஞ்சுவது குழப்பம்.

'ஹிட்சக்காக்'கின் படங்களில் கையாளப்படும் திகில், மனோவியல் ரீதியிலானது. கென் லோச்சின் Hidden Agenda, நிஹலானியின் 'ஆக்ரோச்' போன்றவற்றில் காணப்படும் திகில் அரசியல் சமூகப் பண்புகள் கொண்டது.

இவ்வாறான உள் முரண்கள் கேப்டன் மகள் படத்தின் உள் அமைதியை, உள் தர்க்கத்தைக் குலைத்து விடுகிறது.

பாரதிராஜா உணர்ச்சிமயமான கலைஞன். நல்ல சினிமாவை உருவாக்க வேண்டும் என்று விரும்புகிறார். தமிழ் மண்ணின் பண்பை, மனித உறவுகளின் உன்னதத்தை கிராமியச் சூழலில் அற்புதமாகச் செய்தும் காட்டுகிறார்.

கொடிபறக்குது, டிக்டிக்டிக் போன்றவை தமிழ்ச் சினிமாச் சூழல் அவரில் ஏற்படுத்திய பாதிப்புக்கள், விபத்துக்கள்.

சினிமாவில் மனித வாழ்வின் பல்வேறு போக்குகளைச் சித்தரிக்கும்போது பிரக்ஞைபூர்வமான ஆய்வு தேவைப்படுகிறது.

மிக மோசமான ஒரு ஹொலிவூட் படம்கூட உட்கார்ந்து பார்க்க முடிவது அதில் உள்ள குறைந்தபட்ச உள் தர்க்கம் மற்றும் பிரச்சினை பற்றிய ஆய்வு அறிவினால்தான். தமிழ்ப் படங்களில் அதை எதிர்பார்ப்பது பெரும்பாலும் அபத்தம் தான். ஆனால் கிராமிய சமூகம் மற்றும் மனித உறவுகள் பற்றி அற்புதமான படங்களைத் தரும் பாரதிராஜா தன் சிந்தனைக் கட்டமைப்பில் தவறவிடும் விசயங்களை சிந்திக்கத் தொடங்குவாரானால் அவரால் தமிழ் வாழ்வின் அனைத்து அம்சங்கள் பற்றியும் நல்ல படங்களைத் தர முடியும்.

தமிழ்ச் சினிமா விமர்சகர்கள் மற்றும் திரைப்படச் சூழல் பற்றி கோபமாகப் பேசியிருக்கிறார். பாரதிராஜா (குமுதம் / செப்டெம்பர் இதழ்கள்). ஆயினும் தனது சிந்தனைக்கட்டமைப்பில் நிலவும் உள் முரண்கள் பற்றியும் அவர் சிந்திப்பது தமிழ் சினிமாவுக்கு நல்லது.

தமிழ் சினிமா அப்போது நான்கு திசைகளையும் தகர்த்துக்கொண்டு விடுதலைபெறும்.

யமுனா ராஜேந்திரன்

# 5ம் ஆண்டு நினைவஞ்சலி



புலியாய் புயலானவனே
சுப்பிரமணியம் கமலநாதன் (கமல்)
தாயின் மடியில்: 23.08.1975
தாயக மண்ணில்: 19.09.91

## லெப்ரினன்ட் ஜீவா
(வேலணை மேற்கு)

வாழ்வின் வாசலிலே
அடி எடுத்து வைக்க முன்னரேயே
தேசத்தை தோளில் சுமந்தாய்
பேரினவாதிகளின் கொடுமை கண்டு
புலியாய்..... புயலாய் கிளர்ந்தெழுந்தாய்
ஆக்கிரமிப்பு படையினர்க்கு
ஆனையிறவில் பாடம் புகட்டி..... நீ
மணலாற்று மண்ணில் கலந்தாய்
ஓங்கிய பனை மரங்களும்
நீண்ட வயல் வெளிகளும்
தோட்டமும் துரவு சூளும்
செம்மண் புழுதியும்
நீல நெடுங்கடலும் மட்டுமல்ல
கமல் !
காற்றும் கூட உன் கதை சொல்லும்
கால ஓட்டத்தில் கூட
கரையாத உன் நினைவுகளை
தினமும் சுமந்து நிற்கிறோம் நாம்.....

மணலாற்றில் 19.09.1991 அன்று தாய் மண்ணில்
மடிந்த மாவீரர்களுக்கு எமது வீர வணக்கங்கள்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

*தீவுப்பகுதி மக்கள்*

(ADV)

# அற்றேன்சன் பிளீஸ்... லாசப்பேல் ரூ ஏசன்! வருதுவருது... விலகுவிலகு... முக்காப்பலா வண்டி வருது..!!

கொஞ்ச நாளா லாச்சப்பலிலை அமைதிப் புறா சிறகு விரிச்சுக் கொண்டிருக்குது. ஒரு புதினமும் இல்லை. அதென்னவெண்டு எனக்கும் ஒண்டுமா விளங்கேல்லை. முக்காப்பலாக்களின்ர சிலமனைக் காணேல்லையே எண்டு நினைச்சுக் கொண்டு எதுக்கும் ஒரு ரவுண்ட் அப் போயிட்டு வருவமன் எண்டு தான் வெளிக்கிட்டன்.

தமிழ்க் கடையளுக்கு முன்னாலை ஒரே தோரண கும்பம்... லாசப்பல் பிள்ளையார் தெருவாலை பவனி வாறாராம் எண்டு சொல்லிச்சினம். நல்ல சனம் பிள்ளையாரும் பூசாரியும் தேரிலை இருக்க சனம் இழுத்துக் கொண்டு "அரோகரா" கோசத்தோட போய்க் கொண்டிருந்தது. அயலட்டை அப்பார்ட்மென்டுகளிலை இருக்கிற சனமெல்லாம் ஜன்னலுக்குள்ளாலை எட்டி கண்டறியாததைக் கண்ட மாதிரி தேரையும் காவடியாட்டத்தையும் பார்த்துக் கொண்டிருந்தினம். தூக்குக் காவடியும் வருகுது எண்டு கேள்விப்பட்டாப் போல நானும் நிண்டு பார்த்தனான். அப்பிடியொரு அசுமாத்தமும் இல்லை. ஆனால் சனமெல்லாம் 'பக்தியோடதான் வந்து போய்க் கொண்டிருக்குதுகள். பாரிஸ் தெருவிலையும் எங்கட தெய்வத்தின்ரை தேர் உருளுகிறதெண்ட பூரிப்பு எல்லாரின்ரை முகத்திலையும் தெரிஞ்சது. அதுக்குள்ள கூட்டத்தோட கூட்டமா முக்காப் பலாக்களும்... அவையும் பக்தியோட தான்.. அட இவைக்கும் தேவாரம் பாடவும் தெரிஞ்சிருக்குது எண்டது எனக்கு ஆச்சரியமாத்தான் இருந்தது.

ருசி கண்ட பூனை உறிக்கு உறி தாவும் எண்டு சொல்லுறவை. முக்காப்பலாக்களும் அப்பிடித்தான். அவைக்கு எங்கையாவது ஆரோடையெண்டாலும் தனகுவாரம் வைக்காட்டால் பொச்சம் தீராது. படுத்தால் ஒரு கண நித்திரை கூட வராது. என்ன செய்தோ ஏது செய்தோ தங்களைச் சனம் பார்க்க வேணும் எண்டு அவைகரு கிழுக்கிண்டிக் கொண்டிருக்கும். அது சமூகத்திற்குப் பிரயோசனமான விசயங்களா இருக்க வேணுமெண்ட அக்கறையெல் லாம் என்னவும் கிடையாது. ஏதோ செய்ய வேணும். அது என்ன விசக்கோத்து வேலையா இருந்தாலும் பரவாயில்லை. நாலு சனம் பார்த்து 'ஓ. அவனே. அவன் வலு விண்ணன்' என்டு சொன்னால் தான் உச்சி முதல் உள்ளங் கால் வரையும் குளிரும்.

இப்ப கொஞ்ச நாளைக்கு முனனம் ஜேர்மனியிலை ஒரு புறோகிராமுக்கு பாரிசிலை இருந்து கலா ரசிகக் கோஸ்டி ஒண்டு போயிருக்குது. இவையள் எங்கை கலை நிகழ்ச்சி விளையாட்டுப் போட்டி நடந்தாலும் அங்கை பிரசன்னமாகி விடுவினம். கலையிலை அவ்வளவு பித்துப்பிடிச்சிருக்குதெண்டு நினைச்சிட வேணடாம். எல்லாம் 'கலர்' பார்க்கத்தான்.

எங்கை எந்தப் பெண் புரசைக் கண்டாலும் உடனடியாக் காதல் வசப்பட்டு விடுவினம் இவையள். பிள்ளை விரும்புதோ இல்லையோ பிருதிவிராஜன் கணக்காய் தூக்கிக் கொண்டு போறதுக்கான முயற்சியளிலையும் வலு மும்முரமாய் இறங்கி விடுவினம்.

## ஆருக்குச் சொல்லி அழ?

> "தூண்டில் காரனுக்கு எப்படியும் மிதப்பு மேலதான் கண்ணிருக்கும் எண்ட மாதிரித் தான் இவையும் கலை நிகழ்ச்சிக்குப் போனாலும் கலட்டி ஒணான் வேலியிலை இருந்து தலையை எட்டி எட்டி நீட்டினமாதிரி எப்பவும் சீலை, சட்டை, கடிதார் இருக்கிற பக்கமாத் தான் பார்வையள் மேயும்."

பாரிசிலை இவையளின்ரை எடுப்புச் சாய்ப்புகளும் வித்துவத் தனங்களும் எல்லாச் சனத்துக்கும் நல்லா விளங்கிப் போசகுது. அதால இப்ப உத்தப் பருப்பெல்லாம் இஞ்சை வேகுறதில்லை உடனடியா இடத்தை மாத்தி விட்டினம். இப்ப ஜேர்மனியிலை நடக்கிற தமிழ் நிகழ்ச்சியளிலை கடுக்கண் போட்ட இந்தக் கந்தர்வர்களை அங்கிங்கெனாதபடி எங்கும் காணலாம். ஜேர்மனுக்குப் போன இவையளிலை இப்ப சில பேர் ஆசுப்பத்திரியிலை கட்டுக்களோடை படுத்திருக்கினமாம்.

"தூண்டில் காரனுக்கு எப்படியும் மிதப்பு மேலதான் கண்ணிருக்கும் எண்ட மாதிரித் தான் இவையும் கலை நிகழ்ச்சிக்குப் போனாலும் கலட்டி ஒணான் வேலியிலை இருந்து தலையை எட்டி எட்டி நீட்டினமாதிரி எப்பவும் சீலை, சட்டை, கடிதார இருக்கிற பக்கமாத் தான் பார்வையள் மேயும்." இதை அங்கையுள்ள பெடியளும் கன நாளாக் கவனிச்சுத்தான் இருக்கிறாங்கள்.

இஞ்சையிருந்து போனவைதான் முக்காப் பலாக்கள் என ஊரெல்லாம் அறியப்பட்ட ஆக்கள் எண்டது அங்கை பெரிசாத் தெரியாது. இதிலை ஒரு மதன காமராசனின்ரை பார்வை அங்கையிருந்த ஒரு பிள்ளை மேல அப்பிடியே இரும்பிலை ஒட்டின காந்தம் போல நிண்டு விட்டது. அன்டையிலை இருந்து அண்ணருக்கு நித்திரை போச்சுது. சோறுதண்ணி தொண்டைக்குள்ளால இறங்க மாட்டன் என்டிட்டுது. அடைந்தால் மகாதேவி இல்லையெண்டால் மரணதேவி எண்டு வில்லன் வீரப்பன் வசனமெல்லாம் பேசேல்லை. கட்டாயமா குண்டுக் கட்டா தூக்கிக் கொண்டாவது போறதெண்ட முடிவுக்கு வந்திட்டார். இதுக்கு அவரின்ரை ஆருயிர் தோழர்களும் நல்லா ஊதி ஊதி பத்த வைச்சிருக்கினம்.. எங்கையும் கைத்தடியள் எப்பவும் தங்கடை வேலையை ஒழுங்காத் தான் செய்யிறவை. எதுக்கும் முதல்ல கொஞ்சம் டீசென்டா காதல் ரசம் சொட்டச் சொட்ட ஒரு லவ் லெற்றர் எழுதிக்குடுத்திருக்கிறார். பெட்டை இவரைப் பார்த்திருக்குது. விளக்குமாத்துக்கு பட்டுக் குஞ்சம் கட்டினமாதிரித்தான் அதின்ரை கண்ணுக்கு இவர் தெரிஞ்சிருக்குது. இல்லையெண்டால் ஏன் குடுத்த லெற்றரை முகத்திலை வீசி எறிஞ்சதாம்? சில வேளை பொடிச்சிக்கு அண்ணரின்ரை தமிழை வாசிக்கதெரியேல்லையோ எண்டும் யோசிக்கலாம். எது எப்படி இருந்தாலும் ஒட்டு மொத்தமா இவரை அவவுக்குப் பிடிக்கேல்லை.

அடுத்த நிகழ்ச்சி அடுத்த கிழமை வேற ஸ்ரட்டிலை நடந்தது. பாரிசிலை இருந்து இவையும் ரஜகுதுரகபதாதிகளா மண்டபத்துக்கு போயிருக்கினம். பெட்டையைக் கண்டவுடனே கையிலை பிடிச்சு இழுத்தவையாம்.. பிறகென்ன இம்மட்டு நாளா பொறுத்துக் கொண்டிருந்த அங்கையுள்ள 'பெடியள் இழுத்து வைச்சு கவரோட சாத்திப் போட்டு' கவுணாவத்தை வேள்விக்கு கிடாய் வெட்டின கணக்கா வெட்டித் தள்ளியிருக்கிறாங்கள். கூடப் போன கைத்தடியள் எல்லாம் துண்டைக் காணோம் துணியைக் காணோம் எண்டு குதிக்கால் பிடரியிலை முட்ட ஓடி வந்திட்டினம். பாரிசிலை வந்து தான் ஜேர்மன் பக்கமே திரும்பிப் பார்த்திருக்கினம். ஆருயிர் தோழர்கள் இப்ப ஆசுப்பத்திரியிலை கையிலை காலிலை கட்டோட அப்போ. அம்மா.. குத்துதே.. வலிக்கிதே... எண்டு முனகிக் கொண்டிருக்கினமாம். வேலியிலை போற ஓணானை பிடிச்சு காதுக்கை விட்டுட்டு பிறகேன் குத்துதே குடையுதே எண்டு ஒப்பாரி வைப்பானெண்டு எனக்கு விளங்கேல்லை.

வாழுற வயசு.. வளருற வயசு நாலு விசயங்களை அறியிற வயசு. எத்தினையோ சாதனையளை சாதிக்க வேண்டிய வயசு. ஊரிலை உள்ள இதே வயசுப் பிள்ளையள் தேசத்துக்காக அதின்ரை விடுதலைக்காக மனிச இனத்தின்ரை விடிவுக்காக உசிரைக் கூட சந்தோசமாக் குடுத்து சாதிக்குதுகள்.

ஆனால் அதே வயதுள்ள புகலிடத் தமிழ் பிள்ளையள் சிலதுகள் இஞ்சை என்ன செய்யுதுகள்? இவையளுக்கு இந்த வாழ்க்கை காணிவேல் கலாதிகள் மாதிரித்தான் தெரியுது. தெரிஞ்சோ தெரியாமலோ மோசமான பாதையைத் தான் தெரிஞ்செடுத்துக் கொண்டிருக்கினம். இப்பவும் ஒண்டும் கெட்டுப் போகேல்லை. நல்லது கெட்டதை பகுத்தறியிற வயது தான் இளமையில வாழ்க்கையை பிழையான பாதையிலை விட்டுட்டு, பிறகு கடைசி காலத்திலை சுடலை ஞானம் வரும். அப்ப தேடினால் விட்டதைப் பிடிக்கேலுமோ தெரியாது. ஆத்திலை போட்டிட்டு குளத்திலை தேடினாலும் சுந்தர மூர்த்தி நாயனாருக்கு போட்ட பொருள் கிடைச்சது. அந்தாளுக்கு கடவுள் கிருபையாவது இருந்தது. இவையளுக்கு மனிசரின்ரை சிநேகிதங்களோ இல்லை. துலைச்சால் துலைச்சதுதான். ஏதோ... கண்ணுக்கு முன்னாலை பரிதாசமாய்ப் போறதை பார்க்கப் பொறுக்கேல்லை. சரியோ பிழையோ சொல்லுறதைச் சொல்லுவம். அவை செய்யிறதைத் தானே செய்வினம்.

"தேர் மீது பவனி வந்து வரலாறு படைத்த லாச்சப்பல் பிள்ளையாரே...! நீ தான் இதுகளுக்கு ஒரு நல்ல வழியைக் காட்ட வேணுமய்யா!"

"என்ன தம்பி... கேக்கேல்லை...? புரட்டாசிச் சனிக்கு எள்ளெண்ணை எரிக்க பொம்பிளையள் தானே கனக்க வருவினமோ...? போச்சடா...!"

**ஆசைத்தம்பி**


KBM கே.பி.எம் நகை மாளிகை KBM

தொலை பேசி: 42.59.31.74



அனைத்து நாடுகளுக்கான குறைந்த விலை தொலை பேசிச் சேவை

Telephone Cabine

53410863 53410865
53410864 53410855

தொலை பேசிச் சேவைத் தொடர்புகளுக்கு



5, Rue Labat, 75018 Paris
Métro: Marcadet Poissonniers



KBM நகை மாளிகை



உங்கள் விருப்பம் போல் தங்க நகைகளை வடிவமைத்துத் தருபவர்கள்

(ADV)

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
K. Kesenthiran

**Impression:**
IMPRIMERIE MEAULLE

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை
ஆசிரியர்:
க. கிஜேந்திரன்

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France

விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பாரிஸ்:
TeL: 40 37 63 63
Fax: 40 37 64 64

ஜேர்மனி:
NIRMALARAJAN
Tel: 041333896

டென்மார்க்:
S.E. MAHENDRAN
SPURVE VEJ-20,
7200 GRINSTED.
Tel + Fax: 75310546

சுவிஸ்:
மக்கள் கடை
Tel: 01-271 7374
நேசன் - 077 696592

லண்டன்:
ஜெயந்தன்:
Tel: 0956908145

இத்தாலி:
S. தில்லைவாசன்
VIA DANTE - 296, PALARMO
Tel: 03473358290

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22426527

நெதர்லாந்து:
தாஜுவர்த்தன்
Tel: 0223 680462

லாச்சப்பலில்
சகலவிதமான அச்சுத் தேவைகளுக்கும்
தமிழ் அச்சகம்
42 09 60 64

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### காலிப் பிராந்தியம்...

குழுவொன்று காலிக்கு விஜயம் செய்து தங்களது அமெரிக்க வர்த்தக வலயத்தை அமைப்பதற்கான சரியான இடத்தை தெரிவு செய்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தை அமைப்பதற்கு காலியைச் தேர்ந்தெடுத்ததற்கான காரணம் அது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருப்பதே என்று அமெரிக்க முதலீட்டாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளதாக சொல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள இடதுசாரிக் கட்சிகள் இன்றைய ஐக்கிய முன்னணி அரசாங்கம் காலியை அமெரிக்காவிற்கு தாரை வார்த்துக் கொடுக்கப் போகிறது. அபிவிருத்தி வர்த்தக நிலையம் என்ற போர்வையில் அங்கு வரப்போவது அமெரிக்க உளவு நிறுவனங்களும் சீருடை அணியாத இராணுவ நிறுவனங்களுமே. இந்து சமுத்திரப் பிராந்தியத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அமெரிக்கா எடுக்கும் முயற்சியில் ஒன்றுதான் இந்த வர்த்தக வலயம் என்று கூறியுள்ளன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### இந்நோ....

ராலிடம் சிறீலங்கா அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த நிர்மானித்திருப்பதாக கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்திய வெளிவிவகார அமைச்சர் குஜ்ரால் கொழும்புக்கு வருவதற்கு முன்பாக இம் மாத இறுதியில் நியூயோர்க்கில் நடைபெற இருக்கும் ஐ.நா.சபைக் கூட்டத்தின் போது சிறீலங்காவின் வெளிநாட்டமைச்சர் லஷ்மன் கதிர்காமர் அவரை சந்தித்து இந்த விவகாரங்கள் பற்றி ஆலோசிப்பார் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. புலிகளின் சர்வதேச அலுவலகங்களை மூடச் செய்யும் விடயத்தில் இந்தியாவின் ஒத்துழைப்பை கதிர்காமர் கோரவுள்ளதாகவும் இன்னொரு தகவல் தெரிவிக்கிறது.

சிறீலங்கா தரப்பில் இந்திய - சிறீலங்கா பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் விவகாரம் தான் முக்கியமாகப் பேசப்படும் எனத் தெரிவித்த போதிலும், இந்திய தரப்பில் இந்தப் பேச்சுவார்த்தையின் போது இருதரப்பு வர்த்தகம், முதலீடு, கல்வி, கலாச்சாரம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகிய விடயங்கள் மட்டுமே கலந்துரையாடப் படும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்தியாவில் தேவகவுடா அரசு பதவியேற்ற பின் சிறீலங்காவிற்கு விஜயம் செய்யும் மூத்த அமைச்சரான குஜ்ரால் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவையும் சந்தித்துப் பேசுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முல்லை முகாமில் காணாமல் போனோருக்கு புதிய அமைப்பு

முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து காணாமற் போனதாகக் கூறப்படும் இராணுவ வீரர்களின் உறவினர்கள் ஒன்று கூடி அமைப்பொன்றினை ஏற்படுத்தியுள்ளார்கள். இந்த அமைப்பின் ஆரம்பக் கூட்டம் களனியில் நடைபெற்றுள்ளது.

இந்த காணாமற் போன வீரர்களின் அமைப்பின் தலைவராக பிரபல சிங்களப் பத்திரிகையின் நிருபரான சிரிமெனன் கஸ்தூரி ஆராச்சி நியமிக்கப்பட்டுள்ளார். இவரின் சகோதரன் முல்லைத்தீவு முகாமில் மேஜராகக் கடமையாற்றியவர். இவரும் முல்லைத்தீவு முகாம் தாக்குதலின் போது அரசால் வெளியிடப்பட்ட காணாமற் போனோர் பட்டியலில் இடம் பெற்றிருக்கின்றார்.

அதேவேளை முல்லைத்தீவு இராணுவ முகாம் தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட இராணுவ நீதிமன்ற விசாரணைக் குழு முல்லைத்தீவிலிருந்து தப்பி வந்ததாகக் கூறப்படும் பதினாறு பேரின் வாக்குமூலங்களைக் கடந்த வாரம் பதிவு செய்துள்ளது என தெரிய வருகின்றது.

## பத்து வயதுக்கு மேல் அடையாள அட்டை

யாழ்பாணக் குடா நாட்டில் வசிக்கும் பத்து வயதுக்கு மேற்பட்ட அனைவரும் விசேட அடையாள அட்டை ஒன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நடைமுறையை சிறீலங்காப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

சிறீலங்காவில் ஏற்கனவே உள்ள நடைமுறையின் படி 18 வயதிற்கு மேற்பட்டோருக்கே தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டுத் தமிழர்களை தனியாக இனம் பிரித்து அடையாளம் காண்பதற்கே விசேட அடையாள அட்டை ஒன்றை வழங்கும் திட்டத்தை சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### கட்டாய...

கும் இடைப்பட்டவர்களை கட்டாய இராணுவ சேவையில் ஈடுபடுத்த அரசாங்கம் ஏற்கனவே தீர்மானித்துள்ளது.

அத்துடன் சமுர்த்தி தொண்டர் படை என்ற பெயரில் பத்தாயிரம் பேரைத் திரட்டி வடபகுதியில் இராணுவ சேவையில் ஈடுபடுத்தவும் தீர்மானித்திருந்தது. இந்த நடவடிக்கைகளுக்கு அரசின் உள்ளேயும் வெளியேயும் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து தொண்டர் படை என்ற பெயரில் படைக்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கையை அரசு கைவிட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் எழுபத்தையாயிரம் பேரை கட்டாயமாக இராணுவத்துக்கு சேர்ப்பது என்ற அரசின் நிர்மானம் பலருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சிறீலங்காவின் இராணுவ வரலாற்றில் முன்னெப்போதும் இது போன்று பெருந்தொகையானோரை படையில் சேர்த்துக்கொள்ள தீர்மானம் எடுக்கப்பட்டதில்லை என்பதுடன் இனப் பிரச்சினையை பேசித் தீர்க்கப் போவதாகக் கூறும் அரசு, பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பெருந்தொகையானோரை படையில் சேர்ப்பதன் மூலம் சிறீலங்காவை மீள முடியாத படுகுழிக்குள் தள்ளிவிடப் போவதாக அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### கதிர்காமர்...

திராவிடர் கழகம் என்பன கதிர்காமர் தமிழகத்திற்கு வந்தால் பெரும் போராட்டம் வெடிக்கும் என எச்சரித்திருந்தன.

இந்த நிலையில் கதிர்காமர் தமிழகத்திற்கு வருவதை தமிழக அரசு விரும்பவில்லையென்று இந்திய மத்திய அரசாங்கத்தினூடாக சிறீலங்கா அரசுக்கு தெரிவிக்கப் பட்டுள்ளதாக கொழும்புச் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### மன்னாரில்...

மீனவக் குடும்பங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இந்தத் தடை உத்தரவினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு எதையும் வழங்குவதற்கு சிறீலங்கா அரசு எந்தத் திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை எனத் தெரிய வருகின்றது. மன்னார் கடற் பிராந்தியத்தினூடாக அகதிகள் தமிழ் நாட்டுக்குச் செல்வதை தடுக்கவே இந்த மீன் பிடித் தடை உத்தரவு என கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

## பிறந்தநாள் வாழ்த்து



## செல்வன் வேந்தன்

தமிழீழம் வசாவிளானைச் சேர்ந்த கதிரமலை - சுதா, தம்பதிகளின் செல்வப் புதல்வன் மாஸ்டர் வேந்தன் தனது 3 வது பிறந்தநாளை 15.09.96 ஞாயிற்றுக்கிழமை, அன்று பிரான்ஸ் Clichy sous Bois-இல் உள்ள தனதில்லத்தில் அன்பு அப்பா, அம்மா, அன்புப் பெரியண்ணா சுதர்ஸன், அன்பு அக்கா சுபாஷினி, அன்பு ஆசையண்ணா சுஜேந்திரன் ஆகியோருடன் வெகு விமரிசையாக கொண்டாடினார்.

இவரை தமிழீத்திலுள்ள அப்பப்பா, அப்பம்மா, ஐயா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா குடும்பத்தார், சித்தப்பாமார்கள் குடும்பத்தார், தயா அன்ரா சித்தா குடும்பத்தார், பிரான்சிலுள்ள அன்புப் பெரியமாமா, சந்துருமாமி, அன்பு அண்ணா கபிலர், லண்டனிலுள்ள அன்புச் சின்னமாமா ராஜேந்திரம் மாமி, சுவிஸிலுள்ள அன்புச் சித்தப்பா, சுஜன் அண்ணா, மச்சான் மற்றும் சுவிஸ் அண்ணாமார்கள், அன்ரா, அக்காமார்கள், குட்டித்தம்பி சேந்தன், நண்பர்கள் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருளால் சகல செல்வங்களும் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டுகாலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

K.Kathiramalai
3, All .P.et.M. Curie, 93390 Clichy Sous Bois
T.P: 43 88 96 22.

லாச் சப்பலில் குறைந்த செலவில் நிறைந்த பிரயாண சேவை

**Errances Travels**

Tél: 42 09 70 00

*à partire de*

| | | | |
|---|---|---|---|
| Bombay | 3,900Frs. | Londres | 650Frs. |
| Delhi | 3,900Frs. | New york | 2,400Frs. |
| Bangkok | 3,350Frs. | Montreal | 2,400Frs. |
| Colombo | 4,150Frs. | Oslo | 2,010Frs. |
| Singapour | 3,350Frs. | Toronto | 2,700Frs. |
| Kualalumpur | 3,400Frs. | Nepal | 4,820Frs. |
| Madras | 4,750Frs. | | |

Fax: 42 09 53 39 - Li: 075 95 01 37
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc
தொடர்புகளுக்கு: நாதன் (தமிழில்)

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

(ADV)




# இந்த நூற்றாண்டிலேயே பெரிய கொள்ளை சுவிஸ் வங்கி இரகசிய வைப்புக்களுக்கு ஆபத்து

இந்த நூற்றாண்டிலேயே பெரியகொள்ளை எனக் கருதப்படக் கூடிய தங்கக் கொள்ளை தொடர்பான மர்மத் திரை கடந்த 12 .09.96 வியாழக்கிழமை மெல்ல விலக ஆரம்பித்துள்ளது.

இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் முதலில் நாஜிப் படைகளால் கொள்ளையிடப்பட்ட தங்க நகைகள் தங்கப் பாளங்களாக்கப்பட்டு சுவிஸ் வங்கியில் இடப்பட்டதாகவும் பின்னர் அது யாரால், எவ்வாறு பங்கிடப்பட்டது தொடர்பான விசாரணைகளுக்கு வழி வகுக்கும் வகையில் சுவிஸ் வங்கி தனது இரகசியத்தை வெளிப்படுத்த இணங்கியுள்ளது. இது தொடர்பாக பாராளுமன்றத்தில் சட்டத்திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது. இச் சட்டத்திருத்தம் மேலும் பலரின் பண வைப்புக்கள் தொடர்பான சர்ச்சையைக் கிளப்பும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போதுள்ள பூர்வாங்க தகவல்களின் படி இரண்டாம் உலகப் போர் முடிவுற்ற போது ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் பெறப்பட்ட தங்கத்தை பிரான்ஸ், பிரித்தானியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் பங்கிட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.





இரகசியங்களை வெளியிட இருக்கும் சுவிஸ் வங்கி

# போருக்குப் பின் பொஸ்னியாவில் தேர்தல்

கடந்த ஆறு வருடப் போருக்குப் பின் Bosnie_Herzegovine க்கான பாராளுமன்றத் தேர்தல் வாக்கெடுப்புக்கள் கடந்த 14.09.96 சனிக்கிழமை ஆரம்பமாகியது. சனியன்று குரோசியர்களுக்கும் சேர்பியர்களுக்கும் இடையேயான முரண்பாடுகளால் சிறு வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இத் தேர்தலில் 30 இலட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கின்றனர். தேர்தல் கண்காணிப்பு வேலைகளை நேட்டோ படையணியைச் சேர்ந்த IFOR விசேட பிரிவினர் கண்காணிக்கின்றனர். இக் கண்காணிப்பு வேலைகளில் 52 ஆயிரம் படையினர் கலந்து கொண்டனர்.

ஐரோப்பிய பாதுகாப்புக்கும் ஒத்துழைப்புக்குமான (OSCE) நிறுவனம் தேர்தல் வேலைகளை ஒழுங்குசெய்தது. போர்ச் சூழ்நிலை ஓய்ந்து மக்கள் இன்னமும் வழக்கமான வாழ்விடங்களுக்கு திரும்பி முடியுமுன்னர் இத் தேர்தல் தேவைதானா எனச் சிலர் கேள்வி எழுப்பியுள்ளனர். பொஸ்னிய இஸ்லாமியக் கட்சியியா முறைகேடுகள் காரணமாக தேர்தலை இரத்துச் செய்யுமாறு கோரியுள்ளனர். பொஸ்னிய இஸ்லாமியர்கள் அமெரிக்கர்களால் ஆயுதமயப்படுத்தப்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.



# அணுப் பரிசோதனைத் தடையுடன் அணு ஆயுதத் தடையும் வேண்டும்

## - இந்தியா -

கடந்த 10.09.96 நியூயோர்கில் உள்ள ஐநா சபை தலைமை அலுவலகத்தில் சர்வதேச அணு ஆயுதப் பரிசோதனைத் தடைப் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது. சர்வதேச நாடுகள் அனைத்தும் இணைந்து ஆதரவளித்த இப் பிரேரணையை எதிர்த்து மூன்று நாடுகள் மட்டுமே வாக்களித்தன. இந்தியா, பூட்டான், லிபியா ஆகியன மூன்றுமே அந் நாடுகள். கியூபா, சிரியா, லெபனான், தான்சானியா, மொரீசியா ஆகிய நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை

இது குறித்து வாக்கெடுப்புக்கு சற்று முன் இந்தியா சார்பில் பேசிய பிரதிநிதி திருமதி. அருந்ததி ஹோஸ் தனது அறிக்கையில் "அணு ஆயுதத்தை தடை செய்ய வேண்டும் என்று எமது நாடு கடந்த நாற்பது ஆண்டுகளாகக் கோரிக்கை விடுத்து வருகின்றது. தற்போது கொண்டு வரப்படும் அணுப் பரிசோதனைத் தடை நியாயமற்ற ஒன்று. அணு ஆயுதம் வைத்திருக்கும் அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் மட்டுமே அணு ஆயுதம் வைத்திருக்க அனுமதியளிக்கும் பாரபட்சமான சட்டம் இது. இது மற்ற நாடுகளுடன் சமநிலையற்ற தன்மையை உருவாக்கும். அணு ஆயுதத்தை வைத்திருக்கும் இந் நாடுகள் தமது பரிசோதனைகளை ஆய்வு கூட அளவில் செய்வதும் தடை செய்யப்பட வேண்டும். அணு ஆயுதம் வைத்திருக்கவும், பரிசோதிக்கவும் சர்வதேசத்தடை வேண்டும். அணு ஆயுத பரிசோதனைத் தடை என்பது திருத்தப்பட்டு அணு ஆயுத பரிசோதனைத் தடையும் அணு ஆயுதம் வைத்திருப்பதற்குமான தடையுமாக இச் சட்டம் திருத்தப்பட்டால் அன்றி எமது நாடு ஒரு போது இச் சட்டத்தில் கையெழுத்திடாது" என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவை வழிக்குக் கொண்டு வரும் முயற்சியில் தாம் இறங்க உள்ளதாக பிரெஞ்சு வெளியுறவுத் துறை அமைச்சர் ஹேர்வே டி சரத் Europe ஐ இல் தெரிவித்துள்ளார் என லூமோன்ட் பத்திரிகை 12.09.96 வியாழனன்று செய்தி வெளியிட்டுள்ளது.

செப்டம்பர் 24 ஆம் திகதி நியூயோர்க் செல்லும் சர்வதேசத் தலைர்கள் இவ் ஒப்பந்தத்தில் கைச் சாத்திடவுள்ளனர். அமெரிக்க , ஜனாதிபதி இவ் வைபவத்தை ஆரம்பித்து வைக்க உள்ளார். உலைகளை வைத்திருக்கும் இந்தியா இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடதவறின் மூன்று வருடத்தின் பின் மீண்டும் இதுபற்றி விவாதிக்க ஐ.நா சபைக்கு உரிமை உண்டு. ஒப்பந்தம் கைச்சாத்தாகி 180 நாட்களில் அது சர்வதேச சட்டமாகக் கருதப்படும்.

# பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் பாப்பரசர் பிரான்ஸ் வருகிறார்

கத்தோலிக்க தலைமைப்பீடமான வத்திக்கானின் தலைவர் பாப்பரசர் எனப்படும் கத்தோலிக்க மதத் தலைவர் சீஐஏ எனப்டும் அமெரிக்க உளவுப் படையை வழி நடாத்துபவர்களில் ஒருவர் என Carl Bernstein என்ற எழுத்தானர் Sa Saintete et l'histoire secrete de notre tembs என்ற தனது புத்தகத்தில் 'தெளிவாக விளக்கியுள்ளதாக பிரெஞ்சுப் பத்திரிகை JDD செய்தி வெளியிட்டுள்ளது.

அச் செய்திகளின்படி சோவியத் யூனியனை உடைப்பது தொடர்பான ஆலோசனைகளுக்காக அமெரிக்க ஜனாதிபதி றொனாலட் றேகன் காலத்தில் சீஐஏ தலைவராக பதவி வகித்த William Casey எனபவர் இரகசியமாக வத்திக்கான் சென்று பாப்பரசரை சந்தித்தார். செய்மதிகள் மூலம் பெறப்பட்ட தகவல்களையும் ஒட்டுக் கேட்டல் மூலம் பெறப்பட்ட தகவல்களையும் காண்பித்து கலந்துரையாடினார். அப்போது பாப்பரசர் குறிப்பிட்ட நாடுகளில் இருந்து வருடம் தோறும் தன்னை வந்து சந்தித்துச் செல்லும் சீடர்கள் வழங்கும் தகவல்களை சீ.ஐ.ஏக்கு வழங்கி சீ.ஐ.ஏ தலைவருக்கு ஆசிர்வாதமளித்து அனுப்பி வைப்பார் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

22.09.96 அன்று Nimes நகரை வந்தடையும் பாப்பரசர் பிரான்சில் சுற்றுப் பயணம் செய்ய உள்ள வேளையில் இச் செய்தி வெளியாகியுள்ளது. கடுமையாக நோயுற்றிருக்கும் பாபப்பரசர் ஜோன் போல் II ஒக்டோபர் 6 ஆம் திகதி சத்திரசிகிச்சைக்குள்ளாகவுள்ளார்.

# ஜேர்மன் பாராளுமன்றத்தில் புதிய சட்டம் நிறைவேறியது

ஜேர்மனிய Bundestag இல் கடந்த 13.09.96 வெள்ளியன்று புதிய சமூக பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டுளளது. ஆளும் கட்சியைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களினதும் ஆதரவுடன் இச் சட்டம் நிறைவேறியுள்ளது.

இச் புதிய சட்டம் நோயாளிகள், பெண்கள், வேலையற்றவர்கள், முதியவர்கள் ஆகியோரின் வாழ்வில் பல பாரிய மாற்றங்களை ஏற்படுத்த உள்ளது. பெண்களின் ஓய்வு பெறும் காலம் 60 இல் இருந்து 65 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. வேலையற்றோருக்கான கொடுப்பனவுகள் வீழ்ச்சியுறும் என்றும், நோயாளிகளின் மீளளிப்புக்கள், மருத்துவ விடுமுறைக் கொடுப்பனவுகள் வீழ்ச்சியுறும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# வட இத்தாலியில் பதானி தனிநாட்டுப் பிரகடனம்

வட இத்தாலிய தலைவர்களில் ஒருவரான Umberto Bossi 15.09.96 ஞாயிறன்று பதானி தனிநாட்டுப் பிரகடனத்தை வெனிஸ் நகரில் செய்துள்ளார். இதற்கு முன்னதாக வெள்ளியன்று PO நதியில் இருந்து நீரை எடுத்துக் கொண்டு பச்சைச் சட்டை அணிந்த தனது ஆதரவாளர்களுடன் ஊர்வலமாகச் சென்ற பொஸ்ஸி தனது ஆதரவாளர்களுக்கு உற்சாக மூட்டும் கோசங்களை எழுப்பினார்.

கருத்துக் கணிப்புக்களின்படி பொஸ்ஸியின் தனிநாட்டுக் கோரிக்கைக்கு 7.6 வீதமான இத்தாலியர்களே ஆதரவளிப்பதாகத் தெரிய வருகின்றது.

அண்மையில் பதவிக்கு வந்துள்ள இடதுசாரி பிரதமரான புறோடியின் ஆட்சிக்கு இப் பிரகடனம் ஒரு தலையிடியாக இருக்கும் என அஞ்சப்படுகின்றது.

உம்பேர்டோ பொஸ்ஸி செய்துள்ள பதானி தனிநாடு பிரதேசம் வரலாற்று ரீதியாக ஒரு தேசிய அடையாளத்தைக் கொண்டிராதது என லூ மோன்ட் பத்திரிகை தனது 16.09.96 திங்கள் திகதியிட்ட ஆசிரியா தலையங்கத்தில் கருத்து வெளியிட்டுள்ளது.

# சவுதியில் கெரில்லா அமைப்பு

சவுதி அரேபியாவில் நிலை கொண்டுள்ள அமெரிக்கர்களுக்கு எதிராக கெரில்லா தாக்குதல்களை மேற்கொள்ளுமாறு சவுதி அரேபிய பிரபல இஸ்லாமிய மதகுருவான Oussama Ben Laden தனது ஆதரவாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# ஐரோப்பாவில் உயரமான கட்டிடம் பிரித்தானியாவில் கட்ட திட்டம்

ஐரோப்பாவில் உயரமான கட்டிடமொன்றை பிரித்தானியாவில் கட்ட தாம் திட்டமிட்டுள்ளதாக கட்டிடக் கலைநிபுணர் சேர்.Norman Foster தெரிவித்துள்ளார். இக் கட்டிட வேலைகள் 2001 ஆம் ஆண்டு முற்றுப் பெறும் என்றும் கட்டிடத்தின் உயரம் 1265 அடியாக (390 மீட்டர்) இருக்கும் எனத் தெரிவித்துள்ளார். 1992 ஆம் ஆண்டு அயர்லாந்து போராளிகளின் குண்டுத் தாக்குதலுக்குள்ளான Baltic Exchanges பகுதியில் இக் கட்டிடம் நிர்மாணிக்கப்படவுள்ளது. 8000 பேர் வேலை செய்யக் கூடியயளவு வசதிகளைக் கொண்டதாக இது அமையும். Trafaalagar House நிறுவனத்தினர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். அடுத்த வருட முற்பகுதியில் கட்டுமான வேலைகள் அரம்பமாகவுள்ளன.

பிராங்போர்டில் உள்ள கொமேர்ஸ் வங்கியின் தலைமையகக் கட்டிடமே தற்போது ஐரோப்பாவில் உள்ள பெரிய கட்டிடமாகும். இதன் உயரம் 984 அடியாகும்.

# இத்தாலிய அழகியாக கறுப்பினப் பெண்

இத்தாலிய அழகியாக பலத்த சர்ச்சையின் பின் கறுப்பினத்தைச் சார்ந்த Denny Mendez (வயது 18) தெரிவு செய்யப்பட்டுள்ளார். இத் தெரிவு கறுப்பினப் பெண் எவ்வாறு இத்தாலிய அழகியாக தெரிவு செய்யப்படலாம் என்ற சர்ச்சையை கிளப்பியது. இரு நடுவர்கள் தெரிவுக் குழுவில் இருந்து நீக்கப்படுமளவுக்கு சர்ச்சை பலமாக இருந்தது.

# மறுப்பறிக்கையை வெளியிட மறுக்கும் உரிமை பத்திரிகை ஆசிரியருக்குண்டு

பிரான்சில் இயங்கி வரும் இனவாதக் கட்சியான தேசிய முன்னணியை விமர்சிக்கும் வகையில் தலையங்கம் தீட்டிய லுமோன்ட் மற்றும் லிபிரேசன் பத்திரிகைகள் தனது மறுப்பறிக்கையை வெளியிட மறுத்தமை தொடர்பாக அக் கட்சியின் தலைவர் ஜோன் மரி லு பென் தொடர்ந்த வழக்கு கடந்த 12.09.96 வியாழனன்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

நீதிபதிகள் தமது தீர்ப்பில் பொது வாழ்வைகயில் ஈடுபாடுடைய நிறுவனம் என்ற வகையில் லு பெனின் கட்சி விமர்சனத்துக்கு உள்ளாவது குறிப்பாக பத்திரிகைகளின் விமர்சனத்துக் குள்ளாவது ஜனநாயக விதிகளுக்கு உட்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. "அதி தீவிரம்" என விமர்சித்து எழுதுவது அப் பத்திரிகையின் உரிமை எனவும் மறுப்பறிக்கை உரிமை என்பது பத்திரகையாளரின் சுதந்திர விமர்சனத்துக்கு குந்தகமாக இருக்க அனுமதிக்க முடியாது எனவும் அத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிளின்டனின் வியாபார உதவியாளர் சிறையில்

அமெரிக்க ஜனாதிபதி கிளின்டனுடன் வீடமைப்புத் திட்ட வியாபாரத்தில் ஈடுபட்ட சுசன் மக் டுக்ளஸ் என்ற பெண்மணி கடந்த வாரம் பொலிசாரின் விசாரணைக்காக சரணடைந்



துள்ளார். இவர் ஜனாதிபதி கிளின்டனுக்கு எதிராக வாக்கு மூலம் அளிக்க மறுத்து வருவதைத் தொடர்ந்து அவரைக் கைது செய்த பொலிசார் சங்கிலியிட்டு சிறையில் அடைத்துள்ளனர்.

# அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையே செய்தித் தொடர்புப் போர் ஆரம்பம்

மனித சமூகம் 21 ஆம் நூற்றாண்டை அண்மிக்கும் போது போர் முறைகள் மாறி வருகின்றன. பொருளாதாரப் போர் முறையும், செய்தித் தொடர்புச் சாதனத்தினூடான "சதி" சிந்தனைப் பரப்புதலும் அதிகரித்து வருகின்றது.

கடந்த வாரம் அமெரிக்காவில் இருந்து சீனாவுக்கு செல்லும் 100 மேற்பட்ட செய்தி வழிகள் தடைசெய்யப்பட்டுள்ளன. இவற்றில் கணனிச் செய்தித் தொடர்பு பெருந்தெருக் (information Auto route) களும் அடங்குகின்றன.

சீ.என்.என், உட்பட பல அமெரிக்க சார்பு செய்தி நிறுவனங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன.

# ஜப்பானில் நிலை கொண்டுள்ள அமெரிக்க படைகள் வெளியேற தீர்ப்பு

ஜப்பானின் ஒக்கினவா நகரில் நிலைகொண்டுள்ள அமெரிக்க படைகள் குறைக்கப்பட வேண்டும் என்ற தீர்ப்பை அப் பகுதி மக்கள் தேர்தல் மூலம் வழங்கியுள்ளார்.

91 வீதத்துக்கும் அதிகமான மக்கள் இத் தீர்ப்பை வழங்கியுள்ளார்கள். தனியார் நிலங்களை குத்தகைக்கு எடுத்துக் கொண்டு இரண்டாம் உலகப் போர் முடிவுற்ற காலத்தில் இருந்து இவர்கள் அங்கே தங்கியுள்ளார்கள். 28 ஆயரம் பேருக்குச் சொந்தமான நிலங்களில் அமெரிக்க படைகள் நிலை கொண்டுள்ளன.

# கருத்தடையை எதிர்த்து பாப்பரசர் உரை

கடந்த 30.09.96 வெள்ளிக்கிழமை போலந்து நாட்டில் கருத்தடைக்கு அனுமதியளிக்கும் சட்டமூலம் நிறைவேறியதைத் தொடர்ந்து பாப்பரசர் தனது எதிர்ப்பை வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார்.

அவர் அண்மையில் ஆற்றிய பிரசங்கமொன்றில் இது பற்றிக் குறிப்பிடுகையில் "அப்பாவிகளைக் கொல்லும் அரசில் சட்டத்துக்கு மதிப்பில்லை. தனது மக்களை கொல்லும் நாட்டு மக்களுக்கு எதிர் காலம் இல்லை. இரண்டாம் உலகப் போரில் ஏரானமானோரை இழந்த எமது நாட்டில் உருவாக்கப்பட்ட இந்தச் சட்டம் வாழ்வதற்கான உரிமையை மறுக்கின்றது" எனத் தெரிவித்துள்ளார்.

# சீனாவில் மௌலவிகள் உட்பட 180 பேர் கைது

சீனாவின் Kashgar மாநிலத்தில் தனிநாட்டுப் போராட்டம் நடாத்தி வரும் இஸ்லாமியர்களின் FNUR இயக்கத்தைச் சேர்ந்த 180 மௌலவிகளும், இஸ்லாமிய மாணவர்களும் கடந்த 01.09.96 ஞாயிறன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

# வாரக் குறிப்பு

**08.09.96 ஞாயிற்றுக்கிழமை**

- குர்திஸ் மக்களில் ஒருபகுதியினரை சதாம் ஹுசைனுக்கு எதிராக ஆயுதமயப்படுத்திய சீ.ஐ.ஏ ஈராக்கிய படையெடுப்பைத் தொடர்ந்து அவர்களைக் கைவிட்டு தப்பியோடி விட்டது.
- துருக்கிய எல்லையில் உள்ள Cypriot காவலாளி ஒருவர் கிரேக்கர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.
- அமெரிக்க நாசா (NASA) ஆய்வு கூடத்துக்கு அண்மித்த பகுதியில் சென்ற அமெரிக்க விமானி ஒருவர் இனம் தெரியாத ஏவுகணை ஒன்றைக் கண்டதாகத் தெரிவித்துள்ளார்.

**09.09.96 திங்கட்கிழமை**

- அமெரிக்க ஜனாதிபதி பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளுக்காக 1 பில்லியன் டொலர் பணம் ஒதுக்கப்பட வேண்டும் எனக் கோரியுள்ளார்.
- இந்தோனேசிய அரசியல் தலைவர்களில் ஒருவரான மேகாவதி சுகார்னோபுத்திரி தலைமையில் புதி கட்சி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- கிரேக்கத்தில் செப். 22 நடைபெறவுள்ள தேர்தலில் பதவியில் உள்ள சோசலிசக் கட்சியின் வெற்றி வாய்ப்பு குறைவாகக் காணப்படுகின்றது.
- ஜெருசலேம் நகரசபைத் தலைவர் ஊழல் குற்றச் சாட்டுக்குள்ளாகியுள்ளார்.

**10.09.96 செவ்வாய்க்கிழமை**

- ரஷ்யத் தலைவர் பொறிஸ் ஜெல்சின் ஆட்சி அதிகாரங்களை பிரதமர் சேர்னோமிர்டினிடம் கையளித்து விட்டு கடுமையான சத்திரசிகிச்சைக்கு உள்ளாக உள்ளார். அணு ஆயுதத்தை இயங்க வைக்கும் இரகசிய முறையை அவர் கையளிக்க மாட்டார்.
- பிலிப்பைன்சில் மொறோ தீவிரவாதிகளுடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தை சீர்குலைக்க முனையும் கிறிஸ்தவ தீவிரவாதிகளை ஒடுக்குமாறு ஜனாதிபதி பிடல் ராமோஸ் படையினருக்கு உத்தரவிட்டுள்ளார்.
- ஆப்கானிஸ்தானில் ஆயுதக் கிளர்ச்சி நடாத்தி வரும் தலிபன் கெரில்லாக்கள் தமது நிலைகளை மேலும் முன்னோக்கி நகர்த்தி Hisarak நகரையும் கைப்பற்றியுள்ளனர்.
- இத்தாலியில் முன்மொழியப்பட்டுள்ள வட இத்தாலிய பதானி தனிநாட்டுக் கொள்கையை கத்தோலிக்க தேவாலயத்தினர் கண்டித்துள்ளனர்.

**11.09.96 புதன்கிழமை**

- தன்னினச் சேர்க்கை திருமணத்தைச் தடைசெய்யும் சட்டமூலம் ஒன்று அமெரிக்காவில் நிறேவேறியுள்ளது.
- ஜப்பானில் ஜனநாயகக் கட்சி ஒன்றை உருவாக்கப் போவதாக தற்போதய சுகாதாரத் துறை அமைச்சர் Nato தெரிவித்துள்ளார்.
- கம்போடிய அரசுடன் இணைந்து கொண்ட கெமர் ரூஜ் தலைவர்களில் ஒருவரான Ieng வதந்திகளைப் பரப்புவதாக கெமர் போராட்டக் காரர்கள் தெரிவித்துள்ளனர்.
- பெல்ஜிய மன்னர் அல்பேர்ட் II மௌனத்தைக் கலைத்துக் கொண்டு அண்மையில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள குழந்தைகள் கடத்தல் திருட்டு தொடர்பாக முழு விசாரணைகள் நடாத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

**12.09.96 வியாழக்கிழமை**

- பிரான்சில் வளர்ந்து வரும் இனவாதத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் சட்டமூலம் ஒன்று கொண்டு வரப்படும் என நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.
- ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் ஜெல்சினின் சத்திர சிகிச்சையில் அமெரிக்க டாக்டர் ஒருவரும் கலந்து கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
- பெல்ஜிய உதவிப் பிரதமர் ஆந்திரே கோல்ஸ் சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கில் ஏற்பட்டுள்ள திருப்பம் காரணமாக அவ் வழக்கை முன்பு விசாரித்த நீதிபதிகளும் விசாரணைக்குள்ளாகலாம் என அறிய வருகின்றது.

**13.09.96 வெள்ளிக்கிழமை**

- அல்ஜீரியாவில் எதிர்க் கட்சிகள் அரசுடன் இணைந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர்.
- மொறோக் நாட்டில் Jeune Afrique என்ற புத்தகத்துக்கு இருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.
- அரபு லீக்கின் செயலாளர் நாயமாக சவீமா அகமட் (28வயது)) பதவியேற்றுள்ளார். 1945 இல் உருவாக்கப்பட்ட அரபு லீக்கில் உருவாக்கப்பட்ட இவ் ஸ்தாபனத்தில் இப் பதவிவகிக்கும் முதல் பெண் இவராகும்.
- பிரான்சின் மார்சே நகரில் வெள்ளை இன இளைஞன் ஒருவர் குத்திக் கொல்லப்பட்ட விவகாரத்தை அரசியலாக்க இனவாதக் கட்சி முயன்றுள்ளது. பாரிய ஊர்வலம் ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

**14.09.96 சனிக்கிழமை**

- மொறோக் நாட்டில் பாராளுமன்றத்தில் இரு சபைகளை உருவாக்கும் யோசனை தொடர்பாக எடுக்கப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்பில் மக்கள் அதனை ஆதரித்து வாக்களித்துள்ளனர்.
- கனடாவைச் சேர்ந்த திருத் தந்தை Hubert O'Connor பாலியல் குற்றம் தொடர்பாக நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டுள்ளார்.
- ருமேனியாவில் meningite என்ற தொற்று நோய் வேகமாக பரவி வருகின்றது 28 பேர் பலியாகி 450 பேர் நோய் வாய்ப்பட்டுள்ளனர்.

**15.09.96 ஞாயிற்றுக்கிழமை**

- வட ஈராக்கில் உள்ள ஈரானை அண்மித்த குர்திஸ் பகுதியில் வைத்து நான்கு பிரெஞ்சு சமூக சேவகர்கள் இனந் தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளனர்.
- ஜப்பானிய இளைஞர் ஒருவர் தனிப் படகில் 8000 கி.மீ தூரத்தை கடந்து சாதனை படைத்துள்ளார். இவருக்கு 14 வயது.
- GREEN PEACE எனப்படும் சூழல் பாதுகாப்பு அமைப்பு தனது 25 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றது.
- அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் மாதம் நடைபெற உள்ள வேளையில் ஈராக் மீது இன்னுமொரு தாக்குதல் நடாத்த அமெரிக்கா திட்டமிடுவதாக அரபுச் செய்திகள் தெரிவித்தன.
- இன்று அறிஞர் அண்ணாவின் 88வது பிறந்த தினம்; சென்னையில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

# “சந்திரிகா பிரபாகரனுடன் பேசியிருந்தால் பிரச்சினை பூதாகரமாகியிருக்காது”

தென் ஆபிரிக்க பிரச்சினையை சமாதான முறையில் தீர்த்துக் கொள்ள, தற்போதைய ஜனாதிபதி நெல்சன் மண்டேலோவும் முன்னாள் ஜனாதிபதி டி.கிளார்க்கும் இரண்டு வருடகாலம் வன் டு வன் என்ற ரீதியில் ரகசிய பேச்சை நடத்திய பின்னரே சமாதான விவகாரம் அம்பலமாகியது. அதேபோல் இந்த அரசு பதவிக்கு வந்ததும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா புலிகள் இயக்கத் தலைவருடன் 'வன் டு வன்' என்ற ரீதியில் நேராக அல்லது சர்வதேச மத்தியஸ்தர் ஒருவர் மூலம் பேச்சு நடத்தியிருந்தால் கருத்து வேறுபாடுகளைத் தவிர்த்திருக்கலாம். இதனால் இனப்பிரச்சினை தீர்வுக்கும் ஒரு வழி ஏற்பட்டிருக்கலாம்.

இவ்வாறு ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் நிதி அமைச்சருமான ரொனி டீ மெல் கடந்த 13.04.96 வெள்ளிக்கிழமை சிறீலங்கா அரச தொலைக்காட்சியான ரூபவாஹினிக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

**கேள்வி : தற்போதைய வடக்கு யுத்தத்தை நிறுத்தி அமைதியை ஏற்படுத்த எடுக்க வேண்டிய நடைமுறை என்ன என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?**

**ரொனி:** உண்மையை சொல்லப் போனால் இந்தப் பிரச்சினையை இந்த அரசாங்கம் குழப்பிக் கொண்டுள்ளது. இந்த அரசாங்கமும், ஜனாதிபதியாக சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவும் பெருமளவு மக்கள் ஆதரவுடன் பதவிக்கு வந்தவர்.

> *ஒரு பக்கத்தால் யுத்தத்தை நடத்திக் கொண்டு சமாதானம் ஏற்படுத்துவது மிகவும் கஷ்டமான காரியம். இப்போது நடப்பது முழுமையான யுத்தம். அதுவும் தோல்வி யுத்தம் என்றுதான் கூறவேண்டும். ஏனெனில் பரந்தனில் இருந்து கிளிநொச்சி வரையிலான அண்மைய இராணுவ நடவடிக்கையின் போது ஏற்பட்ட இடஞ்சல்களை பார்க்கும் போது இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வு காண எடுக்கப்படும் முயற்சியும் தோல்வியென்றே கருதவேண்டியுள்ளது.*

அதற்கு முதல் காரணம்: இந்த நாட்டு மக்கள் நாட்டில் அமைதி ஏற்பட வேண்டும் என்பதை வெகுவாக எதிர் பார்க்கின்றனர். இரண்டாவது: நாட்டில் ஊழல், மோசடிகள் ஒழிக்கப்பட வேண்டும்.

இந்த இரு காரணங்களுக்காகத்தான் மக்கள் பெருமளவு ஆதரவு வழங்கி பொதுஜன முன்னணியை அரசாங்கம் அமைக்கவும், சந்திரிகாவை ஜனாதிபதியாகவும் அவர்கள் ஆக்கியுள்ளனர்.

அவ்வாறு அரசாங்கத்தை அமைக்க முடிந்ததுடன் ஜனாதிபதியாகவும் பதவியேற்ற கையுடனேயே ஜனாதிபதி சந்திரிகா நேராக புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுடன் பேச்சு நடத்த நடவடிக்கை மேற்கொண்டிருந்தால் அதாவது வன் டு வன் (ஒருவருக்கொருவர்) என்ற ரீதியில் நேராகப் பேசியிருந்தால் இந்தப் பிரச்சினை தீருவதற்கு ஒரு வாய்ப்பு இருந்திருக்கும்.

கிடைத்த வாய்ப்பை இந்த அரசாங்கம் குழப்பிக் கொண்டுள்ளது என்று தான் நான் நினைக்கிறேன்.

புலிகள் இயக்கத்தினருடன் நடத்திய பேச்சு வார்த்தையிலும் அரசாங்கம் அனுபவமற்ற தன்மையை தைரியமின்மையை காட்டியிருந்தது.

தென் ஆபிரிக்காவை எடுத்துக் கொண்டால் மண்டேலாவுக்கும், டி.கிளார்க்குக்கும் இடையிலான சமாதான பேச்சுவார்த்தை அனைத்துமே மண்டேலா சிறையில் இருந்தபோது யாருக்கும் தெரியாதவகையில் இரண்டு வருட காலம் வன் டு

## யுத்தத்தை நடத்திக் கொண்டு சமாதானத்தை கொண்டு வர முடியாது

வன் என்று ரீதியில் எப்படி தென் ஆபிரிக்க பிரச்சினையை சமாதானமாக முடித்துக் கொள்வது என்று இந்த இரகசியப் பேச்சுவார்த்தை அமைந்தது. அவ்வாறான பேச்சுவார்த்தை ஒன்றை இந்த அரசு பதவிக்கு வந்ததும் ஏற்படுத்திக் கொண்டிருந்தால் சந்திரிகா யாழ்ப்பாணத்துக்கு சென்று பிரபாகரனுடன் பேச்சு நடத்தியிருக்க வேண்டும் என்று நான் கூற வரவில்லை. அவ்வாறான நடைமுறை ஒத்துவராதிருப்பின் அல்லது முடியாதநிலையில் சர்வதேச மத்தியஸ்தர் ஒருவரை அல்லது ஒவ்வொரு பக்கத்துக்கும் ஒவ்வொரு மத்தியஸ்தரை நியமித்துக் கொண்டு 'வன் டு வன்' என்ற ரீதியில் பேச்சு நடத்தியிருந்தால் பல கருத்து வேறுபாடுகளை தவிர்த்திருக்கலாம் என்பதே என் கருத்து.

**கேள்வி: விடுதலைப்புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கம் என்று சர்வதேச ரீதியில் கணிக்கப்பட்டது. பழைய சம்பவங்களைப் பார்க்கும் போது இவர்கள் பேச்சு வார்த்தை மூலம் பிரச்சினைகளை தீர்ப்பதில் அதிக ஆர்வம் காட்டவில்லை என்பது நன்கு தெரிகிறது. 1988 இல் இது போன்ற ஒரு சுற்று பேச்சுவார்த்தையின்போது மேலும் அவகாசத்தை பெற்றுக் கொள்வதையே நோக்கமாகக் கொண்டிருந்தனர்.**

**ரொனி:** இது பற்றி எனக்கு சரியாகத் தெரியாது. நான் ஒரு போதும் புலிகள் இயக்கத்தினருடன் நேராக பேச்சு நடத்தாததால் பிரபாகரனை சந்திக்காததால் புலிகள் இயக்கத்தினர் இவ்விடயத்தில் எப்படி நடந்து கொள்வார்கள் என்று எனக்கு கூற முடியாது. எனினும் 25 வருடகாலம் பிலிப்பைன்ஸில் மோரோ தேசிய முன்னணி கெரில்லா இயக்கத்தினருடன் அரசு யுத்தம் செய்தது. ஒரு இலட்சத்து 25 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். எனினும் இப்போது பேச்சு வார்த்தையில் அரசுக்கும் கெரில்லாக்களுக்கும் இடையே சமாதானம் ஏற்பட்டுள்ளது. அதே போலவே



பல நாடுகளில் சமாதானம் ஏற்பட்டிருக்கிறது. பலஸ்தீன - இஸ்ரேலிய பிரச்சினை இதற்கு மற்றொரு உதாரணம். வன் டு வன் என்ற ரீதியில் இதய சுத்தியுடன் பேச்சு நடத்தி இந்த பிரச்சினைகளின் போது சமாதானம் காணப்பட்டுள்ளது. எனவே பேச்சு வார்த்தை மூலம் சமாதானம் ஏற்படுத்த முடியாது என்று கூறுவதில் அர்த்தம் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

**கேள்வி: பேச்சுவார்த்தை மூலம் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சி செய்வது நல்லது என்று கருதுகிறீர்களா?**

**ரொனி:** ஆம். அப்படித்தான் நான் நினைக்கிறேன். எந்த வகையிலாவது இந்த நாட்டுக்கு சமாதானம் தேவை. சமாதானம் இன்றி இலங்கை என்றுமே அபிவிருத்தியைக் காணப்போவதில்லை. அப்படி இல்லாவிட்டால் மற்றைய அனைத்து நாடுகளும் நம்மை முந்திச் சென்றுவிடும். நாம் பின்தங்கிவிடுவோம். என்றுமே வறுமை நாடாகத்தான் இருப்போம். எனவே இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமாயின் இந்த நாட்டின் உக்கிரமான பிரச்சினைகளான வேலையில்லாப் பிரச்சினை ஆகியவற்றை தீர்க்க வேண்டுமாயின் சமாதானத்தை ஏற்படுத்தியே ஆகவேண்டும் என்பதுதான் எனது கருத்து.

**கேள்வி: எனினும் முதலில் இராணுவ நடவடிக்கை மூலம் புலிகளை தோற்கடித்த பின்னரே பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்ற சிலரின் நிலைப்பாடுபற்றி?**

**ரொனி:** என்னைப் பொறுத்த வரை உலகில் எந்தவொரு இடத்திலாவது யுத்தத்தால் மட்டும் இது போன்ற பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டிருப்பதாக நான் கேள்விப்பட்டதில்லை. எது எப்படியிருப்பினும் இறுதியில் பேச்சுவார்த்தைக்கே வர வேண்டும். அப்படி வராமற் போனால் இந்த நாடு என்றாவது ஒருநாள் இரண்டாக பிரிவதைத் தடுக்க முடியாது.

**கேள்வி: ஒரு பக்கத்தில் யுத்தம் நடத்திக் கொண்டு மறுபக்கத்தால் சமாதானம் பேசமுடியும் என்று நினைக்கிறீர்களா?**

**ரொனி:** ஒரு பக்கத்தால் யுத்தத்தை நடத்திக் கொண்டு சமாதானம் ஏற்படுத்துவது மிகவும் கஷ்டமான காரியம். இப்போது நடப்பது முழுமையான யுத்தம். அதுவும் தோல்வி யுத்தம் என்றுதான் கூறவேண்டும். ஏனெனில் பரந்தனில் இருந்து கிளிநொச்சி வரையிலான அண்மைய இராணு நடவடிக்கையின் போது ஏற்பட்ட இடஞ்சல்களை பார்க்கும் போது இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வு காண எடுக்கப்படும் முயற்சியும் தோல்வியென்றே கருதவேண்டியுள்ளது.

**கேள்வி: இந்த யுத்தத்துக்கு எமது தேசிய வருமானத்தில் பெரும் பகுதி செலவாகிறது. உங்கள் காலத்தில் பாதுகாப்பு செலவீனம் 20 முதல் 25 பில்லியன் ரூபாவாக இருந்தது. இப்போது அது பெருமளவு அதிகரித்துள்ளதே?**

**ரொனி:** இப்போது 50 பில்லியன் ரூபாவரை நாம் இந்த யுத்தத்திற்காக செலவிட வேண்டியுள்ளது. இது பாரிய செலவீனமாகும். இது எமது பொருளாதாரத்தை மிகவும் பாதிக்கிறது.

> ***இந்திய அமைதிப்படை திரும்பிச் சென்ற அன்று நான் ராஜீவ்காந்தி அழைத்ததன் பேரில் புதுடில்லியில் இருந்தேன். அப்போது ராஜீவ்காந்தி என்னிடம் நேரில் கூறியது இப்போதும் எனது நினைவில் இருக்கிறது. “உங்கள் அரசு என்ன முட்டாள் தனமான காரியத்தை செய்கிறது. இன்னும் 3 மாத காலம் எனக்கு அவகாசம் கொடுத்திருந்தால் நான் எனக்குரிய வேலையை முடித்திருப்பேன்” என்று அவர் கூறினார்.***

**கேள்வி: இந்த யுத்த செலவீனம் எமது வளர்ச்சியை அபிவிருத்தியை பெரிதும் பாதிக்கின்றது. இந்த நிலையில் நீங்கள் நிதி மந்திரியாக இருந்தால் நிலைமையை சமாளிக்க என்ன நடவடிக்கை எடுத்திருப்பீர்கள்.**

**ரொனி:** எனது காலத்திலும் 83 முதல் 88 வரை இந்த யுத்தம் நடந்தது. இந்த அளவுக்கு நடந்தது என்ற கூறமுடியாது. ஆனால் அப்போதும் யுத்தம் நடந்தது. ஆனால் நான் யுத்தத்துக்கு ஏற்படும் செலவினம், அபிவிருத்திக்கான ஒதுக்கீடு, மக்கள் தேவைகளுக்கான செலவினம் இவை மூன்றுக்கும் ஏற்படும் செலவுகளை சம நிலையில் இருக்குமாறு பார்த்துக் கொண்டேன். ஆனால் இப்போது இந்நிலை மாறியுள்ளது. இப்போது யுத்தச் செலவுகள் கட்டுக்கடங்காத அளவுக்கு போய்விட்டன. எனவே அபிவிருத்திக்கும் மக்கள் நலனுக்கும் குறைந்தளவு நிதியையே ஒதுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது எனினும் யுத்தத்தை விரைவில் முடித்துக் கொண்டால் இதைத் தாங்கிக் கொள்ளலாம் என நினைக்கிறேன். வருடக் கணக்கில் யுத்தம் தொடர்ந்தால் அது எமக்குத் தாங்காது. 83 முதல் 88 வரை யுத்தம் நடந்தபோதும் நாம் அபிவிருத்தி நடவடிக்கைகளை கைவிடவில்லை. அக்காலத்தில் தான் நாம் ரந்தெனிகல, சமனலவெவ நீர்த் திட்டங்கள், சப்புஸ்கந்தை எண்ணை சுத்திகரிப்பு நிலையம் ஆகிய திட்டங்களை ஆரம்பித்தோம். பியகம தெற்கு வர்த்தக வலயம் ஆரம்பிக்கப்பட்டதும் அப்போதுதான்.

**கேள்வி: வடக்கு கிழக்கு யுத்தம் 13 வருடகாலம் இடம்பெற்று வந்துள்ளது. சமாதான அறிகுறிகள் இன்னும் ஏற்படவில்லை. இத்தனை நீண்டகாலம் இந்த யுத்தத்தை நிறுத்த முடியாது போன காரணம் என்ன வென்று நினைக்கிறீர்கள்?**

**ரொனி:** இதற்கு சரியாக சொன்னால் பல காரணங்கள் உண்டு. ஐ.தே.க. அரசு பல சமயங்களில் இந்த யுத்தத்தை முடிக்க நடவடிக்கை எடுத்தது. இதில் ஒன்று இலங்கை - இந்திய உடன்படிக்கை, திம்புப் பேச்சு வார்த்தை, சர்வகட்சி மகாநாடு ஆகியவற்றை குறிப்பிடலாம். எனினும் உரிய வகையில் இதனை நிறுத்த முடியாமற் போய்விட்டது. அப்போதும் பல தடவைகள் யுத்த நிறுத்தம் அமுல் செய்யப்பட்டது நினைவிருக்கலாம்.

இந்திய அமைதிகாக்கும் படையை திருப்பி அனுப்பியதால் ஐ.தே.க முட்டாள்தனமான தவறொன்றை செய்து விட்டது. அப்போது நான் இங்கிலாந்தில் இருந்தேன். எனவே இந்த விடயத்தில் எனக்கு எதுவும் செய்ய முடியாத நிலை இருந்தது.


இந்திய அமைதிப்படை திரும்பிச் சென்ற அன்று நான் ராஜீவ்காந்தி அழைத்ததன் பேரில் புதுடில்லியில் இருந்தேன். அப்போது ராஜீவ்காந்தி என்னிடம் நேரில் கூறியது இப்போதும் எனது நினைவில் இருக்கிறது.

“உங்கள் அரசு என்ன முட்டாள்தனமான காரியத்தை செய்கிறது. இன்னும் 3 மாதகாலம் எனக்கு அவகாசம் கொடுத்திருந்தால் நான் எனக்குரிய வேலையை முடித்திருப்பேன்” என்று அவர் கூறினார்.

*நன்றி: வீரகேசரி*



# சிறுவர் முற்றம்



இவ் வாரம் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வி ந. [redacted] பல்கலையும் கற்று சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## உங்கள் கை வண்ணம்



***இவ் வாரக் கைவண்ணம்***

**செல்வி. மேகலா செல்வராஜா**

வயது: 8 (18.03.1988)
இடம்: 8051 Zurich,
SWISS

### கிளி

கிளி அழகான பறவை.
கிளி பேசும்.
அது கீ. கீ. என்று கத்தும்
அது பச்சை நிறம் உடையது
அதின் சொண்டு சிவப்பு நிறமானது.
கிளி செல்லப் பிராணி.
கிளி பழங்களை விரும்பி உண்ணும்.
கிளி பொந்தில் வாழும்.
அது முட்டை இடும்.
அது குஞ்சு பொரிக்கும்.
கிளியை எல்லோரும் விரும்பி வளர்ப்பார்கள்.



**செல்வி. மிதுலா செல்வராஜா**

வயது: 8 (18.03.1988)
இடம்: 8051 Zurich,
SWISS



### காகமும் தண்ணீரும்

ஒரு நாள் காகம் ஒன்று தண்ணீர் தாகத்தால் அலைந்தது. கடைசியாக ஒரு குடத்தைக் கண்டது. அதற்குள் சிறிதளவு தண்ணீர் இருப்பதைக் கண்டது. அதற்கு தண்ணீர் எட்டவில்லை. பின்பு அருகில் இருந்த சிறிய கற்களை குடத்தினுள் போட்டது. தண்ணீர் மேலே வந்தது. காகம் தாகம் தீர தண்ணீரைக் குடித்தது. பின்பு கா. கா என்று கத்திக் கொண்டு சந்தோஷமாகப் பறந்தது.

## விடுமுறை நாட்கள்......

தனது விடுமுறை நாட்களைப் பற்றி எழுதி அனுப்பியவர்



**செல்வன். திசவீரசிங்கம் நீலன்**

வயது: 11 (30.05.85)
6200 AABENRA,
DENMARK



மலையில் ஓடும் இரயில்

### எனது விடுமுறை நாட்கள்

1. நான் பாடசாலை விடுமுறைக்கு பிரான்ஸ், சுவிஸ், ஜேமனிக்கு போனேன்.
2. நான் பல இடங்களை சுற்றிப் பார்த்தேன்.
3. இவை பார்பதற்கு மிகவும் அழகாகவும் வியப்பாகவும் இருந்தன.
4. எனக்கு மிகவும் விருப்பமானது பாரிஸ் டிஸ்னிலான்ட். (Paris Disneyland)
5. இதைப் பார்பதற்கு ஒரு நாள் காணாது.
6. அங்கு நிறைய விளையாட்டுக்கள் உள்ளன.
7. அதில் வேகமாக ஓடும் மின்அதிசயமான றயில் எனக்கு பிடித்தது.
8. அவற்றில் நான் திரும்ப திரும்ப விளையாடினேன்
9. அது மிகவும் வேடிக்கையாக இருந்தது.
10. இதனை எனக்கு திரும்ப திரும்ப போய் பார்க்கவேணும் போல் இருக்கிறது.

தி. நீலன்

## தெரிந்து கொள்ளுங்கள்

### மிகப்பெரிய பூ



பிள்ளைகளே! உலகத்திலேயே மிகப் பெரிய பூவை உங்களுக்குத் தெரியுமா? இந்தப் படத்தில் இருக்கின்ற 'ரிட்டன் அரும்' என்ற பூதான் உலகத்திலேயே மிகப் பெரியதாம். இந்தப் பூவின் உயரம் சாதாரண மனிதர்களையும்விட உயரமானது. இதனது உயரம் 2 மீற்றர், அகலம் 1 மீற்றர். நான்கு வருடங்களுக்கு ஒரு முறை பூக்கும் இதன் தாய்நாடு இந்தோனேசியா, நீங்கள் படத்தில் காணும் பூ பிரித்தானியாவில் உள்ள தாவரவியல் பூங்காவில் வளர்க்கப்படுகிறது. அப்பூவை ஒருவர் வியப்போடு எட்டிப் பார்க்கிறார். இத்தனை பெரிய பூவா? நீங்கள் வியப்பதும் எமக்குப் புரிகிறது!

## கவிதை பாடுவோம்

### இரவு

எங்கும் ஒரே அமைதி
நட்சத்திரங்களை
தூங்கச் செய்யும்
வட்ட நிலாவின் பிரகாசம்
அமைதியை ஊடறுத்து
எழுகின்ற சத்தங்கள்....
எங்கேயோ உறுமும்
ஆந்தையின் கண்கள்
உணவைத்தேடி மின்னும்.
தவளையின் பாடல்கள்
எங்கும் எதிரொலிக்கும்
என்னுள் எழுகின்ற
பயத்தை விரட்டி
இரவின் அழகில்
கலக்கத் துடிக்கிறேன்.

செல்வன். சி. அனுராக், வயது 16
BONDY, FRANCE.

## பிறேமன் தமிழ்க் கலை மன்றம்

**நான்காம் ஆண்டு நிறைவுக் கலைவிழா**

**காலம்:** 05.10.96 சனிக்கிழமை 16.00 மணி
**இடம்:** Haus Im Park மண்டபம்
Zuricher Str-40, 28325 Bremen

*அனைவரும் வருக! ஆதரவு தருக!*

## பிறேமன் தமிழ்க் கலை மன்றம் நடாத்தும்

**மாபெரும் ஐரோப்பிய நாடகப் போட்டி-96**

**காலம்:** 07.12.96 சனிக்கிழமை
**இடம்:** Buger Und Sozial zentrum,
Amersfooter Str-8, 28259 Bremen (Huchting)

*இந் நாடகப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் மன்றங்கள், ஒன்றியங்கள், நாடகக் குழுக்கள் கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களையும் விபரங்களையும் பெற்றுக் கொள்ளவும்.*

15/11/96 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு:
M. Lingeswaran, Vlissinger str.11, 28259 Bremen.
Tel: 0421-5834173 / Fax: 0421-584173



## தலைமுறை



**29.09.96 ஞாயிறு 15.30, 18.30 மணிக்கு**

இசை: சந்திரன் ஒளிப்பதிவு: சுதன்


பின்னணி பாடியவர்கள்:
அப்சராஸ் இசைக் குழுவின் பாடகர்கள்

*இது எங்கள் மீதான எங்களின் பார்வைகள் உங்கள் சிந்தனைக்காக*



# இதோ விற்பனையில் *VIDEO CD DECK*

*முதல் முறையாக ஐரோப்பாவில் இறக்குமதி செய்து விநியோகிக்கிறோம்!*



**PHILLIPS Video CD Player**

* 5 CDக்கள் ஒரே முறையில் போடக்கூடியது,
* துல்லியமான ஒலி,
* மிகத் தெளிவான படங்கள்,
* சாதாரண Audio CD க்கள் பாவிக்கக்கூடியது

**விலை: 3950Frs***

இலகு தவணைமுறை வசதிகள் செய்து கொடுக்கப்படும்

Video CD Player வாங்குபவர்களுக்கு ஒரு CD இலவசம்

ஒரு Video CD போடக்கூடிய சிறிய கருவியும் விற்பனைக்குண்டு (Walkman வடிவம் கொண்டது)

**விலை: 2950Frs***

*ஐரோப்பாவிற்கான ஏக விநியோகஸ்தர்கள்:*

Frs* = பிரெஞ்சு பிராங்குகள்

# LUNE International

**5, Rue Perdonnet, 75010 Paris. M°: La Chapelle ou Gare du Nord - Tel: 42 09 21 43**

# புகலிட நிகழ்வுகள்

## பிரான்சில் த.புனர்வாழ்வு கழகத்திற்குநிதி உதவி வழங்கிய விளையாட்டுக் கழகம்

அண்மையில் சக்தி வீடியோ ஸ்தாபனத்தார் ஆதரவில், நல்லூர் ஸ்தான் விளையாட்டுக் கழகம் நடாத்திய மென்பந்த துடுப்பாட்ட போட்டியின் போது, தமிழீழத்தில் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புப் படைகளால் தமது வாழ்விடங்களை இழந்த ஏதிலிகளான எம் மக்களின் புனர் வாழ்வுக்காக, பிரான்ஸ் - நல்லூரர் ஸ்தான் விளையாட்டுக் கழகம் தாம் சேகரித்த 5000 பிரெஞ்சு பிராங் பணத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழக பிரெஞ்சுக் கிளையிடம் ஒப்படைத்துள்ளனர்.

தாய்நாட்டில் எமது மக்கள் படும் துயர் கண்டு இவர்கள் செய்த பணி தொடரவேண்டும் என்பதோடு, இத்தகைய ஊக்கமும் முயற்சியும் ஏனைய விளையாட்டுக் கழகங்களுக்கும், அமைப்புக்களுக்கும் ஒரு புத்துணர்ச்சியையும், ஊக்கத்தையும் தோற்றுவிக்கும் என தாம் எதிர்பார்ப்பதாக தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தினர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறே வவுனியா எவர்கிறீன் விளையாட்டுக் கழகமும், பாடுமீன் விளையாட்டுக் கழகமும் தங்கள் கழகங்கள் மூலம் சேகரிக்கப்பட்ட நிதியை புனர்வாழ்வுக் கழகத்திடம் ஒப்படைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நோர்வேயில் நடந்த வடதுருவ வார்ட்டோ தமிழர் சங்கத்தின் 6வது ஆண்டு நிறைவு விழா

வார்ட்டோ தமிழ் சங்கத்தால் கடந்த 31.08.96 அன்று விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது. விளையாட்டுத்துறைத் தலைவர் பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டிகளில் சிறார்கள் முதல் பெரியோர்கள்வரை உற்சாகத்துடன் பங்குபற்றினார்கள்.

ஓட்டப் போட்டிகள், தடை ஓட்டப் போட்டிகள், வேக நடைப் போட்டி, உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், சங்கீதக்கதிரை, கயிறிழுத்தல், விநோத உடைப் போட்டி என பல்வேறு போட்டிகள் நடைபெற்றன.

07.09.96 சனிக்கிழமை வார்ட்டோ திரையரங்கில் மாலை 6 மணிக்கு சங்கத்தலைவர் சுந்தரம் சிவநேசன் தலைமையில் ஆண்டுவிழா ஆரம்பிக்கப்பட்டது. இவ் விழாவில் பிரதம விருந்தினர்களாக வார்ட்டோ சுகாதார உத்தியோகஸ்தர் சூல் வேய், வார்ட்டோ தொழிற்சாலை அதிகாரி தேவா கலந்து கொண்டனர்.

பிரதமவிருந்தினர் தனதுரையில், தமிழ் மக்களின் கலைகலாச்சாரத்தை தாம் மதிப்பதாகவும், வார்ட்டோவில் நோர்வேஜி மக்களுக்கான கலாச்சாரக் கூட்டம் அமைப்பதற்காக 10 வருடங்களாக முயற்சிகள் செய்தும் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால் தமிழ் சங்கத்தால் மிகவும் குறுகிய காலத்தில் தமிழ்க் கலைக்கூடம் ஆரம்பிக்கப்பட்டு நோர்வேஜி மக்களுடன் இணைந்து சிறப்பாக செயற்படுவதையிட்டு தாம் ஆனந்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## ஜேர்மனி நொய்ஸ் முத்தமிழ் கலை மன்றத்தின் 4வது பௌர்ணமிவிழா

இடம்: N.B.V. (பூக்கடை மண்டபம்), HAMMER LAND STR-103, 41460 NEUSS., காலம்: 21.09.96 சனி மாலை 4.30 மணி

தவிர்க்க முடியாத காரணத்தால் இவ் விழா திகதி மாற்றப்பட்டுள்ளது.

இவ் கலைவிழாவில் மௌன அஞ்சலி, நாட்டியம், கர்நாடக இசை, திரையிசை நடனங்கள், கிராமிய நடனங்கள், தாளவாத்திய கச்சேரி, நாடகம், சிரிக்கவைக்கும் விகடங்கள், முன்னணிக் கலைஞர்களின் பின்னணி இசையில் மெல்லிசைக் கானங்கள் என்பன உட்பட பல நிகழ்ச்சிகள் இடம் பெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது.


விரைவில்

பிரெஞ்சு – ஆங்கில

வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன

ஆசிரியர் - ச. சச்சிதானந்தம்

இடம்: 166, Bld. Alsace Lorraine, Le Perreux,
RER 'A': Neuilly Plaisance

தொடர்புகட்கு: நியூ ஐங்கரன் – 43 24 44 57


# தியாக தீபம் லெப்.கேணல் திலீபன்

## 9வது ஆண்டு நினைவு எழுச்சி நாட்கள்

## 15 செப். 96 ⇔ 26 செப். 96



மக்களின் விடுதலைக்கு... மண்ணின் விடுதலைக்கு ஆயுதப் போராட்டத்தை வரிந்து கொண்ட போராளி. பாதையை வேறாக்கி இலக்கை நோக்கி தன்னை ஆயுதமாக்கி பயணித்த அற்புதமான அந்தப் போராளி எமது புறக்கண்ணில் இருந்து மறைந்து அகக் கண்ணில் நிறைந்து ஆண்டு ஒன்பதாகின்றது.

காலங்கள் நீண்டு செல்கின்ற போதும் அந்தத் தியாகியின் நினைவுகள் ஆழப்பதிந்து இன்னும், இன்னும் ஒளிபெற்றுத் துலங்குகின்றது.

உணவின்றி நீர் இன்றி, அந்த மென்மையான இதயம், தன் மக்களுக்காய் தனது தாய் நாட்டுக்காய் அணுவணுவாய் துடித்தே அடங்குவது என்று பிடிவாதமாய் முடிவெடுத்தது.

ஒரு பிரச்சினையின் நெருக்கடியை முன்பே தெரிந்து கொண்டு உணர்ந்து கொண்டு, தனது மக்களை அந்த இருட்குகையுள் இருந்து மீட்டெடுக்க தன்னைக் கொடுத்த உத்தம இதயம்.

எவ்வளவு மன உறுதிவேண்டும்.

எவ்வளவு இலட்சியப் பிடிப்பு இருந்திருக்க வேண்டும்.

தனது மக்களையும் தனது தாய்மண்ணையும் எவ்வளவு தூரம் நேசித்திருக்க வேண்டும்.

இல்லாது போனால் இத்துணை தியாகத்தை யாராலும் புரித்திருக்க முடியாது. அதைப்பற்றி சிந்தித்திருக்கவே முடியாது.

எமக்காக எமது மண்ணுக்காகவே தன்னை வேள்வித் தீயில் நிறுத்திய அந்த உத்தம மனிதனின் பெயரை உச்சரிப்பதே பெரும்பேறு.

அவரது வரலாறு எம்மில் பதிவாகட்டும். எங்கள் குழந்தைகளிடத்தே.... எங்கள் எதிர்காலங்களிடத்தே ஒரு எழுத்தும் சிதைவுறாமல் அவரது வாழ்வும் வரலாறும் பதியப்பட வேண்டியது எங்களது கடமை. அந்த உண்மை மனிதனின் நினைவுகளோடு தேசப்பணியாற்ற வேண்டியது எல்லோருடையதும் கடமை.

தன்னை வருத்தி பன்னிரண்டுநாளும் அந்த மெழுகுவர்த்தி ஏன் உருக்கிக் கொண்டது?

வரலாற்றில் இருட்டுக்கு ஒளியேற்ற தன்னைத் தீக்குச்சியாக்கி அந்த மெல்லிதயம் எரிந்து போனதே ஏன்?

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

கேள்விகள் கேட்போம். எதிர்ப்படும் விடையால் வேள்விகள் செய்வோம்.

*தமிழீழ விடுதலைப் புலிகள்*
*பிரெஞ்சுப் பணியகம்.*

## தியாகி திலீபனின் 9வது நினைவு நிகழ்ச்சிகள்

### ஜேர்மனி

இடம்: HENRI DUNANT STR - 65,
Universitat Alte PH, 45131 ESSEN

காலம்: 28.09.96 சனிக்கிழமை
மாலை 5.00 மணி

சிறப்பு நிகழ்ச்சிகள்:
நடனாஞ்சலி
நாடகம் (பங்களிப்பு)
நகையுரையாடல் (சிந்தனைவிழிப்பு)
தமிழிசை விடுதலை வழிபாடு

நிகழ்ச்சி ஏற்பாடு:
விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகம் - ஜேர்மனிக்கிளை.

### சுவிஸ்

இடம்: STADT CASINO
Steinen Berg-14, BASEL

காலம்: 22.09.96 ஞாயிற்றுக்கிழமை
பகல் 3.00 மணி

(பாசல் புகையிரத நிலையத்திலிருந்து Mustermesse Schifldnde நோக்கிச் செல்லும் 1ம், 8ம் இலக்க Tram ஏறி 3வது தரிப்பிடமான Barfusser platzல் இறங்கவும்)

சிறப்பு நிகழ்ச்சி:
கீதாஞ்சலி, கவிதாஞ்சலி
எழுச்சி நடனம் (பாசல் கலாநிகேதன் மாணவிகள்)
நாடகம் தாயுமானவர் நாயுமானவர்

நிகழ்ச்சி ஏற்பாடு:
தமிழீ விடுதலைப் புலிகள் சுவிஸ் கிளை.

### நோர்வே

திலீபன் நினைவுக் கலைமாலை

இடம்:
GRORUD SAMFUNNSHUSET
KALBAKKEN (அன்னை பூபதி தமிழ் கலைக்கூடத்திற்கு அருகில்)

காலம்: 28.09.96 சனிக்கிழமை
இரவு 7.00 மணி

சிறப்பு நிகழ்ச்சிகள்:
அஞ்சலி நடனம் : திலீப தாகம்
கவிதா அரங்கு : சொந்தச் சகோதரர் துன்பத்தில் வாடல்கண்டும்
சிறப்புரை / கலந்துரையாடல் : யாழ் குரு முதல்வர் அருட்தந்தை S.J. இம்மானுவல்
இசை நிகழ்ச்சி: அந்நியக்காற்றில் அழிந்த தீபம் (சங்கீத வித்துவான் - திலகேஸ்வரன்)
கரும்புலிகள் பற்றிய விவரணப் படக்காட்சி - உயிராயுதம் 4

### நெதர்லாந்து

எழுச்சிவிழா

இடம்: Wijkuerening Peeler Marke
Scharmbarg 35, ASSEN
(Peelo Winkel centrum அருகில்)

காலம்: 29.09.96 ஞாயிற்றுக்கிழமை
மாலை 3.30 மணி

நிகழ்ச்சி ஏற்பாடு:
தமிழீழ விடுதலைப்புலிகள், நெதர்லாந்துக் கிளை.




# பாப்பாவும் பாரதியும்

அந்தக் குழந்தையைப் பாருங்கள்!
புதிதாகப் பிறந்த வேகத்தில்
எவ்வளவு ஆனந்தத்தில் திளைக்கிறது
ஐந்து வயதோ, ஆறு வயதோ இருக்கலாம்.
சின்னஞ் சிறிய அக் குழந்தைக்கு
அன்னையின் அரவணைப்பு
எவ்வளவு அழகுகொடுக்கின்றது.
அதுமட்டுமா...
தந்தையின் எல்லையற்ற களிப்பாற்கிடைக்கும்
சந்தோஷப்பார்வைகள்.
இவைகளுக்கு மத்தியில்
அதோ பாருங்கள்!
அந்தக் குழந்தை கனவு காண்கிறது.
தன் வாழ்க்கையைப் பற்றியதான
பூங்கனவு
ஒரு அன்புசார்ந்த கனவு;
ஒரு கள்ளங்கபடமற்ற கனவு.
அவை-
கனிவென தம்மைத் தாமே
சொல்லாத கனவு.

அப்படி எதனைத்தான் இந்தக் குழந்தை கனவு காண்கிறது; தெரியுமா?

ஒரு புறாவினைப்போல் பூவுலகில் சிறகடித்துப் பறக்க விரும்பும் கனவு; ஒரு வாத்தினைப் போல் நீர்த் தடாகத்தில் நீந்தி விளையாட விரும்பும் கனவு. சந்திரனுக்குச் சென்று ஔவைப் பாட்டியிடம் கதை கேட்க விரும்புகின்ற கனவு.

இப்படி வியப்பூட்டும் உலகத்தினை கனவுகாண்கின்ற இந்தக் குழந்தை எவ்வளவு மென்மையான உணர்வுகளைக் கொண்டிருக்கிறது; தெரியுமா?

பூவுக்கு நிகரான மென்மை,
பஞ்சுக்கு நிகரான மென்மை,
பனித்துளிகளுக்கு நிகரான மென்மை அவை.

இந்தக் குழந்தை, தினமும் புதுமையாய்ச் சிலிர்க்கின்ற செவ்வண்ணப்பூ. இச் குழந்தை தனக்குள் நிறைந்த கற்பனைகளாலும், கவிதைகளாலும், பாடல்களாலும், ஓவியங்களினாலும் ஒரு பிரமிக்கத்தக்க உலகை தனக்குள் கொண்டிருக்கிறது. இந்த உலகம் எல்லை கடந்த பரந்த உலகம். அங்கே Tom மும் Jerry யும் கைகொட்டிச் சிரித்துப் பேசும்.

அடேயப்பா,
அங்கே பாருங்கள்!
கண்மூடித் திறப்பதற்குள்
அந்தக் குழந்தை எவ்வளவு வளர்ந்துவிட்டது.
பத்து, பன்னிரண்டு வயதிருக்கும் போலிருக்கிறதே.
ஆனால்-
அதன் முகத்தில் ஏனிந்தச் சோர்வு?
ஏனிந்தத் துயரம்?
ஐயகோ,
வாயில் வீணீர் வடிய
கள்ளங்கபடமற்றுச் சிரித்துத் திரிந்த
அந்தக் குழந்தையின் முகத்தில்
ஏனிந்தக் கோலம்?

ஓ!
தன் கனவுகளுக்கும்
நிஜங்களுக்கும் இடையிலான முரண்பாடுகளின்
வெளிப்பாட்டு நிலையா?
பூரணமாய்
தான் கண்ட வண்ணவண்ணக் கனவுகள்
நிஜமில்லை என்று உணர்ந்ததின்
வெளிப்பாடுதான் இத் துயரம்.

வளர்ந்த குழந்தைக்கு
உண்மை தெரியும்;
நிஜத்தினைப் புரிந்துகொள்ளும்!

தன் கனவிற்கும் நிஜத்திற்கும் முரண்பாட்டினைக் குழந்தை காணுமெனத் தெரிந்துதானா மகாகவி பாரதியார் பாப்பா பாடல்களைப் பாடினார் போலும்.

"ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா,
கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா"

குழந்தை ஓய்வின்றி, ஓடித்திரிந்து விளையாடும் போது சில சமயங்களில் அந்தக் குழந்தையைக் கண்டிக்கிறோமல்லவா. ஆனால், பாரதியார் குழந்தைகளை "ஓடிவிளையாடு பாப்பா" எனப் பாடுகிறார். குழந்தையின் முக்கிய இலட்சணம் விளையாட்டுத் தானே. அப்படி அக் குழந்தை ஓடி விளையாடும் போது, கூடியும் விளையாட வேண்டுமாம். அப்போது தான் ஒற்றுமையுணர்வு பெருகி, கூட்டு மகிழ்ச்சி ஏற்படும்.

குழந்தைக்கு விளையாட்டில் மட்டுமல்ல, சுற்றுப் புற விடயங்களிலும் விருப்பு இருந்தால்தான் வாழ்வில் உற்சாகமிருக்கும். குழந்தையின் வளர்ச்சிக்கேற்றபடி புறப்பொருளின் அழகினை எடுத்துச் சொல்ல வேண்டும் என்றுதான் பாரதியார் மற்றைய உயிரினங்கள் பற்றியும் பாடுகிறார்.

"சின்னஞ் சிறுகுருவி போலே - நீ
திரிந்து பறந்துவா பாப்பா,
வண்ணப் பறவைகளைக் கண்டு - நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா"

'சின்னஞ் சிறுகிளியே - கண்ணம்மா' எனப் பாடிய பாரதியார் குழந்தையைப் பார்த்து குருவியைப் போல் சுதந்திரமாக பறந்து, திரிந்து வா எனப் பாடுகிறார். வானவெளியில் பறந்துதிரியும் அழகிய வண்ணப் பறவைகளைக் கண்டு குழந்தை மகிழ்ச்சி கொள்ள வேண்டுமாம். இன்னும், பறவைகளிடமிருந்தே கற்பதற்கு நிறைய விடயங்கள் இருக்கின்றன.

பாரதி பின்னர் என்ன பாடுகிறார் தெரியுமா?

"பொய் சொல்லக் கூடாது பாப்பா - என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா" எனப்பாடி, தொடர்ந்து
"பாதகஞ் செய்பவரைக் கண்டால் - நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா,
மோதி மிதித்துவிடு பாப்பா - அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா" எனப் பாடுகிறார்.

இதே அர்த்தத்தில் தான், 'யெவ்கனி யெவ்டுஷென்கோ' என்ற ருஷ்யக் கவிஞர், பொய்கள் எனும் கவிதையில் பெரியோர்களுக்குச் சொல்கிறார்.

சிறுவர்களிடம் பொய்க் கதைகள்
சொல்லாதீர்கள்! தவறு.
பொய்யை உண்மையென்று
நிரூபிப்பது அதைவிடத் தவறு.
.........
எண்ணற்ற நம் துன்பங்களை
அவர்களுக்கு உரையுங்கள்!
வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும்
என்பதை மட்டுமல்லாமல் - அது
தற்போது எப்படி இருக்கிறது
என்பதையும் பார்க்கட்டும்.

தடைகள் இருக்கின்றன...
தகர்க்கச் சொல்லுங்கள்!
துயரங்களும் துன்பங்களும்
தோன்றக்கூடும்...
அழிக்கச் சொல்லுங்கள்!

பாரதியார் குழந்தைகளுக்கு நேரடியாகவே சொன்ன விடயங்களை, யெவ்கனி யெவ்டுஷென்கோ பெரியோர்களுடே சொல்கிறார்.

பாப்பா பாட்டில், பாரதியார் தொடர்ந்து...

"துன்பம் நெருங்கிவந்தபோதும் - நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா" எனவும்,

"...தேம்பி யழுங்குழந்தை நொண்டி - நீ
திடங்கொண்டு போராடு பாப்பா" எனவும் பாடுகிறார்.

ஆம், வஞ்சகம் நிறைந்த இந்நவுலகில் குழந்தை வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்; குழந்தை வாழ்வதற்காக போராடவும், போராடுவதற்காக வாழவும் கற்றுக்கொள்ள வேண்டும். எனவே, குழந்தை ஊக்கமற்ற கோழையாய் இருக்கவே கூடாது.

இன்னும்,

"சாதிகள் இல்லையடி பாப்பா; - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்" என்கிறார்
பாரதியார்.

ஆம், பாரதியின் பாப்பா பாடல் வெறும் விளையாட்டுக்காக பாடிய பாடலல்ல. அங்கே, அறிவின் பல மொட்டுக்களும் பூத்துக் குலுங்குகின்றன.

இன்னுமொன்றினையும் சொல்லாமல் இருக்க முடியவில்லை. இந்தப் புலம் பெயர்ந்த வாழ்வில் நம் குழந்தைகள் பலருக்கு தமிழே தெரியாத நிலை. தாய் மொழியே தெரியாத குழந்தைகள் வருங்காலத்தில் இருப்பார்கள் எனத் தெரிந்தா தன் பாப்பா பாடலில் பாரதியார்,

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே - அதைத்
தொழுது படித்திடடி பாப்பா" எனப் பாடினாரென எண்ணத் தோன்றுகிறது.

**தொகுப்பு: வர்மன்**


Neuss ORIENTAL SHOPPING CENTRE ம்
Dussel dorf INDO - CEYLON HOUSE ம்
இணைந்து வழங்கும்
காலவரையறையற்ற மாபெரும் மலிவு விற்பனை!
தரமான பொருட்களை குறைவான விலையில் பெற்றுக்கொள்ள முந்துங்கள்
இதோ மலிவிற்கு இங்கே உதாரணங்கள் சில....

* 100g கடுகு 0.49Pf,100g வெந்தயம் 49Pf, 100g பெ.சீரகம் 0.59Pf, 100g சி.சீரகம் 0.59Pf, 100g மிளகு 99Pf, 200g மல்லி 99Pf 454g புளி (தாய்லாந்து) 99Pf, 500 கிராம் மைசூர் பருப்பு 1.25Dm, 500g கிராம் கடலைப் பருப்பு 1.25Dm, 5Kg பசுமதி அரிசி (No1) 22.50 Dm மட்டும். 500g உ.பருப்பு 1.25 Dm இலங்கை முறைப்படி தயாரிக்கப்பட்ட உடன் ரோல் பாண், பணிஸ் வகைகளும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
* வீடியோ வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பாக வெளிவந்த அனைத்து வீடியோ பிரதிகளும் அரைக் கட்டண வாடகைக்கு (1Dm) வழங்கப்படும். அத்துடன் நீங்கள் விரும்பும் படத்தின் வீடியோப் பிரதிகளும் மலிவு விலையில் தரப்படும். சிறைச்சாலை, தேவராகம், எஜமான், மன்னன், குருதிப்புனல் பிரதி 6.90Dm மட்டுமே.
* ORIENTAL PARTY SERVICE அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் நீங்கள் விரும்பிய உணவு (சைவ, அசைவ) வகைகளை தயார் செய்து நிகழ்ச்சி நடைபெறும் மண்டபம்வரை விநியோகம் செய்யப்படும். அத்துடன் உணவு பரிமாறுவதற்கான எவர் சில்வர் பாத்திரங்கள் (சில்வர் கோப்பை, ரம்ளர், ஐஸ்கிரீம் கப்) போன்றவை குறைந்த வாடகையில் தரப்படும்.
* உங்களது எந்தவிதமான கொண்டாட்டங்களுக்கும் தேவையான சமையல் பொருட்கள் அனைத்தையும் எம்மிடம் வாங்கினால் காஸ் அடுப்புகள், பெரிய RICE COOKER, சமையல் பாத்திரங்கள் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.
* எமது விசேஷ சேவைகள்: உலகின் எப்பகுதிக்கும் குறைந்தவிலையில் விமான பயணச் சீட்டு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும் (அவசர பயணம் மேற்கொள்வோரின் நலன் கருதி விமான நிலையத்திலும் ரிக்கற்றுகள் விநியோகம் செய்யப்படும்)
* பிறந்தநாள், திருமணம், பூப்புனித நீராட்டு விழா போன்றவற்றிற்கான அழகான அழைப்பிதழ்கள், மண்டப சோடனைகள், மாலை வகைகள், ஐயர், வீடியோ, புகைப்பட பிடிப்பு அனைத்தும் குறைந்த செலவில் ஒழுங்கு செய்து தரப்படும்.

ORIENTAL SHOPPING CENTRE
Meerer Hof-L 11.12, 41460 Neuss.
Tel: 02131/278157 - Fax: 02131/278170

INDO - CEYLON HOUSE
Worringer Str-107, 40210 Dussel Dorf.
Tel: 0211/365317 - Fax: 0211/1649382

(ADV)

# புலிகளின் பலத்தை குறைத்து மதிப்பிட்ட ரோஹான் தலுவத்தை

சென்னை 'இந்து' பத்திரிகைக் குடும்பத்தைச் சேர்ந்த பத்திரிகை 'புரொண்ட்லைன்' (Frontline) கடந்த வாரம் இலங்கைத் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக இச் சஞ்சிகை நான்கு வெவ்வேறு கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. 'யுத்தம் தொடர்கிறது' என்ற தலைப்பில் அதன் கொழும்பு நிருபர் அமிற் ப்ரோ (Amit Baruaw) எழுதிய கட்டுரையின் சில பகுதிகளைப் பார்ப்போம்.

முன்னேறிய இராணுவத்திடம் யாழ்ப்பாணத்தை விட்டு விட்டு பின்வாங்கிய விடுதலைப் புலிகள் மீண்டும் இப்பொழுது தங்கள் யுத்த சக்தியை நிரூபித்துள்ளார்கள். யாழ்ப்பாண வெற்றி பற்றி மிகவும் பெரிதாக இலங்கை இராணுவம் விளம்பரப்படுத்திக் கொண்டாலும் யுத்தம் முடிவடையவில்லை. ஒரு தாக்குதல் நடந்ததும் அரச படைகள் நீண்ட ஓய்வெடுப்பதன் மூலம் விடுதலைப் புலிகள் தங்கள் படை அணிகளை மீளச் சேர்த்து அடுத்த பாரிய தாக்குதலை நடத்த உதவி புரிகிறார்கள். ஜூலை 18-ம் திகதி ஆயிரத்துக்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகள் முல்லைத்தீவு இராணுவ முகாமை நிர்மூலமாக்கி, கோடிக் கணக்கான ரூபாய் பெறுமதியான யுத்த தளபாடங்களை எடுத்துச் சென்றதன் மூலம் இது நிரூபிக்கப்பட்டுள்ளது.

## யுத்தம் எப்போது முடியும்?

கொழும்பில் உள்ள அரச முன்னணிப் பிரமுகர்கள் இந்த யுத்தம் அடுத்த ஆண்டு இறுதிக்குள் முடிந்து விடும் என உறுதி கூறினர். வேறு சிலர் அறுப்பது விகிதம் யுத்தம் முடிந்துவிட்டது எனக் கூறினர். இப்படியான கூற்றுக்கள் பலத்த எதிர்பார்ப்புக்களையும் விடுதலைப் புலிகளை உடனடியாக வெற்றி கொள்ள முடியும் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தின. ஆனால் அரசாங்கத்தின் இக் கூற்றுக்களை முல்லைத்தீவு படுதோல்வியானது மீள் பரிசீலனை செய்ய வைத்துள்ளது. முல்லைத்தீவு முகாம் வீழ்ச்சியை அடுத்து, அங்கு தமது முகாமை மீளமைக்க அனுப்பப்பட்ட படைகளும் அடித்து விரட்டப்பட்ட பின்பு மாற்று நடவடிக்கையாக கிளிநொச்சியைக் கைப்பற்ற அனுப்பப்பட்ட படைகளும் பரந்தனுக்கு மேல் முன்னேற முடியவில்லை. விடுதலைப் புலிகளின் படைகள் தொடுத்த கடுமையாமான தாக்குதல், படைகளை நிலைகுலைய வைத்துள்ளது. அரச படைகள் தமது நிலையை வலுப்படுத்திக் கொண்டிருப்பதாக தினம்தினம் செய்தி வெளியிட்டாலும், அரசினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை செயற்படுத்தும் திறமை படைகளுக்கு உண்டா என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

## தோல்வி ஏன்?

விடுதலைப் புலிகளின் பலமும் திறமையும் பற்றிய இலங்கை இராணுவத்தின் கணிப்பு தவறானது. உதாரணத்துக்குச் சொல்வதானால், முல்லைத்தீவு தோல்விக்கு முன்பு, இராணுவத் தளபதி ரோஹான் தலுவத்த Janes Defence Weekly இற்குக் கொடுத்த பேட்டி ஒன்றைக் குறிப்பிடலாம். விடுதலைப் புலிகள் ஒரு பலத்த தாக்குதலை நடத்தக்



கூடிய பலமும் தகுதியும் உடையவர்கள் அல்ல. இராணுவ முகாமுக்குள் எதிரிகள் உட்புக முடியாதபடி பலத்த அமைப்பை உருவாக்கியுள்ளோம். இத்துடன் பாதுகாப்பு வளையத்துக்கு வெளியேயும் எமது படைகள் ரோந்து செல்கின்றன. இவற்றைத் தாண்டி எமது முகாம்களை புலிகள் தாக்க முடி

# விடுதலைப் புலிகளுடன் சமரசத்திற்கு வருவதே சந்திரிகாவுக்கு ஒரே வழி

யாது என்றார். இப்படியான எல்லா முன்னேற்பாடுகளுடனும் இராணுவம் இருந்தும் முல்லைத்தீவு படுதோல்வி எப்படி ஏற்பட்டது?

அரசியல் பொருளாதார நிலைகளிலும் இலங்கை பெரும் சங்கடத்தை எதிர் நோக்குகிறது. அதோடு சர்வதேச மன்னிப்புச் சபையின் கண்டனத்துக்கும் இலங்கை அரசு உள்ளாகியுள்ளது. "இலங்கை அரசு மனித உரிமைகளைப் பாதுகாக்க உத்தரவாதம் அளித்தாலும், குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது. பரவலாக கைதுகள் இடம்பெறுகின்றன. சாதாரணமாக கொலன்னாவ எண்ணைக் குதங்கள் அழிக்கப்பட்ட பின் சுமார் ஆயிரம் மக்கள் ஐந்து நாள் இடைவெளியில் கைது செய்யப்பட்டனர். கொழும்பு மத்திய வங்கிக் குண்டு வெடிப்பின் பின்பும் இதேபோல் அலை அலையாக மக்கள் கைது செய்யப்பட்டனர்" என மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் கூறியுள்ளது.

## கடுமையான பாதை

மூன்றாவது ஆண்டில் கால் வைக்கும் சந்திரிகாவுக்கும் அவரது அரசுக்கும் கடுமையான பாதையே முன்புள்ளது. தொடரும் யுத்தத்தால் வரும் இமாலயச் செலவுகள், ஸ்தம்பித்துப் போன அரசியல் முன்னேற்றம், பொருளாதார சவால்கள் என்பவற்றை நாடு எதிர் நோக்குகிறது. உல்லாசப் பயணிகள் வருகையில் பெரும் வீழ்ச்சி, நிச்சயமற்ற அந்நிய முதலீட்டு நம்பிக்கையீனம் என்பனவும் நாடு எதிர் நோக்கும் துன்பங்களாகும்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் வெல்ல முடியாவிட்டால், அது எவ்வளவு கசப்பாக இருந்தாலும், விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதே தற்சமயம் இலங்கை அரசுக்குள்ள ஒரே ஒரு வழியாகும்...

## தமிழகத்தில் அகதிகள்

இதே பத்திரிகையில் "இன்னொரு புலம் பெயர்தல் - இலங்கைத் தமிழர் தென் தமிழ் நாட்டில்" என்ற தலைப்பில் நிருபர் ரி.எஸ்.சுப்பிரமணியம் எழுதிய கட்டுரையில் கூறியவற்றில் சில, "இலங்கையிலிருந்து தமிழகம் வரும் அகதிகள் உணவு இன்மை, பசி, பட்டினி, இராணுவ அட்டகாசம் ஆகியவை காரணமாக மிகுந்த துயரப்பட்டு அகதிகளாக வந்ததாகக் கூறுகின்றனர். ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு சோகக் கதை உண்டு. அவர்கள் களைத்தவர்களாக, அழுக்கு நிறைந்தவர்களான வெவ்வேறு பிரிவைச் சேர்ந்த கூட்டமாக வருகிறார்கள். இவர்களில் நாகலட்சுமி என்ற 19 வயது விதவைப் பெண்ணின் கதை பரிதாபமானது. அவர் தனது கைக் குழந்தையுடனும் சகோதரனுடனும் வந்திருக்கிறார். மூன்று மாதத்துக்கு முன்பு தனது கணவர் சிவபெருமான் (குமார்), இராணுவத்தினருக்கு இளநீர் பறித்துக் கொடுத்துவிட்டு, தேனீர் அருந்துவதற்காக சீனி வாங்கச் சென்றபோது, ஊரடங்குச் சட்



டம் இல்லாதபோதே இராணுவத்தினால் சுட்டுக் கொல்லப்பட்டார் எனவும், கணவரது உடலை நான்கு நாட்களுக்குப் பின்பே இராணுவம் தன்னிடம் கையளித்ததாகவும் கூறினார். கடைசியான அகதிகள் வருகையை மிகுந்த எச்சரிக்கையுடன் புதுடெல்லி அணுகுகிறது. இலங்கைச் சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டவர்கள் சமீப நாட்களாக இந்தியா வந்துள்ளனர். இந்த நிலை பற்றி நாம் அக்கறை கொண்டுள்ளோம். நிலைமை சீரடைய எல்லா முயற்சிகளும் செய்வோம் என இந்திய வெளியுறவுத்துறை அறிக்கை ஒன்றில் கூறியுள்ளது. தமிழ்நாடு சட்டசபையில் பேசும்போது முதல்வர் கருணாநிதி 'நாங்கள் அகதிகளை விரும்பி அழைக்காவிட்டாலும், அவர்களை வரவேற்று, வசதி செய்து கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை' என்றார். அவர் மேலும் பேசுகையில், 'அப்பாவித் தமிழர்கள் இலங்கையில் படுகொலை செய்யப்படுவதை இந்திய மத்திய அரசு கண்டிக்க முடியாவிட்டாலும், குறைந்தபட்சம் தனது கவலையையும் அக்கறையையுமாவது தெரிவிக்க வேண்டும்' எனக் கூறினார்." இவ்வாறு நிருபர் சுப்பிரமணியம் எழுதியுள்ளார்.

## பத்திரிகை எழுத்தாளரின் புலம்பல்

இவ்வார சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் இராணுவ ஆய்வாளர், இலங்கை அரசு சர்வதேச ரீதியில் தனது பிரச்சாரத்தை முடுக்கிவிட வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். இப்படிச் செய்யாதவிடத்து விடுதலைப் புலிகளின் சர்வதேச ரீதியான இராணுவ, அரசியல் பிரச்சாரத்துக்கு ஈடு கொடுக்க முடியாது போய்விடும். விடுதலைப் புலிகள் அரசியல் ரீதியான பிரச்சாரத்தை முன்னெடுத்து தமிழ் ஆதரவாளர்களிடமும் வெளிநாட்டவர்களிடமும் பணம் பெற்று புலிகளுக்கு யுத்த தளபாடங்களை அனுப்புகிறார்கள். விடுதலைப் புலிகளின் இந்தப் பிரச்சாரப் போருக்கு இலங்கை இராஜ தந்திரச் சேவையிலுள்ளவர்கள் ஈடுகொடுத்து முறியடிக்காவிட்டால் இலங்கைக்குக் கிடைக்கும் வெளிநாட்டு நிதியுதவி நின்றுவிடும். அந்நிய முதலீடுகள் இடம்பெறாது. உல்லாசப் பிரயாணிகள் இல்லாதொழிந்துவிடுவர் என்பது மட்டுமல்ல இலங்கை அரசானது இலங்கைத் தமிழர்களை இனப் படுகொலை செய்வதே நோக்கமாகக் கொண்டது என்ற சர்வதேச அபிப்பிராயமும் வலுத்துவிடும் என எச்சரித்துள்ளார்.

## ஆனையிறவில் வெள்ளை யானை

இதே சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் பாதுகாப்பு நிருபர் தமது குறிப்பில் "யாழ்ப்பாணம் மணி மகுடம் என்றால் வன்னிப் பகுதிதான் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பலமான ஜீவ நாடி" என்கிறார். பாதுகாப்பு படையினர் எப்பொழுதுமில்லாத விதத்தில் போராட வேண்டிய நிலையிலுள்ளனர். முல்லைத்தீவுத் தோல்வியைச் சரிக்கட்ட அரசு ஒரு பாரிய இராணுவ நடவடிக்கைக்கு உத்தரவிட்டது. இது ஒரு வெள்ளை யானை ஆனையிறவுக்குத் தெற்கே பிளிறிக் கொண்டு திரிவதை ஒத்துள்ளது. முல்லைத்தீவும் கிளிநொச்சியும் அரசாங்கத்திற்கு ஒரு நிரந்தரத் தடைக் கல்லாக ஆகிவிட்டன. அரசியல்வாதிகள் யுத்தத்தை நடத்த முடியாது என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. இராணுவ அதிகாரியின் சிபார்சை அரசு மதிப்பதில்லை. இராணுவ உயரதிகாரிகள் படை வீரர்களுக்குப் பதில் சொல்ல வேண்டியவர்களாகின்றனர். இந்த யுத்தத்தைத் தொடர இராணுவத்துக்கு ஆட்கள் தேவை. இராணுவத் தேவைக்கு ஆட்கள் சேர்வது குதிரைக் கொம்பாக இருக்கிறது. இராணுவத்துக்குள் ஏற்படும் அதிருப்தியையும் வெறுப்பையும் சமாளிக்க, முப்படைகளிலுமுள்ள இராணுவ உயரதிகாரிகளுக்கு அரசாங்கம் பதவி உயர்வுகளைக் கொடுத்துள்ளது. இது படையினரிடையே தமது செல்வாக்கைப் பெருக்க அரசு செய்யும் முயற்சி என விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

## வெற்றியும் தோல்வியும்

சென்னை 'இந்து' பத்திரிகையில் தெள, தென்கிழக்காசிய கல்வியின் பல்கலைக் கழக இயக்குனரான வி. சூரியகுமாரன் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி வருமாறு. "இலங்கை எதிர்நோக்குவது . கஸ்டமான எதிர்காலம்" என்பது தலைப்பு.

"இலங்கை இராணுவமும் விடுதலைப் புலிகளும் தங்கள் தங்கள் வெற்றிகளையும் தோல்விகளையும் சந்தித்துள்ளனர். யாழ்ப்பாண வெற்றியைக் கொண்டாடிய பெருமளவு சிங்களவர்கள், அது நிரந்தர வெற்றியென ஆர்ப்பரித்தமை கனவாகிவிட்டது. விடுதலைப் புலிகள் தமது துணிச்சலான திருப்பித் தாக்குதல் மூலம் மீண்டும் அரங்கின் மத்திக்கு வந்துள்ளனர். 1983 இல் இருந்து இன்றுவரை நடந்த போரில், இலங்கை இராணுவம் பெற்ற மிகப் பயங்கரத் தோல்வியே முல்லைத்தீவு இழப்பு என பல அவதானிகளும் ஆய்வாளர்களும் கருதுகின்றனர். ஆயிரக்கணக்கான வீரர்களைக் கொண்ட முகாமில் ஆக 30 இராணுவ வீரர்களே உயிர் தப்பியுள்ளனர் எனத் தெரிகிறது. தங்கள் வேலை முடிந்ததும் தொகை ஆயுதங்களுடனும், வெடி மருந்துகள், குண்டுகளுடனும் புலிகள் சென்றுள்ளனர்.

தொடரும் பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டுடன் தொடர்புள்ள பண வீக்கம், பருவமழை பொய்த்தமை, உல்லாசப் பிரயாணிகளின் வருகை வீழ்ச்சி, தொடர்ச்சியான வேலை நிறுத்தங்கள் ஆகியன சிறிலங்கா அரசின் முன்னேற்றத்தைத் தடுத்து, மூன்றாம் உலக நாடுகளின் மோசமான இடத்திற்கு அதைக் கொண்டு சென்றன. எனவே இலங்கையின் எதிர்காலம் நெருக்கடி நிலையில் உள்ளது என திரு. சூரிய குமாரன் குறிப்பிட்டுள்ளார்.

**தொகுப்பு: சர்க்கரவர்த்தி**

# தமிழ் நாட்டில் மூலிகையிலிருந்து மூலிகைப் பெட்ரோல் கண்டுபிடிப்பு



விஞ்ஞானி ராமர்

தமிழ்நாட்டில் ராஜபாளையத்தைச் சேர்ந்த இளம் விஞ்ஞானி ராமர் என்பவர் மூலிகைகளிலிருந்து பெட்ரோல் கண்டுபிடிக்கலாம் என்று சாதனை படைத்துள்ளார். வளைகுடா நாடுகளிலிருந்து பெட்ரோல் இறக்குமதி செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் இவரது இக் கண்டுபிடிப்பு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவர் தனது ஆராச்சியை டெல்லி சென்று ஐ.ஐ.டி. ஆய்வு கூடத்தில் நடத்திக் காட்டியுள்ளார்.

இவருக்கு தனிநபர்களால் ஆபத்து உள்ளது என்று கூறப்படுகிறது. அவருக்கு போதிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என அரசியல்வாதிகள் கூறியுள்ளனர். மத்திய அரசும் அவருக்கு பாதுகாப்பு வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளது.

# வல்லிபுர ஆழ்வார் திருவிழா ஆரம்பம்

வரலாற்றுப் புகழ்மிக்க பருத்தித்துறை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 11.09.96 புதன்கிழமை ஆரம்பமாகியுள்ளது. 17 தினங்கள் நடைபெறும் இத் திருவிழா எதிர்வரும் 25.09.96 தேர்த்திருவிழாவுடனும், 26.09.96 சமுத்திரத் தீர்த்தத்துடனும், 27.09.96 கேணித் தீர்த்தத்துடனும் நிறைவுறும்.

குடாநாட்டில் போராட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பும், விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில் இருந்தபோதும் வங்கக்கடலில் நடைபெறும் சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவிற்கு குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வந்து கூடுவது வழக்கமாகும். தற்போது அப்பகுதியை ஆக்கிரமித்துள்ள சிறீலங்கா இராணுவத்தினர் மிகக்குறைந்த அளவு எண்ணிக்கையானவர்களை அதுவும் 40 வயதிற்கு மேற்பட்டவர்களை மட்டுமே மேற்படி கோயிலுக்கு செல்ல அனுமதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஆனையிறவில் இருந்து தொடர்ந்து எறிகணை வீச்சு

கடந்த வாரம் ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களை நோக்கி இரவு பகலாக எறிகணை வீச்சுக்கள் நடத்தப் பட்டுள்ளன. இடைக்கிடையே துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்ட வண்ணம் இருந்தன.

இதற்கிடையயில் சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றுக்கு தகவல் தெரிவித்த சிறீலங்கா இராணுவப் பேச்சாளர் ஒருவர் கிளிநொச்சியைப் பிடிக்கும் தமது திட்டம் தொடர்ந்து கொண்டிருப்பதாகவும் எப்போது அது சாத்தியமாகும் என்பது பற்றி இப்போது தெரிவிக்க முடியாது என்றும் கூறியுள்ளார்.

# கொழும்பில் துப்பாக்கி சூடு

கொழும்பு ஜம்பட்டா தெருவிலுள்ள ஹோட்டல் ஒன்றில் கடந்த 11.09.96 புதன்கிழமை துப்பாக்கிச் சூட்டில் ஒரு இளைஞர் கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்ட இளைரின் பெயர் அருணா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் எதற்காகக் கொலை செய்யப்பட்டார், இவரை யார் கொலை செய்தார்கள் என்ற விபரம் தெரியவில்லை. பழைய விரோதமே இக் கொலைக்கு காரணம் என கொழும்புப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# முல்லைக் கடலில் கடற்படை வெறியாட்டம்

கடந்த 09.09.96 திங்கள்கிழமை இரவு முல்லைத்தீவு ஆழ்கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் படகுகள் மீது சிறீலங்கா கடற்படையினர் வெறித்தனமான தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இதில் ஒரு மீனவர் சுட்டுக் கொல்லப் பட்டார். பலர் காணாமல் போயுள்ளனர். பல மீன்பிடிப் படகுகள் ஆழ்கடலில் வைத்து தீக்கிரையாக்கப் பட்டுள்ளன. அப் படகுகளில் இருந்த மீனவர்களுக்கு என்ன நடந்தது என்ற விபரம் கிடைக்கப்பெறவில்லை.

இதைவிட முல்லைத்தீவு கடலில் பொக்கணை மாத்தளன் பகுதிகளை நோக்கியும் சிறீலங்காப் படையினர் எறிகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இத் தாக்குதலால் எம்.அருள்ராஜ் என்ற 14 வயது சிறுவன் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். வலிகாமம் பகுதியைச் சேர்ந்த இவர் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்து அம்பலான் பொக்கணை என்ற இடத்தில் வசித்து வந்தார்.

# முல்லையில் மா தட்டுப்பாடு

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. சிறீலங்கா அரசு போதிய அளவு மாவை அனுப்பிவைக்க மறுப்பதாலும் அனுப்பப்படும் சிறிய அளவு மாவும் பாவனைக்கு உதவாத நிலையில் இருப்பதுமே இத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்புப் பகுதியில் மாவும், பாணும் கிடைப்பது அருமையாக உள்ளது. இப் பகுதிக்கு தேவையான பாண் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்தே கொண்டுவரப்படுகிறது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive


# 1ம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் திருமதி சிவதர்மினி ராகவன்



அகிலத்தின் மழலையாக
அன்னை மடியில்
18.03.1965

அநியாய அழிப்பினால்
ஆண்டவன் அரவணைப்பில்
30.09.1995

'ஓம் வருஷபத்வஜாய வித்மஹேக்றாணி ஹஸ்தாய
தீ மஹி தந்றோ குருப்ரசோதயாத்'

அழுது நித்தம் புரண்டாலும் மாண்டவர் வருவதில்லை.
ஆனாலும் நாம் இங்கு விம்மி அழுகின்றோம், வேதனையில் தவிக்கின்றோம்
ஓராண்டுக் காலத்தை ஒரு யுகமாய்க் கழித்துவிட்டோம்.
பூஞ்சிரிப்பில் புதுமலராய் நிறைந்து நின்ற கோலத்தை
நெஞ்சினிலே சுமந்து கொண்டு நிலைகுலைந்து நிற்கின்றோம்.
உன்னினைவே வாழ்வாக உயிரையே சுமக்கின்றோம்.
கலங்கிடும் துளிநேரம் கலங்கரை ஒளி தீபம்
காலத்தின் கோலத்தால் உன் கனவெல்லாம் கலைந்தது.
தாயின்றி வாழும் சேய்கள் - தினம் தினம் உன்னைத் தேடி திருவிழி பூக்கும்.
கட்டிய கணவனையும் கண்ணிறைந்த பிள்ளைகளையும்
அந்நிய இடத்தில் எம்மை அனாதைகள் ஆக்கிவிட்டீர்.
ஆண்டவன் அரவணைப்பில் ஆவலுடன் பறந்தே விட்டீர்
வருடம் ஒன்று ஆனாலென்ன - எம் மனங்கள் உள்ளவரை
மாறாது உம் நினைவே, இவ்வுலகில் நீரிருந்து எம்மைக் காத்தது போல் - வானுலகில் நீர் இருந்து காத்திட
உங்கள் ஆத்மா சாந்தியடைய மானிப்பாய் மருதடி விநாயகப் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

**18.09.96 புதன்கிழமை மோட்ச பூஜை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதில் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.**

உங்கள் பிரிவால் தவிக்கின்ற ஜீவன்கள்
அன்புக்கணவன் - பிள்ளைகள் - ஈழரமணா, பிரவீன்.
அப்பா சிவசுப்பிரமணியம். அம்மா - நீலதயாட்சி. உடன் பிறப்புக்கள், உற்றார் உறவினர்கள்.

*ஓடி முடிந்ததுவோ ஓராண்டு உன்நினைவால்*
*சிட்டாய் பறக்கும் சின்னஞ்சிறு வயதில் - நீ*
*பிரான்ஸ் நாட்டு மருத்துவனின் கையில் மீளாத்*
*துயில் கொண்டாய்*
*வருத்தம் உனக்கென்று கூறி*
*அதை மாற்றும் வழியை விட்டு*
*கணக்குப் பார்த்து நல்ல காசும்*
*கையில் வாங்கிக் கொண்டு - உனக்கு*
*கணக்கு வைத்து விட்டு - உன்னில்*
*கலைகள் கற்ற கூட்டம் - அது*
*லஞ்சம் வாங்கிப் பிழைக்கும் - போலி*
*மருந்தை தந்த கூட்டம் - காலி*
*மருத்துவனின் ஆட்டம் - என்றும்*
*மாயை போலத்தானே.*

தகவல்: N.RAGAVAN
6, Rue HONORE DE BALZAC,
95140 GARGES LES GONESSE, FRANCE
TP: 39 86 92 61

(ADV)

# பத்தோடு பதினொன்று

## ஐரோப்பாவில் மிக உயர்ந்த கட்டடம்

தொழில் நுட்பத்தில் முன்னோடிகளான ஐரோப்பியர்கள் ஏன் இன்னமும் உயர்ந்த கட்டடங்களை அமைக்கவில்லை கப் பட்டுள்ள Commerz Bank கட்டடம் 258 மீற்றர் உயரம் கொண்டது. ஆனால் இந்த வருட இறுதிக்குள் இதன் உச்சி



என்பது ஆச்சரியமே. பல நாடுகளின் கலாச்சார, மரபுரீதியான கட்டுப்பாடுகள் புதிய கட்டடங்களை அமைப்பதில் தடைகளை ஏற்படுத்தியுள்ளன.

பிரான்சில் ஈபிள் கோபுரத்தை விட உயரமான கட்டடங்கள் அமைக்கக் கூடாது என்ற கட்டுப்பாடு சமீப காலம்வரை இருந்ததால் பிரான்சின் மிக உயர்ந்த கட்டடமாக Montparnasse இருந்து வருகிறது. இதன் உயரம் 210 மீற்றர்கள் ஆகும். பாரிசின் புறநகர்ப் பகுதியான La Defence இல் கட்டத் திட்டமிட்ட 393 மீற்றர் உயரமான கட்டட வேலைகள் சில பிரச்சினைகளால் ஒத்திவைக்கப் பட்டுள்ளன. ஆனால் ஐரோப்பாவில் மிக உயர்ந்த கட்டடம் என்று கருதப்படுவது ஜேர்மனியில் பிராங்போர்ட்டில் உள்ள 260 மீற்றர் உயரமான Messeturm கட்டடமே. கடந்த வாரம் இதே பகுதியில் கட்டி முடிக்யில் 40 மீற்றர் உயரமான அஞ்சல் கோபுரம் அமைக்கப்பட இருக்கிறது. அதன் பின் இக் கட்டடமே ஐரோப்பாவின் மிக உயரமான கட்டடம் என்ற பெயரை தட்டிக்கொள்ளப் போகிறது.

### தெரிந்துகொள்ளுங்கள்

கி.மு.3200 ஆண்டுகளுக்கு முன் சுமேரியர்களாலும் (தற்போதைய மங்கோலியர்கள்), இந்தியர்களாலும் உலகிற்கு முதன் முதல் பியர் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அக்காலப்பகுதியில் பியர்தயாரிக்கும் பார்லி வகைகள் அப் பகுதியிலேயே பெரியளவில் காணப்பட்டதும் இதற்குக் காரணம். அங்கிருந்து மெல்லமெல்லப் பரவத் தொடங்கிய பியர் இன்று உலகெங்கும் ஆக்கிரமித்துள்ளது.

ஆனால் முதலில் உற்பத்தி செய்யப்பட்ட இந்தியாவில் இன்று சிலவகை பியர்களே உள்ள போதும் ஐரோப்பிய நாடுகளே இன்று அத் தயாரிப்பில் முன்னணியில் நிற்கின்றன. உலகிலேயே இன்று அதிகமாக பியர் குடிப்பவர்கள் ஜேர்மனியர்கள் தான். அவர்களால் ஒரு வருடத்திற்கு 91 மில்லியன் ஹெக்டோலீட்டர் பியர் குடிக்கப் படுகிறது. அடுத்ததாக பிரித்தானியர்கள் 60 மில்லியன் ஹெக்டோலீட்டர் குடிக்கிறார்கள்.

## சுறாக்கள் ஆபத்தானவையா? இல்லையே என்கிறார்கள்!

இதுவரை காலமும் பத்திரிகை, தொலைக்காட்சி, ஏன் திரைப்படங்களிலும் சுறாக்களின் பயங்கரம் பற்றியும், அவைகள் மனிதனை கொன்று தின்பவை என்றுமே காட்டப்பட்டும், சித்தரிக்கப்பட்டும் வந்தது. ஆனால் சில சுறாக்கள் தவிர்ந்த ஏனைய சுறாக்கள் ஆபத்தற்றவை என்றும், அவை ஆத்திரமூட்டப்படும் பட்சத்திலேயே தமது கோபத்தை மனிதன்மேல் காட்டுகின்றன என்றும் பகாமாஸ் தீவில் சுறாக்களுடன் பொழுதைப் கழிக்கும் இவர்கள் கூறுகிறார்கள்.


அதில் ஒருவர் Neal Watson இவர் பகாமாஸ் கடலில் விடுமுறை அனுபவங்களை மக்களுக்கு ஏற்படுத்துகிறார். 75 அமெரிக்க டொலர் செலவில் கடலுக்குள் சென்று சுறாக்களுடன் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் சந்தர்ப்பத்தை இவர் ஏற்படுத்துகிறார். தினமும் அப் பகுதி சுறாக்களுக்கு இவரே உணவூட்டுகிறார். 15 பேரடங்கிய குழுவினரை படகில் ஏற்றி இயந்திரத்தை இயங்கவைத்தவுடன் இயந்திரத்தின் சத்தத்தைக் கொண்டு தமது உணவு வேளையை சுறாக்கள் உணர்ந்து கொள்கின்றன என்கிறார். இவர்களுடன் 200 இறாத்தல் மீன்களையும் கொண்டு சென்று ஆழ்கடலில் சுறாக்களுக்கு கொடுக்கிறார். நூற்றுக்கு மேற்பட்ட சுறாக்கள் கூடி அந்த உணவை பகிர்ந்து கொள்ளும் காட்சியை தூரத்தில் இருந்து இவர்கள் பார்க்கிறார்கள். இச் சந்தர்ப்பத்தில் எந்தவொரு சுறாவும் தமது பக்கம் திரும்புவதில்லை என்கிறார் வாட்சன்.

இவர் இப்படி என்றால் மற்றவர் BEN ROSE இரும்பு உடைகளுடனும், காஸ் போத்தலுடனும் கடலுக்குள் உணவுடன் குதித்து சுறாக்களுக்கு தனது கைகளாலேயே உணவூட்டுகிறார். ஆனால் இவர் கடலுக்குள் குதிக்கும்போது இவருடன் கூட செல்பவர்கள் அம்பு போன்ற கருவிகளையும் கொண்டு செல்கிறார்கள். தற்செய்லாக பெண்ணுக்கு ஏதாவது நடந்தால் சுறாக்களை குத்தவே இந்த ஆயுதங்கள். ஆனால் பெண்ணினால் உணவூட்டப்படும் சுறாக்கள் சிலநாட்களுக்குள்ளாகவே அவருடன் சிநேகம் கொள்ளத் தொடங்கிவிடுகின்றன. பல சுறாக்கள் இவரைச் சுற்றிவந்து கொண்டிருக்கின்றன. சில இவரது கைக்குள் நுழைந்து தமது கண்களை மூடிக் கொள்கின்றன. இந்த இருவரதும் செயற்பாடுகளால் சுறாக்கள் பற்றிய தப்பபிப்பிராயங்கள் மக்கள் மத்தியில் மாறுபடுகின்ற அதேவேளை, அவைகள் மேலுள்ள வெறுப்பினால் நடத்தப்படும் சுறா வேட்டையும் வெகுவாக குறைக்கப்பட்டு சுறாக்களின் தொகை அதிகரிக்கும் என்கிறார்கள் ஆழ்கடல் ஆய்வாளர்கள்.



## சுவரேறும் ரோபோக்கள்

மனிதனால் செய்யப்படும் வேலைகளில் பலவற்றை ரோபோக்கள் செய்ய ஆரம்பித்து பல வருடங்களாகின்றது. இந்த வகையில் முதலாவது ரோபோ 1961ம் ஆண்டு அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டு 10,000 மணி நேரம் தொழிற்சாலை வேலையில் ஈடுபடுத்தப்பட்டு இப்போது சிமித்சோனியன் நூதனசாலையில் ஓய்வாக்கப்பட்டுள்ளது. ஆனாலும் ரோபோ ஆய்வுகள் தொடர்ந்தும் நடந்து கொண்டிருக்கின்றன. இதில் பிரித்தானியா ஆய்வாளரான டேங் பரான்ஸ் ஒன்றாக இணைந்து வேலை செய்யக்கூடிய இரண்டு ரோபோக்களை அமைத்துள்ளார். இவைகள் இரண்டும் இணைந்து பல கடினமான வேலைகளைச் செய்கின்றனவாம். மனிதனால் செய்ய முடியாத வேலைகளை இவை இரண்டும் இணைந்து செய்கின்றனவாம். இது தவிர போர்ட்ஸ் மவுத் பல்கலைக் கழகம் தயாரித்துள்ள சிலந்தி வடிவிலான ரோபோக் III எனும் ரோபோ மிக இலகுவாக சுவரேறுகிறதாம். அதனுடன் மிகவும் கடினமான, ஆபத்தான நிலப் பகுதிகளில் மிகவும் உயரத்தில் இலாவகமாக நடந்து செல்லக்கூடிய இது, ஒரு பகுதியிலிருந்து மற்றப் பகுதிக்கு காயப்பட்டவர்களை கொண்டு செல்லவும் உதவுகின்றது என்கிறார் இதன் உரிமையாளர்.




# KANNA Imports & Exports Ltd.

## (New Ambiha Supermarket)

198 Archway road, London N6 5B13 (Archway கோவிலுக்கு அருகாமையில்)

இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான, உங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மலிவாகவும் விரைவாகவும் உங்கள் வியாபார நிலையங்களுக்கு (ஐரோப்பிய நாடுகள் அனைத்திற்கும்) விநியோகிக்கப்படும்

தொடர்புகளுக்கு: Tel: & Fax: 0181-348 3356

(ADV)

ஈழமுரசு
Eelamurasu Weekly

# யுத்த நிறுத்தமும் சாத்தானின் வேதமும்

நாம் சென்ற வாரம் தெரிவித்திருந்தது போல் கண்ணுக்குத் தெரியாத வலைப் பின்னல்களுடன் சிறீலங்கா அரசின் இன அழிப்புக் கொள்கைக்கு வக்காலத்து வாங்கும் மாயமான்கள் இப்போது மெல்ல மெல்ல தம்மை இனங் காட்டத் தொடங்கியுள்ளன. 'போரை நிறுத்துவதற்காக விடுதலைப் புலிகள் தாமாக முன்வந்து நிபந்தனை எதுமற்ற போர் நிறுத்தத்தை அறிவிப்பார்களானால் தமிழ்க் கட்சிகளும் ஏனைய சமாதான நோக்குடைய உள்நாட்டு வெளி நாட்டு அமைப்புக்களும் அரசாங்கத்தை நிபந்தனையற்ற ஒரு பேச்சுவார்த்தைக்கு நிர்ப்பந்திக்க முடியும்' என ரெலோ சிறீகாந்தா தெரிவித்திருப்பதன் மூலம் முன்னாள் விடுதலை இயக்கங்களாகவும் தற்போது தமிழ்க் குழுக்களாகவும் இயங்கிக் கொண்டிருப்பவர்கள், தமிழீழ மக்களின் விடுதலை பற்றி என்ன நிலைப்பாட்டில் உள்ளனர் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக சத்தியாக்கிரகம் - பேச்சுவார்த்தை - வாக்குறுதி - ஒப்பந்தம் - ஒப்பந்தக் கிழிப்பு என எல்லா வகைகளிலும் ஏமாற்றப்பட்டு வஞ்சிக்கப்பட்ட பின்பே விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்ததும், அதில் இந்தத் தமிழ்க் குழுக்கள் எப்படியான அணுகுமுறைகளை மேற்கொண்டிருந்தனர் என்பதும் தமிழ் மக்களுக்குப் புரியாதது அல்ல.

இவை தற்போது கொழும்பில் தங்கியிருந்து தம்மை ஒரு அரசியற் கட்சியாகக் காட்டிக்கொண்டு,தமிழ் மக்களைக் கொன்றொழித்துக் கொண்டிருப்பதாக கூறி எந்த அரசுக்கு எதிராகப் போராடினார்களோ, அதே அரசுக்கு- அதே இனப் படுகொலைக்கு மூண்டுகொடுத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். நிபந்தனையற்ற யுத்த நிறுத்தம் ஒன்றை புலிகள் மேற்கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருப்பது அவர்களின் அப்பட்டமான துரோகத்தனத்தையே தோலுரித்துக் காட்டுகிறது.

உண்மையில் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் எண்ணம் விடுதலைப் புலிகளுக்கு இருக்குமானால் நிபந்தனையற்ற விதத்தில் போர் நிறுத்தத்தை மேற்கொண்டு மூன்றாம் தரப்பு ஒன்றின் மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டு நியாயமான தீர்வொன்றை ஏற்படுத்தலாம் என சிறீகாந்தா அவர்கள் மேலும் தெரிவித்துள்ளார்.

இதே சந்திரிகா தலைமையிலான அரசுடன் விடுதலைப் புலிகள் போர் தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டதையும், அதைக் கண்காணிக்க வெளிநாடுகளில் இருந்து பிரதிநிதிகள் வந்திருந்ததையும், அவர்களுடன் அரசு ஒத்துழைக்காத அதே வேளை 'மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை' தன்னிச்சையாக முறித்துக்கொள்ளும் முயற்சிகளை மேற்கொண்டதையும், ஒப்பந்தத்தை மீறியதையும் சிறீகாந்தா போன்றோர் மறந்திருந்தாலும் தமிழ் மக்கள் மறந்துவிடவில்லை.

போராடப் புறப்பட்டு, பின் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்து பிழைப்பு நடத்தும் இவர்கள், இனப் பிரச்சனையைத் தீர்க்க சந்திரிகா அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என உண்மையிலேயே விரும்பினால், தமது பாராளுமன்றப் பதவிகள் மூலம் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை விலக்கிக்கொள்ள ஏன் முயற்சிக்கவில்லை? எப்படியாவது பதவிகளுடன் வாழ்ந்தால் போதும் என நினைக்கும் இவர்கள் எந்தத் துரோகத்துக்கும் தயங்காதவர்கள்தான். இதனால்தான் வடக்கு கிழக்கிலும், கொழும்பிலும் சிறீலங்கா அரச படைகளுடன் இணைந்து அப்பாவித் தமிழ் மக்கள் மீதான கொலைகள், கொள்ளைகள் போன்றவற்றை இன்றுவரை மேற்கொண்டு வருகின்றனர்.

அரசியல், இராணுவ ரீதியில் வளர்ச்சி பெற்றுவரும் விடுதலைப் புலிகளை எந்த விதத்திலும் வெல்ல முடியாது என்பதை உணர்ந்துள்ள சிறீலங்கா அரசு, விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு பயங்கரவாத அமைப்பு எனக் காரணம் கூறி தடை செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்வதன் மூலம், பிரச்சினையின் முடிச்சுக்கள் மேலும் இறுகுவதுடன் சிக்கலானதொரு நிலையே தோன்றும் என்ற கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுக் கொண்டிருந்தாலும், சந்திரிகா அரசு புலிகளைத் தடை செய்ய தாம் ஆலோசித்திருப்பதாக தெரிவித்திருக்கும் இவ்வேளையில், புலிகள் நிபந்தனையற்ற முறையில் யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என தமிழ் குழுக்கள் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளதானது புலிகள் மேற்கொள்ளும் போராட்டமானது ஒரு பயங்கரவாதம் தொடர்பானது என்னும் கருத்தையே மறைமுகமாக வலியுறுத்தி நிற்கின்றது. இதனையே சிறீலங்கா அரசும் விரும்புகிறது.அரசின் இவ் விருப்பத்தை தமிழ்க் குழுக்கள் தாராளமாக ஒத்துதுகின்றது. எப்படியாவது பிழைப்பு நடத்த வேண்டும் என்பதைத் தவிர, தமிழ் மக்களின் பிரச்சனைகள் தீர வேண்டும் - தமிழ் தேசம் விடுதலை பெற வேண்டும் என்ற எண்ணம் துளி கூட இவர்களுக்குக் கிடையாது என்பதே உண்மை. தமிழ் மக்கள் அனைத்து அடக்குமுறைகளில் இருந்தும் விடுதலைபெற்று ஒரு தேசமாக உருவாகும்வரை இந்தச் சாத்தான்கள் அவ்வப்போது வேதம் ஓதிக்கொண்டே இருக்கும்.

# பாண்படுத்தும் பாடு

(கொழும்பு)

சிறீலங்கா அரசியலைப் பொறுத்தவரை பாண் ஒரு முக்கிய துருப்புச் சீட்டாக இருக்கிறது. சாதாரண சிங்கள மக்களின் அடிப்படை உணவான பாணின் விலையைப் பொறுத்தே ஆட்சியில் இருப்பவர்களுக்கான ஆதரவு தீர்மானிக்கப்படுகிறது.

தற்போதைய சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா பதவிக்கு வருவதற்கு முன்பு, தான் ஆட்சிக்கு வந்தால் பாணின் விலையைக் குறைப்பேன் என்று சொல்லிக் கொண்டே ஆட்சிக்கு வந்தார். ஆனால் தற்போது அவரது ஆட்சியில் பாணின் விலை முன்பிருந்ததைவிட இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது.

சிறீலங்காவில் ஏற்பட்டுள்ள பொருளாதார உறுதிப்பாடற்ற நிலையை சுட்டிக்காட்ட 1988ல் இருந்து 1996 வரை பாணின் விலை பட்டபாட்டை சுட்டிக் காட்டினாலே போதுமானது என்று பொருளியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சிறீலங்காவில் 1989-ம் ஆண்டு ஒரு இறாத்தல் பாண் (450 கிராம்) 3 ரூபா 10 சதமாக இருந்தது. 1989-ல் அது 3 ரூபா 37 சதமாக உயர்ந்தது. 1990-ல் 5 ரூபா 03 சதமாகியது. 1991-ல் அது 4 ரூபா 51 சதமாகக் குறைக்கப்பட்டது. 1992-ல் மீண்டும் அது 5 ரூபாவாக உயர்த்தப்பட்டது. 1994 பெப்ரவரியில் 5 ரூபா 50 சதமாக உயர்த்தப்பட்டது. 1994 ஆகஸ்டில் சந்திரிகா பதவிக்கு வந்ததும் 3 ரூபா 50 சதமாகக் குறைக்கப்பட்டது. 1996-ல் மீண்டும் அது 5 ரூபாலாகியது. 1996 பெப்ரவரியில் 5 ரூபா 50 சதமாகவும் 1996 யூலையில் 6 ரூபா ஆகவும் 1996 ஆகஸ்டில் முன்பிருந்ததைவிட இரண்டு மடங்கிலும் அதிகமாக அதாவது 6 ரூபா 75 சதமாக அதிகரித்து விட்டது. தற்போது நகரப்புறங்களில் ஒரு இறாத்தல் பாண் 6ரூபா 75 சதமாகவும் கிராமப் புறங்களில் 7 ரூபாவாகவும் விற்கப்படுகிறது.

# தாண்டிக்குளத்தில் மக்கள் மீது தாக்குதல்

கடந்த 12.09.96 வியாழக்கிழமை வவுனியா தாண்டிகுளம் தடைமுகாமில் வவுனியா நகரத்திற்கு செல்வதற்கு காத்திருந்த மக்கள் மீது சிறீலங்கா இராணுவத்தினர் தடியடிப் பிரயோகம் நடத்தியுள்ளனர்.

ஆண்கள், பெண்கள், வயோதிபர் என்ற வித்தியாசம் இல்லாமல் இராணுவத்தினர் மேற்கொண்ட இத் தாக்குதலால் பலர் படுகாயமடைந்துள்ளதாக தெரியவருகிறது.

தாண்டிக்குளம் தடை முகாமிலுள்ள இராணுவத்தினர் அங்குவரும் தமிழ் மக்களை மனிதர்களாகவே மதிப்பதில்லை என்றும் ஆடுமாடுகளை விரட்டியடிப்பது போலவே அவர்களை நடத்திவருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# குடாநாட்டில் புலிகள் தாக்குதல்

பூநகரி இராணுவ முகாமின் சுற்றுப் பகுதியிலிருந்த இராணுவக் காவலரண் மீது விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஒரு அதிகாரியும் இரண்டு இராணுவச் சிப்பாய்களும் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர்.

கடந்த 10.09.96 செவ்வாய்க்கிழமை காலை இச் சம்பவம் நடைபெற்றுள்ளது. அதேதினம் வடமராட்சி இமையாணன் பகுதியில் உழவு இயந்திரம் ஒன்றில் பயணம் செய்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய கிளைமோர்த் தாக்குதலில் 6 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். உழவு இயந்திரம் சிதறடிக்கப்பட்டது.

அன்று இரவு மணலாறு யாஹெல்ட்டக் கொல்லாவ பகுதியில் புலிகள் நடத்திய இன்னொரு தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டார். இன்னொருவர் காயமடைந்துள்ளார்.

# குப்பிழானில் இளைஞனின் கால் போனது

சிறீலங்கா இராணுவத்தால் புதைத்து வைக்கப் பட்ட மிதிவெடியில் கால்வைத்த தமிழ் இளைஞர் ஒருவர் தனது காலை இழந்துள்ளார்.

சுப்பிரமணியம் சிவகுமார் என்ற 24 வயதுடைய இளைஞரே தனது காலை இழந்தவராவார்.

# வன்னியில் திலீபனின் நினைவு விழாக்கள்

இந்திய ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக தண்ணீர்கூட அருந்தாது உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்த தியாக தீபம் லெப்டினன்ட் கேணல் திலீபனின் (பார்த்திபன் இராசையா) 9 வது ஆண்டு நினைவு நிகழ்ச்சிகள் உணர்வு பூர்வமாக வன்னிப் பெருநிலப் பகுதி எங்கும் அனுட்டிக்கப்பட்டு வருகிறது.

கடந்த 15.09.96 அன்று தொடக்கம் வன்னி பெருநிலப் பரப்பெங்கும் ஆரம்பமான நினைவுநாள் நிகழ்ச்சிகள் திலீபன் தியாக மரணம் எய்திய தினமான 26ம் திகதிவரை தொடர்ந்து நடைபெறுகின்றது.

# கிளிநொச்சியில் மருந்துக்கு தட்டுப்பாடு

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அக்கராயன் வைத்திய சாலையில் மருந்துப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. தற்போது கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை, அக்கராயன் வைத்திய சாலையிலேயே இயங்கிவருகிறது.

கிளிநொச்சியிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் அக்கராயன், ஸ்கந்தபுரம் பகுதிகளிலேயே அகதிகளாக தங்கியுள்ளதால் அவர்களின் தேவையை சமாளிக்கக் கூடிய அளவுக்கு அக்கராயன் வைத்தியசாலையில் வசதிகள் இல்லை எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சிறீ லங்கா சுகாதாரத் திணைக்களம் இந்த வைத்திய சாலைக்கு வேண்டிய மருந்துகளை அனுப்புவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்பகுதியில் மலேரியா, வயிற்றோட்டம், மூளைக் காய்ச்சல் போன்றவற்றைத் தடுக்கக்கூடிய மருந்துகள் இல்லை என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

# கிளிநொச்சி நகரப் பகுதி எறிகணை வீச்சால் அதிர்ந்தது

பலவாரகால இடைவெளிக்குப் பின் கிளிநொச்சி நகரத்தையும், அதன் சுற்றுப்புறப் பகுதியையும் நோக்கி சிறீலங்காப் படையினர் கடந்த 12.09.96 வியாழக்கிழமை பலத்த எறிகணைத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

ஆனையிறவு, பூநகரி இராணுவ முகாங்களிலிருந்து இத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. தாக்குதல் இடையே உளவு விமானம் எனச் சந்தேகிக்கப்படும் சிறியரக விமானம் ஒன்று அதி உயரத்தில் கிளிநொச்சி நகரப் பகுதி மீது பறந்து நோட்டமிட்டுச் சென்றுள்ளது.

எறிகணைத் தாக்குதலுக்கு இலக்கான பகுதிகளிலுள்ள மக்கள் ஏற்கனவே வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றுவிட்டதால யாருக்கும் உயிரிழப்பு ஏற்படவில்லை. ஏற்கனவே குண்டுவீச்சால் உடைந்து போயிருந்த கட்டிடங்களே இவ் எறிகணைவீச்சால் மேலும் சேதமடைந்துள்ளன.

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

| ஜனனம் | | மரணம் |
|---|---|---|
| 25 |  | 16 |
| 08 | | 09 |
| 1976 | | 1991 |

### மார்க்கண்டு தேனரூபன் (பெரியபழம்)

(யாழ் மத்திய கல்லூரி, கல்கத் கிரிசாந் - புத்தூர்)

எமதார் புதளவையிலே உதித்த
எம் செல்வமே. தமிழீழ இதயமாம்
தமிழ் மக்கள் துயர்கண்டு புறப்பட்டாய்
வீரத்தின் முத்தாய் வேங்கையின் வீறுடன்
உதிரத்தின் குருதியை உதிர்த்தாய் மணலாற்றில்.
தம் நாடு ஈழமென தாகம் கொண்டு
வெறிகொண்ட கயவரின் பாசறையின்
சிறகொடித்து பலா த்தாய் வீரவரலாறு.
பறிபோன நிலமதனை மீட்பதற்காய்
களத்தில் பலியான உன்நினைவால்
எம்புலி வீரர் போரிடுவார்
கொடுங்கோலரை களத்தில் பொசுக்கியே.
உயிரை மதிக்கும்படி உரைத்திட்ட
புத்தன் வேசுவுக்கு உரிமலி
கொடுக்கிறார்கள் ஆயுத போர்முனையில்
தரபலி மோகம் கொண்ட மோடையர்கள்.
காலங்கள் மாறலாம் தளப்பிரதேசம் மாறலாம்
தலைவைத்த மாறலாம் சத்திரிகமாறலாம்
மாவீரனாய் பரிமளித்த கல்கத் உன்
உணர்வு மக்கள் மனதில் மாறாது.
கலை மலிந்த பூமி உயர்
கலைஞர் வாழும் வீடு - ஈழம்
அன்னை வயல் பூமி. தென்னை பனை
மரச்சோலையும் எமது ஈழமே.
வேதம் செறிந்த தமிழீழம் - உயர்
வீரம் செறிந்த தமிழ் மறவர் - ஓர் நாள்
ஈழம் வென்றிடுவர் - உன்னினைவால்
சந்ததி வழி ஏற்றிடுவோம் புலிக்கொடி.

உன் நினைவால் கணப்பொழுதேனும் உறங்காது
கண்விழித்து காத்துக் கிடக்கும் உன் அன்பு அப்பா, அம்மா,
குட்டி தம்பிமார்கள், அருமைத் தங்கை.
தமிழீழம், புத்தூர்கிழக்கு, புத்தூர்.

தகவல் - P.மார்க்கண்டு (மார்க்கோ) சுவிஸ் - 029 27484.

(ADV)

## 45ம் நாள் நினைவஞ்சலி




### வீரவேங்கை திருமாறன்
### தெய்வேந்திரம் பகீதரன் (பாபு)

அன்னையின் மடியில்: 28.12.1975
மண்ணின் மடியில்: 04.08.1996

தாயுடன் தந்தையும் தரணி போற்ற தாலாட்டி வளர்த்துள்ளை ஓயாது உன் உயர்வுக்கு உடன் பிறந்தோரும் உழைத்தனர். நீயோ தமிழையும் மண்ணையும் நிமிர்ந்து பார்த்தாய் - அதற்கு காயம் கண்டதனால் களத்திலே குதித்தாய் வீரவேங்கையாய்.
கற்ற கல்வியை கரை சேர்க்காமல் களத்திலே கால் பதித்து தற்றமிழையும் நம் நாட்டையும் கரை சேர்த்திட வேண்டி புற்றீசல் போல் புறப்பட்ட குண்டு மழைகளையும் தாண்டி வெற்றியுடன் வருவேன் என்று வீறுடன் குதித்தாயே வேட்டுக்களை ஏந்தி

**உன் இழப்புச் செய்தி கேட்டு உற்றார் உறவினர் ஏங்கி தவிக்கின்றனர். அன்புள்ள அப்பா அம்மா அலறும் ஓசை அடிவயிறு பற்றி எரிகின்றது. உன் உடன் பிறந்தோர்களின் உள்ளக் குமுறலை யார்தான் ஆற்றுவார். சின்ன வயதிலே பூத்துக் குலுங்கும் நீ உதிர்ந்து போய் - உறங்கி விட்டாயே.**

உன்பிரிவால் வாடும்: அன்புள்ள அப்பா, அம்மா, அண்ணாமார், அக்காமார், அத்தான்மார், அண்ணிமார், பெறாமகன், மருமக்கள் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள்.

ஒட்டுமடம், யாழ்ப்பாணம், தமிழீழம்
தகவல்: தெ.சிறிதரன் (சுவிஸ்)
தொலைபேசி இல: 021 729 03 53

(ADV)

## மரண அறிவித்தலும் 31ம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்

மலர்வு:
13.04.1929



உதிர்வு:
15.08.1996

### சின்னையா தம்பிராஜா (இராசு)
(கண்ணகைபுரம்)

புங்குடுதீவு 9ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 10ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா தம்பிராஜா (இராசு) 15.08.96ல் புங்குடுதீவில் காலமானார்.
இவர் காலஞ்சென்ற சின்னையா செல்லமுத்துவின் அன்பு மகனும், காலஞ்சென்ற முருகேசு சின்னத்தங்கத்தின் அன்பு மருமகனும், மங்கையற்கரசியின் அன்புக் கணவரும், நகுலேஸ்வரி (ஜேர்மனி), தர்மராஜா (லண்டன்), நீதிராஜா, யோகராஜா (லண்டன்), ஞானேஸ்வரி (ஜேர்மனி), உதயராஜா (சுவிஸ்), இளையராஜா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், கணேசமூர்த்தி (ஜேர்மனி), உதயமலர் (லண்டன்), கலிங்கராணி, தவராஜா (ஜேர்மனி), ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜேர்மனி சுபில், சுஜன், நதியா, சுபீஸ், தன்யா ஆகியோரின் அன்புத் தாத்தாவும். நல்லம்மா (சுவிஸ்), காலஞ்சென்ற சண்முகம், பொன்னம்பலம் (ஜேர்மனி), மகாலட்சுமி, பஞ்சாட்சரம் ஆகியோரின் அன்பு சகோதரருமாவார்.
அன்னாரின் மரணச் செய்தி கேட்டறிந்து நேரடியாகவும், தொலைபேசி மூலமும் எமது துயரத்தில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பிரிவால் துடிக்கும்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள்.

தகவல்: மகள் நகுலேஸ்வரி கணேசமூர்த்தி (ஜேர்மனி)

(ADV)



# சூசைப்பிள்ளை அருட்பிரகாசம்
### (ஜெயக்கொடி)
பாசையூர் - யாழ்ப்பாணம்

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| யாழ் மண்ணில்: | ✝ | தமிழக மண்ணில்: |
| 11.07.1932 | | 08.09.1996 |

சூசைப்பிள்ளை அருட்பிரகாசம் (ஜெயக்கொடி) 08.09.96 ஞாயிற்றுக்கிழமை சென்னையில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை சூசைப்பிள்ளை, சிசிலி சூசைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், சூசைப்பிள்ளை ஞானப்பிரகாசம் (சென்னை), சூசைப்பிள்ளை தவப்பிரகாசம் (பாரிஸ்), சூசைப்பிள்ளை டானியல் (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி ஞானப்பிரகாசம் மரிய இராஜேஸ்வரி (சென்னை), திருமதி டானியல் மரிஸ்டெல்லா (டென்மார்க்), ஆகியோரின் மைத்துனரும், ஞானப்பிரகாசம் ஞானகுபேந்திரன் (சுவிஸ்), ஞானப்பிரகாசம் ஞானகிறைம்பஸ் (பாரிஸ்), ஞானப்பிரகாசம் ஞானரோமவோல்ட் (பாரிஸ்), ஞானப்பிரகாசம் அனிதா (பாரிஸ்), ஞானப்பிரகாசம் வனிதா (பாரிஸ்), ஞானப்பிரகாசம் ஞானரோசன் (சென்னை) ஆகியோரின் சிறிய தந்தையும், டானியல் டனிஹாசன் (டென்மார்க்), டானியல் டனிஸ்டெல்லா (டென்மார்க்), டானியல் டெனி (டென்மார்க்), டானியல் டனிஸ்டன் (டென்மார்க்) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்கான திருப்பலி பூசை 22.09.96 பிற்பகல் 4.00 மணிக்கு
EGLISE ST ANDRE
36 Rue Robespierre, 93170 BAGNOLET.
M°: Robespierre - Dir: Porte de Montreuil இல் ஒப்புக் கொடுக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
சூசைப்பிள்ளை தவப்பிரகாசம்
தொலைபேசி இல: 40 44 43 73

(ADV)

# யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு சென்ற வெங்காயம் கப்பலிலேயே அழுகி விட்டது

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலிருந்து கப்பல்கள் மூலம் கொழும்புக்கு கொண்டு வரப்பட்ட 200 மெட்ரிக் தொன் வெங்காயம் அழுகி விட்டதாக சிறீலங்காவின் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

புலோலி, உடுப்பிட்டி, அச்சுவேலி ஆகிய இடங்களைச் சேர்ந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சாக்குகளில் கட்டி பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்ட வெங்காயம் காற்றுப் போகாத நிலையில் ஒரு வாரத்துக்கு மேலாக கப்பலில் இருந்ததால் அழுகிப் போய் விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது யாழ்ப்பாண வெங்காயத்தை விமான மூலம் கொழும்புக்கு கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக சிறீலங்கா இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். இவ்வாறு விமான மூலம் வெங்காயம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டால் அது பழுதாகாவிட்டாலும் அதன் விலை சந்தை விலையை விட கூடுதலாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முல்லைச்சமருக்குப் பின் 500 படையினர் தப்பியோட்டம்

(கொழும்பு)

முல்லைத்தீவு இராணுவக் கடற்படைத் தளம் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பெருந்தொகையான எண்ணிக்கையில் படையினர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

ஆனால் சிறீலங்கா அரசின் கணக்கின்படி அவர்கள் போரில் கொல்லப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்கப்படாமல் காணாமல் போனோர் பட்டியலில் சேர்த்து விட்டு தனது பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டுள்ளது. கொல்லப்படாமல் காணாமல் போயுள்ளதால் அவர்களுக்கான இழப்புக் கொடுப்பனவுகளை அரச இழுத்தடித்து வருகின்றது.

இதனால் சிறீலங்கா இராணுவத்தினர் மத்தியில் விரக்தி நிலை தோன்றி வருகின்றது. தற்போதைய கணிப்பீட்டின்படி முல்லைத்தீவு படைத்தளம் மீதான புலிகளின் தாக்குதலின் பின் ஐநூறுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் தமது படைப்பிரிவிலிருந்து தப்பி ஓடியுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# புத்தளத்தில் 35 தமிழர்கள் கைது

புத்தளம் மாவட்டத்தில் சிறீலங்கா படையினர் நடத்திய தேடுதல் வேட்டையின் போது, 35 தமிழர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 13.09.96 அன்று அதிகாலையில் புத்தளம் மாவட்டத்திலுள்ள சஜீவபுரம், கொச்சிமடு, அனுராதபுரவீதி, ஆகிய பகுதிகளை சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய சிறீலங்கா படையினர் அங்கு பாரம்பரியமாக தொடர்ந்து வசித்து வந்த 35 தமிழர்களை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்துகொண்டு சென்றுள்ளனர்.

செஞ்சோலை – காந்தருபன் அறிவுச்சோலை
வளர்ச்சி நிதிக்காக
**ஈழவர் விளையாட்டுக் கழகம்**
நடாத்தும்
★ கரப்பந்தாட்டம்
★ வலைப்பந்தாட்டம்
★ பூப்பந்தாட்டம்
**சுற்றுப்போட்டிகள்**
காலம்: 22–09–1996 (ஞாயிறு)
நேரம்: காலை 8.30 மணி
இடம்:
CENTRE SPORTIF DES POISSONNIERS
21, Rue Jean Cocteau, 75018 Paris.
(Metro: Porte de Clignancourt)
போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள்,
தனிநபர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களுடன்
தொடர்புகொள்ளவும்.
தொலைபேசி இலக்கம்: 42 09 21 43

விரைவில் வெளிவருகிறது
கலை ஒளியின்
**பாரிஸ் வந்தோம் (CD)**
பாரிஸ் முன்னணி இசை அமைப்பாளர்களின்
கூட்டு முயற்சி

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### யாழ். குடாநாட்டில்....

கரணவாய் பகுதியில் 7 பிள்ளைகளின் தந்தை ஒருவரது வீட்டில் இருந்த ஒரு இலட்சத்து 3 ஆயிரம் ரூபா பணத்தை கொள்ளையடித்து விட்டு அவரை 47 நாள் சிறையில் தள்ளிவிட்டனர். இதே பகுதியில் 26 அப்பாவிப் பொதுமக்கள் காணாமல் போயுள்ளனர். இன்று வரை இவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### வரவு செலவு...

நடத்தினால் இன்னும் ஏராளமான செலவு செய்து கொண்டே இருக்க வேண்டும்.

கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்குப் போக முடியுமா? அதைப் பிடிக்க முடியுமா? என்று கேட்டவர்கள் வியக்கும் வண்ணம் நாம் அதைப் பிடித்துக் காட்டியிருக்கிறோம். இதற்குக் காரணம் எமது இராணுவத்திற்கு தேவையான பெருந்தொகை பணத்தை செலவழித்து நவீன ஆயுதங்களையும் கருவிகளையும் நாம் வாங்கிக் கொடுத்ததுதான் என்று கூறியுள்ளார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### புதுப்பொரலிவு....

கலவன் பாடசாலை, வெட்டுவாய்ந்தகல் தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றை எதிர்வரும் அக்டோபர் மாதம் மீளத் திறப்பதற்கு முல்லை மாவட்ட கல்வி அதிகாரி செல்வி இ.பெரியதம்பி நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதேசமயம் முல்லைத்தீவின் தென்பகுதியிலுள்ள அலம்பில் கடற்கரைக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மண்கிண்டிமலையில் இருக்கும் இராணுவத்தினர் நடத்தும் எறிகணைத் தாக்குதலாலும், கடலிலிருந்து கடற்படையினர் நடத்தும் எறிகணைத் தாக்குதல்களாலும் தமது பாரம்பரிய வீடுகளை விட்டு உட்பிரதேசங்களுக்கு பாதுகாப்புத் தேடி இடம்பெயர்ந்து வருகின்றனர்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### கொழும்பு...

டுள்ளது. வீரகேசரி தற்போது மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த சந்திரசேகரனுக்கு சார்பாக இயங்குவதாக தொண்டமான் குற்றம் சுமத்தியுள்ளார்.

# மரண அறிவித்தல்

பிறப்பு 28.03.1930



உதிர்வு 10.09.1996

## நாகலிங்கம் கணேசலிங்கம்

யாழ்ப்பாணம் கிராம விஸ்தரிப்புதிட்டம், திருநெல்வேலியைச் சேர்ந்த **நாகலிங்கம் கணேசலிங்கம்** 10.09.96 அன்று தமிழ்நாட்டில் காலமானார்.

அன்னார் கனகாம்பிகையின் அன்புக் கணவரும், திருமதி செ. கஜேந்திரகுமாரி (ஜேர்மனி), திருமதி இ.சாந்தகுமாரி (இந்தியா), திருமதி வி.குசலகுமாரி (பிரான்ஸ்), ரவீந்திரகுமார் (பிரான்ஸ்), உதயகுமார் (பிரான்ஸ்), செல்வி கோகிலா (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத் தந்தையும் செல்வநாயகம் (ஜேர்மனி), இரட்ணேஸ்வரன் (இந்தியா), விமலாகரன் (பிரான்ஸ்), கிறிஸ்ரின் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமனாரும், ரோஜி, சுகிர்தன், கிரிஜா, துசந்தன், சுவஸ்திகா, கௌசல்யா, தர்சி ஆகியோரின் அன்புப் பாட்டனாருமாவார்.

உற்றார் உறவினர்கள், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: மகன்மார்
ரவி, கண்ணன் (பிரான்ஸ்)
தொலைபேசி இல: 43 40 84 47

ஜேர்மனியில் ஒரேநாளில் இரு திரையரங்குகளில்
திரையிடப்படுகிறது..
அருந்ததியின்
**முகம்**
ஒளிப்பதிவு: எஸ். பாபு – ரவி
தயாரிப்பு: நவாஜோதி
பாரிஸில் தயாராகி இதுவரையில் ஐரோப்பாவெங்கும்
பத்துக்கும் மேற்பட்ட காட்சிகள் காண்பிக்கப்பட்டு
பார்த்தவர்களின் பாராட்டையும், பத்திரிகைகளின் சிறந்த
விமர்சனத்தையும் பெற்ற புலம்பெயர் தமிழ்த் திரைப்படம்
காலம்: 22.09.96 (ஞாயிறு)

| பிற்பகல் 2.00 மணி | மாலை 5.30 மணி |
| --- | --- |
| KINO<br>SCHAUBRG<br>FRIEDRICH STR - 22<br>MONCHANGLADBACH<br>தொடர்புகட்கு:<br>02161-178007<br>02161-206393 | LUISE ALBERTZ HALLW<br>(STADTHALLE)<br>AUDITORIAM<br>DUPPEL STR 1,<br>OBERHAUSEN<br>தொடர்புகட்கு:<br>0208-607635<br>0208-808244 |


பிரான்ஸ், பழைய மாணவர் சங்கங்களுக்கிடையிலான
**வருடாந்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி - 1996**
யாழ்.சம்பத்தரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் வருடா வருடா நடாத்தப்படும் "டாக்டர் பிலிப்ஸ்" ஞாபகார்த்தக் கிண்ண சுற்றுப்போட்டி, எதிர்வரும் 22.09.96 ஞாயிறு காலை 9 மணிக்கு Metro: Fort Aubervilliers க்கு அருகாமையில் உள்ள STADE AUGUSTE விளையாட்டரங்கில் நடைபெற உள்ளது.
1995ம் ஆண்டு பங்குபற்றிய கல்லூரி பழைய மாணவர் சங்கங்கள் இம்முறையும் பங்குபற்றலாம்.
மேலதிக விபரங்களுக்கு: திரு. ஞானம் பீரிஸ் (45 18 90 01) / திரு. போ. ஜெயரட்ணம் (42 87 57 11)
திரு. கே.ஜே. பாக்கியராஜா (48 39 95 42)

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
7510 Paris
Tél: 40 37 63 63
Fax: 40 37 64 64

ஆர்த்தி
PROFESSIONNEL PHOTOGRAPHERS
உங்கள் எண்ணங்களை வண்ணமயமான புகைப்படங்களாக்கும் பாரிஸ் நகரின் No1 புகைப்பட வல்லுனர்கள்.
அனைத்து வைபவங்கள் மற்றும் புகைப்படத் தேவைகளுக்கு உடனே தொடர்புகொள்ளுங்கள்
16, Rue de Paradis, 75010 Paris. Mo: Gare de l'Est - Tel: 42 46 42 07 / Fax: 40 22 98 67
வெகுவிரைவில் லாச்சப்பலில் சகல வசதிகளுடனும் கூடிய பிரமாண்டமான புகைப்படப் பிடிப்பு நிலையம்

# வரவு செலவு திட்டத்தை தயாரிப்பதில் பெரும் நெருக்கடியாம் - அமைச்சர் பீரிஸ் சொல்கிறார்

(கொழும்பு)

சிறீலங்கா அரசாங்கம் 1997-ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதில் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதென்று அரசியல் விவகார அமைச்சரும் பிரதி நிதி அமைச்சருமான ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சிறீலங்காவின் தென்பகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய அவர், எதிர்வரும் நவம்பர் மாதம் 6ம் திகதி சமர்ப்பிக்கப்பட வேண்டிய 97ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டி இருக்கிறது.

தேசிய வருமானத்தில் 23 வீதம் யுத்தத்திற்கு செலவாகிறது. வரும் நிதி ஆண்டில் 25 வீதமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அல்லது இதைவிடக் கூடவும் கூடும். இது எமது அரசாங்கத்திற்கு ஒரு தாங்க முடியாத சுமையாகும்.

உலகத்திலுள்ள எந்தவொரு நாட்டிலும் மொத்த தேசிய வருமானத்தில் நான்கில் ஒரு பகுதி யுத்தத்திற்கு செலவிடப் படுமானால் அது சுமக்க முடியாத சுமையாகவே அமையும். இவ்வாறு தொடர்ந்து செலவு செய்துகொண்டே போனால் புதிய வேலை வாய்ப்புக்கள் உருவாகாது. பழைய வேலை வாய்ப்புக்களும்பாதிக்கும். அரிசி, பாண், மரக்கறி, மீன் என்பவற்றின் விலையும் அதிகரிக்கும்.

இன்று நாட்டில் நடக்கும் யுத்தத்தினால் அநேகமாக படையிலுள்ள 19, 20, 21 வயது இளைஞர்களே கொல்லப்படுகின்றனர். இவர்களின் குடும்பங்களுக்கு இறந்தவருக்கு 55 வயது வரும் வரை சம்பளம் கொடுப்பனவுகளையும் வழங்குவதோடு, இழப்பீடும் வழங்கவேண்டியுள்ளது. அதேசமயம் இவ்வாறு மடிந்து போன படையினரின் இடத்திற்கு புதியவர்களை எடுத்து அவர்களுக்கும் சம்பளம் கொடுக்க வேண்டி உள்ளது. இதனால் எமக்கு இரட்டைச் செலவுகள் ஏற்படுகின்றன.

இந்தக் கோர யுத்தத்தினால் கணவனை இழந்தவர்கள், மனைவியை இழந்தவர்கள், பிள்ளைகளை இழந்தவர்கள், பெற்றோர்களை இழந்தவர்கள் ஏராளமானவர்கள். இதனால் ஏற்படும் பொருளாதார சிரமங்களும் கொஞ்ச நஞ்சமல்ல. யுத்தத்தை தொடர்ந்து

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# யாழ் குடாநாட்டில் இராணுவத்தின் அட்டூழியம் பன்மடங்கு அதிகரிப்பு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சிறீலங்கா இராணுவத்தின் அட்டூழியம் என்றுமில்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது. பெண்களை பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்துவது, வீடுகளை உடைத்துக் கொள்ளையடிப்பது, இளைஞர்களையும், வயோதிபர்களையும் பிடித்து அடித்து உதைத்து சித்திரவதை செய்து மகிழ்வது என்று அவர்களது நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

அண்மையில் நாவற்குழி பகுதியில் நடுத்தர வயது மனிதர் ஒருவரை பிடித்து நடுவீதியில் வைத்து அடித்து உதைத்து சித்திரவதை செய்து விட்டு மக்கள் முன்னிலையில் ரயர் போட்டு உயிருடன் கொளுத்தியுள்ளனர்.

இதேவேளை சூரியக்கதிர்2 இராணுவ நடவடிக்கையின் பின்னர் இராணுவத்தினர் நடத்திய பல வெறியாட்டங்கள் இப்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

மந்துவில் பகுதியில் ஒரு வயதான தாய் தந்தையர் அவர்களது மகன் மருமகன் அவர்களது குழந்தை உட்பட ஐந்து பேரையும் வெட்டிக் கொன்றுள்ளனர். இதே போன்று கொடிகாமப் பகுதியில் 60 வயதுடைய ஒரு பெண் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

கச்சாய்ப் படகுத்துறைப் பகுதியில் ஒரு பெண்ணைப் பாலியல் பலாத்காரம் மேற்கொள்ள முயன்ற படையினரை தடுக்க முயன்ற கணவனை வெட்டிக் கொன்றுவிட்டு பின்னர் அப் பெண்ணை பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தி பின் அப் பெண்ணையும் வெட்டிக் கொன்றுள்ளனர்.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# புதுப் பொலிவு பெறும் முல்லைத்தீவு நகரம்

முல்லைப் பெரும் சமருக்குப் பின் முல்லைத்தீவு நகரத்தை ஆக்கிரமித்திருந்த சிறீலங்காப் படைகள் முற்றாக துடைத்து அழிக்கப்பட்டபின், நகரம் தற்போது சகச நிலைக்கு திரும்பிவருகிறது.

ஆறுவருடத்திற்கு முன் சிறீலங்கா படைகள் முல்லைத்தீவு நகரத்தை ஆக்கிரமித்த போது அங்கிருந்து வெளியேறிய மக்கள் தற்போது தமது சொந்த இடங்களுக்கு திரும்பி சண்டையினாலும், இராணுவ ஆக்கிரமிப்பினாலும் சேதமடைந்துபோன தங்கள் குடியிருப்புக்களை புனரமைத்து வருகின்றனர்.

படையினரால் மூடப்பட்ட பாடசாலைகள் மீண்டும் இயங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன. இந்த வகையில் முல்லை மகாவித்தியாலயம், முல்லை ரோமன் கத்தோலிக்க பாடசாலை, கள்ளப்பாடு அரச

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# கொழும்பு பத்திரிகைகளுக்கும் கட்சிகளுக்கும் இழுபறி

சிறீலங்காவில் ஆட்சியில் எந்தக் கட்சி இருக்கின்றதோ அந்தக் கட்சிக்கு வால் பிடிக்கும் விதத்தில் உண்மைக்குப் புறம்பான செய்திகளையும், செய்திகளை மறைத்தும், திரித்தும் வெளியிடுவதில் புகழ்பெற்றது ஏரிக்கரை நிறுவனம். ஐ.தே.கட்சி ஆட்சியிலிருந்த போது அதற்குச் சார்பான செய்திகளையே வெளியிட்டு வந்தது.

தற்போது ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி மாறி பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சி வந்தவுடன் அந்தக் கட்சியின் செய்திகளையே வெளியிட்டு ஐ.தே.கட்சியை தாக்கியும் வந்தது. இதனால் ஐ.தே.கட்சி ஏரிக்கரை நிறுவனப் பத்திரிகைகளை பகிஷ்கரிக்கும்படி சிங்கள மக்களுக்கு கோரிக்கை விடுத்திருந்தது.

தற்போது ஏரிக்கரை நிறுவனத் தலைவர் தமது நிறுவனப் பத்திரிகைகள் பக்க சார்பாக செய்தி வெளியிடுபவவை அல்ல என்றும் அதை பகிஷ்கரிக்கக் கோருவது தேசத் துரோகம் என்று கூறியுள்ளார்.

இது இவ்வாறிருக்க, இதுவரை காலமும் மலையக அரசியலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமானுக்கு ஆதரவாக செய்திகளை வெளியிட்டு வந்த வீரகேசரி பத்திரிகை நிர்வாகத்துக்கும் தொண்டமானுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மனக்கசப்பால் வீரகேசரி பத்திரிகையை இலங்கைத் தொழிலாளர் காங்கிரசச் சேர்ந்தவர்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என காங்கிரஸ் கட்சியின் பத்திரிகை செய்தி வெளியிட்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# புலிகள் ஆயுதங்களைப் போட்டால் மட்டுமே பேச்சு

– சந்திரிகா –

தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டு பயங்கரவாத வன்செயல்களைக் கைவிட்டு விட்டதாகப் பிரகடனப்படுத்தினால் மட்டுமே அவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்படும் என சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா சி.என்.என் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தை நிறுத்தி இனப் பிரச்சனைக்கு தீர்வுகாண சந்திரிகா உளச் சுத்தியுடன் விரும்புவாரேயானால் இவ்வாறு பொறுப்பற்ற முறையில் பேசுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என சில கொழும்புத் தமிழ்க் கட்சிகள் தெரிவித்துள்ளன.

ஒரு புறம் பேச்சு வார்த்தை நாடகம் மறுபுறம் யுத்தம் இன்னொரு புறம் விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாக சித்தரிக்க முயலுதல் என தனது ஆட்சிக் காலம் முழுவதும் மாற்றி மாற்றி எதையாவது சொல்லி காலம் கடத்தவே சந்திரிகா விரும்புகிறார் என அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தமிழ் வீடியோ, ஒடியோ கசட், கொம்பக் டிஸ்க் மற்றும் புடவை வகைகள், மளிகைச் சாமான்களுடன் கடல் உணவுகள், மரக்கறிகள் போன்ற உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

S.K.TRADING

Gasometer Street 31,
8005 Zurich,
Switzerland

Tel: 01-2724336
077-782201
Fax: 01-2732377

# தொப்புள் கொடி உறவுக்காக 15 நாட்கள்
# பிரித்தானிய தமிழ் மக்கள் பேராதரவு!
# திட்டத்தைக் குழப்ப சிறீலங்கா முயற்சி!!

(லண்டன்)

தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் நினைவுடன் பிரித்தானிய ஐக்கிய தமிழர் அமைப்பினால் (U.T.O.) ஒழுங்கு செய்யப் பட்டிருக்கும் 'தொப்புள் கொடி உறவுக்காக 15 நாட்கள்' என்ற மக்கள் தொடர்புத் திட்டத்திற்கு பிரித்தானியா வாழ் தமிழீழ மக்கள் பேராதரவு வழங்கி வருகின்றார்கள். திலீபன் தனது நீர்கூட அருந்தாது, சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த தினத்தின் (15.09.87) 9ஆம் ஆண்டு நிறைவு தினமான 15.09.96 அன்று காலை 10 மணிக்கு ஆரம்பித்த இத் திட்டம் 29.09.96 ஞாயிறு இரவு 10 மணிவரை இடம்பெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

ஈழமுரசுக்கு கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில், தங்கள் வீடுகள் தேடி வரும் ஐக்கிய தமிழர் அமைப்பின் தொண்டர்களை மக்கள் அன்புடன் வரவேற்று உபசரிப்பதாகத் தெரிகின்றது. மக்கள் தமது கருத்துக்களை தொண்டர்களுடன் பகிர்ந்து கொள்வதுடன் உரிய பங்களிப்பினையும் வழங்கிவருகின்றனர். பலர் தாமாகவே ஐக்கிய தமிழர் சம்மேளன அலுவலகத்துடன் தொடர்புகொண்டு, தமது வீடுகளுக்கு வருகைதருமாறு அழைப்பும் விடுத்து வருகின்றனராம்.

இந்த மக்கள் தொடர்பு திட்டம், பிரித்தானியா வாழ் தமிழ் மக்களை நெருக்கமாக இணைத்து, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகள் போராட்டத்திற்கு ஒரு புதுப்பலம் வழங்கிவிடும் என்ற அச்சத்துடன் சிறீலங்கா அரச தரப்பு இத் திட்டத்திற்கு எதிரான சில செயற்பாடுகளைச் செய்ய முயல்வதாகவும் தெரிகின்றது. இச் செயற் திட்டத்திற்கு எதிரான துண்டுப் பிரசுரம் ஒன்று ஆங்கிலத்திலும், தமிழிலும் சில முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இப் பிரசுரம் அனுப்பி வைக்கப்பட்ட சில முகவரிகள், கடவுச் சீட்டினைப் பெற்றுக் கொள்வதற்காக சிறீலங்கா தூதுவராலயத்திற்கு மட்டுமே வழங்கப்பட்ட முகவரிகள் எனவும் அறிவிக்கப் படுகின்றது.

இதற்கிடையில், சில தமிழர்கள், இம் மக்கள் தொடர்புத் திட்டத்திற்கு எதிரான முறைப்பாடு ஒன்றினை சிறீலங்காத் தூதுவராலயத்திற்கு செய்துள்ளதாக அரச கட்டுப்பாட்டுப் பத்திரிகையான THE SUNDAY OBSERVER செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக ஈழமுரசிடம் கருத்துத் தெரிவித்த தொண்டர் ஒருவர், சிறீலங்கா அரச தரப்பின் துணையுடன் மேற் கொள்ளப்படும் இத்தகைய நடவடிக்கைகள் பிரித்தானியா வாழ் தமிழ் மக்களுக்கு கோபத்தினை ஊட்டியுள்ளதாகவும் இது இத் திட்டத்தில் தமிழ் மக்கள் மேலும் உற்சாகமாகத் தங்களை இணைத்துக்கொள்ள வழிகோலுவதாகவும் தெரிவித்தார்.

## முகமாலையில் புலிகள் தாக்குதல் முன்னணிக் காவலரண்கள் அழிப்பு

சிறீலங்கா இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள முகமாலைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் அதிரடிப் படை அணி ஒன்று ஊடுருவிச் சென்று அங்கிருந்த மூன்று இராணுவக் காவலரண்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

முகமாலைப் பகுதியில் கண்டிவீதியில் அமைந்திருந்த இக் காவலரண்களை கடந்த 14.09.96 சனிக்கிழமை இரவு, விடுதலைப் புலிகளின் அதிரடிப் படையணி தாக்கியுள்ளது. இத் தாக்குதலின்போது மூன்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். ஏனையோர் காயமடைந்தவர்களை தூக்கிக் கொண்டு ஓடித்தப்பிவிட்டனர்.

இத் தாக்குதலில் 56 ரக இயந்திர துப்பாக்கிகள் 2, 81 ரக இயந்திரத் துப்பாக்கி 1, ஏராளமான துப்பாக்கி ரவைகள், ரவைக்கூடுகளும் கைப்பற்றப் பட்டன. புலிகள் தரப்பில் உயிரிழப்பு இல்லை.

## வன்னிப் பரீட்சார்த்திகளுக்கு இலவச உணவு விநியோகம்

வன்னிப் பிரதேசத்தில் இருந்து கல்விப் பொதுத் தரா தர உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளின் நலன் கருதி அப் பகுதியில் சேவையில் ஈடுபட்டுள்ள உதவி நிறுவனங்கள் உணவுப் பொருட்களை வழங்கியுள்ளன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் TRO 400 பால்மா பெட்டிகள், 500 சீனிப் பைகள், 1550 கிலோ கோதுமை மா எனபவற்றை வழங்கியுள்ளது. உருத்திரேஸ்வரன் கோயில் நிர்வாகம் 15 கிலோ தேயிலையும், 100 பால் மா பைகளையும் வழங்கியுள்ளது. ருபேடென் உதவி நிறுவனம் இருப்பிட வசதிக்காக தற்காலிக கொட்டகைகளை அமைத்திருந்தது.

## வவுனியாவுக்கு நோயாளர்களை அனுமதிக்க இராணுவம் மறுப்பு

வன்னிப் பகுதியிலுள்ள வைத்திய சாலைகளில் சில நோய்களுக்கான நிபுணத்துவச் சிகிச்சைகளுக்கான சாதனங்கள் இல்லாத காரணத்தால் நோயாளர்களை வவுனியாவிலுள்ள பொது மருத்துவ மனைக்கு அனுப்பி சிகிச்சை பெறவைப்பது நீண்ட கால வழக்கமாக இருந்தது.

யுத்த நடவடிக்கைகள் கூர்மையடைந்த பின் செஞ்சிலுவைச் சங்கம் தனது இலச்சினை பொறித்த அம்புலன்ஸ் வண்டிகளில் இந்த நோயாளர்களை வவுனியா வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்று வந்தது.

தற்போது தாண்டிக்குளத்தில் உள்ள இராணுவத்தினர் வன்னிப் பகுதி நோயாளர்களை வவுனியாவுக்கு கூட்டிச் செல்வதற்கு அனுமதி மறுத்துள்ளனர். இது தொடர்பாக செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் இராணுவ உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது, பாதுகாப்பு அமைச்சின் சட்டப்படி 35 வயதிற்கு குறைந்த எவரையும் அவர்கள் நோயாளியாக இருந்தால் கூட தாம் அனுமதிக்க முடியாது என்று கூறினார்கள்.

இராணுவத்தினராகிய நீங்கள் வயதைப் பார்க்கலாம், நோய் வாதைப் பார்க்காது என்று செஞ்சிலுவை அதிகாரிகள் இராணுவத்தினரிடம் கூறியதாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## இரு போராளிகள் வீர மரணம்.

கடந்த 11.09.96 புதன்கிழமை சிறீலங்காப் படைகளுடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் இரண்டு போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

செட்டிகுளத்தைச் சேர்ந்த வேதாந்தன் என்று அழைக்கப் படும் முருகையா விஜயகுமார், கரவெட்டி மேற்கைச் சேர்ந்த சோலைமணி என்று அழைக்கப்படும் வேலும்மயிலும் செல்வகுமார் ஆகியோரே அந்த இரு போராளிகளுமாவர்.

## கிழக்கில் மோதல்

கடந்த 10.09.96 செவ்வாய்க்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் சிறீலங்காவின் விசேட பொலிஸ் கொமாண்டோ படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேரடி மோதல் ஒன்று இடம் பெற்றுள்ளது மேலதிக தகவல் கிடைக்கப் பெறவில்லை.

## போராளி வீரமரணம்

19.07.96 அன்று நடைபெற்ற முல்லை வரலாற்றுப் பெருஞ்சமரில் லெப்டினன் வேந்தன் என்று அழைக்கப்படும் பரமசிவம் கிருஷ்ணானந்தசிவம் (யாழ்ப்பாணம்) வீரமரணமடைந்துள்ளார்.


வீட்டுத் தளபாடங்களை ஏற்றி இறக்கவும், உங்கள் மங்கள வைபவங்களுக்கும், ஊர்து யாத்திரை போன்றவற்றிற்கும் தேவையான வாகன வசதிகளுக்கு;



நித்தி

Tel: 43 03 07 08 / 48 05 02 14 / 49 23 87 32 - பிரயாண வசதி கருதி: 07 34 80 51

(ADV)

ஸ்பெஷல் குரு பீடா

பாரிசில் பிரபல்யமான கடைகளில் கிடைக்கும்!

உங்கள் தேவைக்கு என்றும் கேட்டு வாங்குங்கள்

தொடர்புகளுக்கு:

அம்பாள் வீடியோ -
26, Rue Perdonnet, 75010
Paris. M°: La Chapelle
Tel: 42 09 33 81

(ADV)

டோட்மூண்ட் பிறைட்டன் ஜுவல்லறி

ரெக்ஸ்ரைல்ஸ் & வீடியோ

ஆசிய விற்பனை நிலையத்தின்

மலிவு விற்பனை **10.09.96** முதல் **05.10.96** வரை

மலிவு விலைப் பொருட்களில் உதாரணத்திற்கு சில

100 கிராம் மோர் மிளகாய் 99 பெனிக்
450 கிராம் HORLICKS போத்தல் 4.95DM
1 கிலோ வறுத்த அரிசிமா 2.95DM
500 கிராம் வறுத்த பெட்டி, போத்தல் தூள் 4.45DM
20 கிலோ Tilda புறோக்கன் பஸ்மதி அரிசி 24.90DM
Audio Lby 1.95 DM முதல் 3.95DM வரை

RAMY, PYRAMID உட்பட அனைத்து வகை CD களும் 4.90DM முதல் 12.90DM மட்டுமே
ஒரிஜினல் வீடியோ பாட்டுக் கொப்பிகள், ஒரிஜினல் வீடியோ தமிழ் படங்கள் யாவும் 7.90DM முதல் 14.90DM மட்டுமே.
1 பவுண் தங்கநகை (வரி, கூலி உட்பட) 195DM

* பட்டுப் புடவைகள் ரெடிமேட் ஆடைகள், எவர்சில்வர் பாத்திரங்கள் அனைத்தும் மலிவு விலையில்
* மூவாயிரத்துக்கும் அதிகமான தமிழ் வீடியோ படங்கள் வாடகைக்கும், விற்பனைக்கும் கிடைக்கும்
ஜெர்மனியில் எப் பாகத்திற்கும் பொருட்களைப் பெற விரும்புவர்களுக்கு தபாலில் NACHNAME மூலம் உடன் அனுப்பிவைக்கப்படும்.
திருமண, பிறந்ததின அழைப்பிதழ்கள், T.V, வீடியோ திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

**BRIGHTAN** VIDEO & ASIA SHOP JEWELLERY & TEXTILES

OESTERMARSCH 27/37, 44145 DOUTMUND - Tel: 0231 819431, 838703 Fax: 0231-811858

(ADV)

# கிளிநொச்சியிலுள்ள யாழ் ஓய்வூதியக்காரருக்கு ஓய்வூதியம் வழங்காமல் அரசு இழுத்தடிப்பு

சிறீலங்கா இராணுவத்தின் சூரியகதிர் இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் தங்கியிருக்கும் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஓய்வூதியக் காரர்களுக்காக ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு சிறீலங்கா அரச இழுத்தடிப்புச் செய்து வருகிறது.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 746 ஓய்வூதியக் காரர்கள் தனது நிர்வாகப் பிரதேசத்தில் இருப்பதாகவும், அவர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவை கிளிநொச்சி மாவட்டத்திற்கே அனுப்பி வைக்கும் படியும் யாழ் அரசாங்க அதிபரைக் கோரியிருந்தார்.

குடாநாட்டிலிருந்து இராணுவ நிர்வாகம் அந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்து தமது இஷ்டப்படி மனம் போன போக்கில் சிலரது பெயர்களை ஓய்வூதியக் காரர்கள் பட்டியலிலிருந்து நீக்கிவிட்டு 562 பேருக்கு மட்டுமே கிளிநொச்சிக்கு ஓய்வூதியப் பணத்தை கொடுக்க அனுமதித்துள்ளது. ஏனைய 182 பேருக்கு ஏன் ஓய்வூதியம் கொடுக்கப்படவில்லை. அவர்களது பெயர்கள், ஓய்வூதியக் காரர்கள் பட்டியலிலிருந்து நீக்கப் பட்டதற்கான காரணம் எதையும் இராணுவ நிர்வாகம் அறிவிக்கவில்லை.

இது இவ்வாறிருக்க வடக்கு கிழக்கு பகுதியில் உள்ள அரச ஊழியர்களுக்கு யுத்த நெருக்கடி கொடுப்பனவுகள் நீண்டகாலமாக வழங்கப்பட்டு வந்தன. இம் மாதம் யாழ் குடாநாட்டிலுள்ள அரச ஊழியர்களுக்கு இக் கொடுப்பனவுகளை வழங்க அரசாங்கம் மறுத்துள்ளது. அதேசமயம் திருகோணமலை வவுனியா மட்டக்களப்பு மாவட்ட ஊழியர்களுக்கு இது தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

## பொலிஸ் வாகனம் மோதி மட்டு இளைஞர் பலி

மட்டக்களப்பு நகரத்தில் சிறீலங்கா பொலிசாரின் தண்ணீர் வாகனம் மோதியதில் ஒரு இளைஞர் அந்த இடத்திலேயே உடல் நசுங்கிப் பலியாகி உள்ளார்.

கடந்த வியாழக்கிழமை 12.09.96 பிற்பகல் 4.30 மணியளவில், குணரட்ணம் சபாரட்ணம் என்ற 30 வயதுடைய இளைஞர் மட்டக்களப்பு வைத்தியசாலை வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த போது அவ் வழியால் வந்த சிறீலங்கா பொலிசாரின் தண்ணீர் (பவுசர்) வாகனம் வேலைடு மென்றே வேகமாக வந்த அவர் மீது மோதியது. அந்த இளைஞர் அந்த வாகனம் தன்னை நோக்கி வேகமாக வருவதைக் கண்டு ஒதுங்கி ஓடித் தப்புவதற்கு முன் அது அவரை மோதித் தள்ளிவிட்டது.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு நகரத்தில் நடக்கும் மூன்றாவது சம்பவமாகும். இதற்கு முன்பும் இரு தடவை சிறீலங்கா பொலிஸார் அப்பாவி மக்களை தமது வாகனத்தால் மோதிக் கொலை செய்துள்ளது குறிப்பிடத் தக்கது.

## இளைஞர்களை புலிகளுடன் சேருமாறு திருமலை - மூதூர் அண்ணா மன்றம் கோரிக்கை

தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமே தமிழ் மக்கள் சுய கௌரவத்துடன் வாழ்வதற்கு வழிவகுத்துக் கொடுக்கக் கூடியவர்கள். அவர்களால் மட்டும் தான் சிறீலங்காவின் பௌத்த சிங்கள இனவாதிகளின் தமிழின அழிப்பு நடவடிக்கையை தடுக்க முடியும். அதனால் வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ் இளைஞர்கள், விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர்ந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க உதவவேண்டும் என்று மூதூர், திருமலை மாவட்ட அறிஞர் அண்ணா மன்றத் தலைவர் செல்வநாயகம் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் சிறீலங்கா அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து நிதியுதவி பெற்று ஆயுதங்களை வாங்கிக் குவித்துக் கொண்டு தமிழ் மக்களை வகை தொகையின்றி கொன்று குவித்து வருகிறது. சிறீலங்கா இனவாத அரசாங்கத்தின் இந்த இன அழிப்பு நடவடிக்கைக்கு தமிழர்கள் என்ற பெயரில் கொழும்பிலிருந்து இயங்கிவரும் தமிழ் துரோகக் குழுக்களும் ஒத்தாசை அளித்து வருகின்றன. தமிழ் மக்களாக நாம் வாழ்வதா, சாவதா என்ற நிலையிலேயே இன்று இருக்கின்றோம். நமது இளைஞர்கள் அநியாயமாக அரச படைகளின் குண்டு வீச்சுக்கும், துப்பாக்கிச் சூட்டுக்கும் இலக்காகி உயிரிழப்பதைவிட நாட்டுக்காகப் போராட முன்வர வேண்டும் அதற்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைய வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

## பாரிசில் முதல் தடவையாக நடந்த தேர் பவனி

பாரிஸ் மா நகரததில் முதல் தடவையாக விநாயகப் பெருமான் வீதியால் தேர்பவனி வந்த சம்பவம் நடைபெற்றுள்ளது.

கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாகவும் அதற்கு அடுத்தபடியாக இஸ்லாமியர்களும் வசிக்கும் பாரிஸ் நகரததில் இந்துக் கடவுளின் ஊர்வலம் (தேர்பவனி) நடைபெறுவதற்கு பாரிஸ் மாநகர நிர்வாகம் அனுமதியளித்தது மிக முக்கியமான ஒரு நிகழ்ச்சியாகும்.

கடந்த 15.09.96 ஞாயிற்றுக்கிழமை பாரிஸ் 18 பகுதியில் அமைந்திருக்கும் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்திலிருந்து பிற்பகல் 2 மணிக்கு புறப்பட்ட தேர் பவனி பாரிஸ் நகரத்தின் பிரதான வீதிகளூடாக 5 கிலோ மீட்டர் தூரம் நடைபெற்றது.

ஆயிரத்துக்கும் அதிகமான விநாயக பக்தர்கள் பக்திப் பரவசத்தோடு முன்செல்ல சிலர் காவடிகள் தீச் சட்டிகளை ஏந்திச் செல்ல சிலர் தேங்காய்களை வீதிகளில் உடைத்து வேண்டுதலை நிறைவேற்ற, நூற்றுக்கும் அதிகமானவர்கள் மேலாடை அணியாமல் வெறுங்காலுடன் தேர் வடத்தை பிடித்து இழுத்துச் சென்ற காட்சி பிரெஞ்சு மக்களுக்கு புதுமையான ஒன்றாக இருந்தது. பிரெஞ்சு மக்கள் தங்கள் வீட்டு பல்கனிகளிலும் வீதி ஓரங்களிலும் நின்று இந்த ரத பவனியை ஆச்சரியத்துடன் பார்த்தனர். பல்வேறு பத்திரிகை புகைப்படக் காரர்களும் தொலைக் காட்சி நிறுவனங்களும் இந்த ரதபவனியை படம் பிடித்தன.

பிரான்சில் வாழும் றெயூனியோன், மார்டினிக், மொறிசியஸ் ஆகிய பிரெஞ்சுக் கொலனித்துவ நாடுகளைச் சேர்ந்த இந்து சமயத்தவர்களையும் பிரதிபலிப்பதாக இவ்விழா அமைந்திருந்ததாக பிரெஞ்சுப் பத்திரிகை ஒன்று தெரிவித்திருந்து.




DAINTEA DAINTEA DAINTEA

விற்பனையாகின்றது DAINTEA....

இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமும் சுவையும் மிகுந்த தேயிலை DAINTEA. 100Bags X 2gm = 200gm நிறை கொண்ட பெட்டியில் விற்பனையாகின்றது. அத்துடன் 14 வகையான Flavour தேயிலையும் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவுண்டு.

ஏக விநியோகஸ்தர்

KRISHNAA TRADERS
ZIEGELRAIN-8, 5000 AARAU SWISS - Tel: 062 824 17 82
Fax: 01 273 04 28 - Mobile: 079 40 58 410 / 077 23 20 13

JAFFNA CASH & CARRY
INDUSTRIE STR-7, 5432 NEUNHOF, SWISS -
Tel: & Fax: 056 406 11 11 - Mobile: 089 401 46 84

ஏற்றுமதியாளர்கள்:
*CHANNEL X (PVT) LTD.*
*1-4/1 DEANSTONE PLACE, COLOMBO-3*
*Tel: 576 760 / Fax: 575 546*

## EPRLF அலுவலகத்தில் குண்டு வெடித்தது இராணுவச் சிப்பாய் பலத்த காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரத்திலுள்ள EPRLF அலுவலகத்திற்கு வந்த தபால் உறை ஒன்றை திறந்து பார்த்த இராணுவச் சிப்பாய் ஒருவர் அதிலிருந்த குண்டு வெடித்ததில் பலத்த காயமடைந்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை 12.09.96 அன்று காலை 9.55 மணியளவில் மட்டுநகர் முதலாவது லேக் வீதியிலுள்ள EPRLF புதிய கண்ணோட்டம் அலுவலகத்திற்கு சிறுகதை என்று தலைப்பிட்டு வந்த கடிதமொன்று அங்கிருந்தவர்களுக்கு பெரும் சந்தேகத்தைக் கொடுத்தது. அவர்கள் அந்தக் கடிதத்தை இலேசாக தடவிப் பார்த்த போது அதற்குள் வயர் ஒன்று இருப்பதாகத் தோன்றியது.

உடனே அவர்கள் சிறீலங்கா இராணுவத்திற்கு இது பற்றி அறிவித்தார்கள். குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினருடன் அங்குவந்த இராணுவத்தினர், கடிதத்தை கைப்பற்றி மிக அவதானமாகப் பிரித்தபோதும் அது இடி முழக்கம் போன்ற சத்தத்துடன் வெடித்தது. அதைப் பிரித்த இராணுவத்தின் குண்டு செயலிழக்க வைக்கும் பிரிவைச் சேர்ந்த சிப்பாய் பலத்த காயமடைந்தார்.

இந்தக் குண்டு வெடித்த சத்தம் இரண்டு கிலோமீட்டர் தூரத்திற்கு கேட்கக்கூடியதாக இருந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## கல்முனை தபாலகத்தில் குண்டு வெடித்தது

(மட்டக்களப்பு)

கல்முனை பிரதான தபாலகத்தில் குண்டொன்று வெடித்ததில் தபால் திணைக்கள ஊழியர் ஒருவர் காயமடைந்துள்ளார். கடிதப் பொதிகளும் தபாலகத் தபால்களும் சேதமடைந்தன.

கடந்த வியாழக்கிழமை 12.09.96 அன்று பிற்பகல் 2.30 மணியளவில் தபாலகத்திற்கு வந்த பார்சல்களை தபால் ஊழியர்கள் பலர் தரம் பிரித்து வந்தனர். ஒரு ஊழியர் குண்டிருந்த பார்சலை எடுத்து குலுக்கியபோது அது பயங்கரச் சத்தத்துடன் வெடித்தது. இதனால் அவ் ஊழியரது கை விரல்கள் சேதமடைந்துள்ளன. ஏனைய ஊழியர்கள் அலறியடித்துக் கொண்டு வெளியே ஓடினார்கள். அவர்களுக்கு சிராய்வுக் காயங்கள் மட்டுமே ஏற்பட்டன.

மேற்படி பார்சலானது குண்டு வெடித்ததினால் துண்டு துண்டாகச் சிதறி வெடித்துவிட்டதால், அது யாரால் யாருக்கு அனுப்பி வைக்கப்பட்டது என்பதை கண்டு பிடிக்க முடியவில்லை என கல்முனைப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## தப்பி ஓடிய படையினர் உட்பட 8 பேர் கைது

சிறீலங்காவின் தென்பகுதியிலுள்ள தங்காலைப் பகுதியில் பொலிசார் மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதல் ஒன்றின்போது இராணுவத்திலிருந்த தப்பி ஓடிச் சென்ற 3 பேர் உட்பட 8 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கைதான 8 பேரிடமிருந்தும் கைத்துப்பாக்கி, கத்திகள், பூட்டுக்களைத் திறக்கும் சாவிக் கொத்துக்கள் என்பன கைப்பற்றப் பட்டுள்ளன. இராணுவத்திலிருந்து தப்பியோடிய மூவரில் ஒருவர் இளம் பெண் ஒருவரை கடத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இரண்டாவது ஆள் வீடொன்றை உடைத்ததாக குற்றஞ் சாட்டப் பட்டுள்ளார். மூன்றாவது ஆள் கஞ்சா கடத்தியதாக குற்றஞ்சாட்டப் பட்டுள்ளார். அவரிடமிருந்து 2 1/2 கிலோ கஞ்சாவையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

## இராணுவச் சீருடையுடன் கொள்ளை

(கொழும்பு)

இராணுவச் சீருடை அணிந்து ஆட்டோ வண்டி ஒன்றில் சென்ற ஒரு கோஷ்டி இரண்டு வீடுகளில் கொள்ளையடித்துள்ளது.

மாத்தளை பகுதியிலுள்ள லக்கல வில்கமுவ கிராமத்திலேயே இச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இரவு 11 மணியளவில் ஆட்டோ வண்டியில் வந்த மேற்படி கோஷ்டினர் தாங்கள் பொலிசார் என்றும் வீடுகளைச் சோதனையிட வந்திருப்பதாகவும் கூறி துப்பாக்கி முனையில் கதவைத் திறக்கச் செய்து பணம், நகை என்பவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.

## அப்பம் ஒன்று 3 ரூபா 50 சதம்

சிறீலங்காவில் கோதுமை மாவின் விலை அதிகரிக்கப் பட்டதால் சிங்களவர்கள் காலையிலும், மாலையிலும் விரும்பிச் சாப்பிடும் அப்பத்தின் விலையும் அதிகரித்துவிட்டது.

முதலில் 50 சதத்திற்கும், பின்னர் ஒரு ரூபாவிற்கும், ஒரு ரூபா 50 சதத்திற்கும் விற்கப்பட்டு 2 ரூபாவாகி தற்போது 3 ரூபா 50 சதமாக உயர்ந்துள்ளது. கோதுமை மா கிலோவுக்குத் தான் 3 ரூபா அதிகரித்துள்ளது. ஆனால் அப்பக் கடைக் காரர்களோ ஒரு அப்பத்திற்கு 2 ரூபா 50 சதம் விலை அதிகரிப்புச் செய்து விட்டார்கள்.

## திருநெல்வேலியில் 55 வயது வயோதிப பெண் மீது பலாத்காரம்

சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் 55 வயதுப் பெண் ஒருவர் மீது ரக் வண்டியில் வந்த இராணுவத்தினர் பாலியல் பலாத்காரம் மேற் கொண்டுள்ளனர்.

திரு நெல்வேலி கூட்டுறவுப் பால் பண்ணையில் கடமையாற்றிய மேற்படி பெண் சுய நினைவு திரும்பாமலே இறந்துவிட்டதாக தெரியவருகிறது. இது தொடர்பான மேலதிக தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை.


விற்றில் இந்தியா

15, Av. P.Vaillant Coutrier, 93120 La Courneuve

மலிவு விற்பனை

Cd, Audio மற்றும் எவர் சில்வர் பொருட்கள் வீடியோ ஒறிஜினல் பிரதிகள்

மலிவு விற்பனை இம் மாதம் முழுவதும் தொடரும்

இவ்வார வெளியீடு:

21ம், 22ம் திகதிகளில்

அர்ஜூன், ரேவதி நடித்த R.V. உதயகுமாரின்

சுபாஷ்



இடம்: ESPACE CINEMA
Metro: Aubervilliers Pantin
தொலைபேசி:
48 35 28 50 / 48 35 22 89 / 48 35 19 15

# சிங்களக் கட்சிகளுக்கு ஆதரவு வழங்கி ஏமாந்துவிட்டோம்: *தமிழ்* குழுக்கள் புலம்பல்

சிறீலங்காவில் மாறி, மாறி ஆட்சிக்கு வந்துள்ள சிங்களக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஒத்துழைப்பு வழங்கி நாம்கண்ட பலன் ஏமாற்றம் மட்டுமே என்று கொழும்பு தமிழ் குழுக்களின் பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர்.

இனப்பிரச்சினைக்கு வெளியார் மத்தியஸ்துவம் இன்றித் தீர்வுகாண முடியுமா என்ற தலைப்பில் கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கருத்துத் தெரிவித்த அவர்கள் 'ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு ஜனநாயக அரசியலில் பங்கு பற்றும் நோக்குடன் நாட்டின் இரு பெரும் கட்சிகளுக்கும் மாறி மாறி பூரண ஒத்துழைப்பு வழங்கினோம் எனினும் கடந்த ஓனபது வருடங்களாக எம்மால் எதனையும் தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுக்க முடியவில்லை. இதனால் ஏமாற்றமும் விரக்தியுமே மிஞ்சியுள்ளது' என்று கூறியுள்ளனர்.

புளொட்டின் தலைவர் சித்தார்த்தன், EPRLF செயலாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன், EROS சங்கர் ராஜி ஆகியோரே இத்தகைய கருத்தை தெரிவித்ததாகவும், EPDP டக்ளஸ் தேவானந்தா தனக்கு சந்திரிகா அரசில் நம்பிக்கை இருப்பதாக கூறியதாகவும் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் சிங்களப் பத்திரிகையாளரும், கொழும்பு புத்தி ஜீவிகளும் கலந்துகொண்டதாக தெரியவருகிறது. யுக்திய சிங்களப் பத்திரிகையின் ஆசிரியர் சுனந்த தேசப்பிரிய அங்கு கருத்துத் தெரிவிக்கையில், 'இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதென்பது மக்களை ஒழுங்கு பண்ணுவதிலேயே தங்கியுள்ளது. சிங்கள மக்களிடம் வாரத்திற்கு இரு முறையாவது கூட்டங்களை நடத்தி வருகிறோம். இதன் காரணமாக யுத்தத்தின் கொடுமைகளை அறியத் தொடங்கியுள்ள சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் சேருவதை தவிர்த்து வருகிறார்கள்.

இன்று அரசாங்கம் குறிப்பிடுகின்ற யுத்தம் பற்றிய விபரங்களை சிங்கள மக்கள் நம்பத் தயாராக இல்லை என்று தெரிவித்துள்ளார்.

## வலிகாமத்தில் உணவுத் தட்டுப்பாடு

சிறீலங்கா இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் உள்ள வலிகாமம் பகுதியில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு பெருந் தட்டுப்பாடு நிலவுகிறது. மண்ணெண்ணை, சீனி, கோதுமை மா, பருப்பு அருமையிலும் அருமையாக உள்ளது.

முட்டை ஒன்று 15 ரூபாவாகவும், ஒரு கிலோ சீனி 55 ரூபாவாகவும், வாழைப்பழம் கிலோ 100 ரூபாவாகவும், மீன் கிலோ 150 ரூபாவாகவும், மரக்கறி வகைகள் 100 ரூபா முதல் 140 ரூபாவாகவும் விற்பனையாகிறது.

## ரத்வத்தைக்கு எதிரான அனுராவின் புகார்மீது பொலிசார் விசாரணை

அனுரா - ரத்வத்தை மோதல் உச்சக் கட்டத்தை அடைந்துவிட்ட நிலையில் அனுரா பண்டாரநாயக்கா, அமைச்சர் ரத்வத்தை மீது புலனாய்வுத்துறை பொலிசாருக்கு தெரிவித்த புகார் மீது அவர்கள் விசாரணை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

ரத்வத்தையின் பேச்சு தனக்கும், தனது தாயாருக்கும் மானநஷ்டத்தை உண்டுபண்ணிவிட்டதாக அனுரா புகார் செய்துள்ளார். அதேசமயம் அனுராவின் தயாரும் சிறீலங்காப் பிரதமருமான சிறீமாவோ பண்டார நாயக்காவும் 'ரத்வத்தையின் இரத்தினபுரிப் பேச்சு தனக்கும் தனது குடும்பத்திற்கும் அவமரியாதையை ஏற்படுத்தி விட்டது' என்று புகார் செய்துள்ளார்.

இந்த நிலையில் சிறீலங்காவின் புலனாய்வுத் துறை தலைவர் ஓ.கே.ஹேமச்சந்திரா இந்த விசாரணையை ஆரம்பித்துள்ளார். முதலில் இது தொடர்பாக அனுராவிடமிருந்து 90 நிமிடங்களுக்கு வாக்கு மூலம் பெறப்பட்டது.

இந்த வாக்குமூலத்தில் நான் எனது பெற்றோரான காலஞ்சென்ற S.W.R.D. பண்டாரநாயக்காவினதும் கௌரவ பிரதம மந்திரி சிறீமாவோ பண்டார நாயக்காவினதும் மகன் அல்லவென இரத்தினபுரியில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் ரதவத்தை கூறியுள்ளார்.

நான் இனந்தெரியாத பெற்றோரின் பிள்ளை எனவும், வைத்தியசாலையில் சிசு மாற்றம் நடைபெற்றதாகவும், மாற்றப்பட்ட சிசுவான நான் தவறாக எனது பெற்றோரால் வீட்டுக்கு கொண்டுவரப் பட்டேன் எனவும் கூறியுள்ளார்.

இனந் தெரியாத பெற்றோரின் பிள்ளையாகவும், பெரும்பாலும் சட்ட விரோத பிள்ளையாகவும் இருக்கக்கூடிய நான், இரு பிரதமர்களின் மகன் என தவறாகச் சொல்லித் திரிகிறேன் எனவும் கூறியுள்ளார்.

இந்த அவதூறான வார்த்தைகளை அவர் குருநாகலை, பதுளை ஆகிய இடங்களில் நடந்த கூட்டங்களிலும் கூறியுள்ளார். அவர் பேசிய இந்தவார்த்தைகள் உலகின் முதலாவது பெண் பிரதமரான எனது தாயாரை மிகவும் அவமரியாதை செய்வதாக உள்ளன என்ற அனுரா தெரிவித்துள்ளார்.

## இளம்தாய் இராணுவத்தால் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு கல்மடுப் பகுதியில் இரண்டு பிள்ளைகளின் தயான இளம் பெண் ஒருவர் இராணுவத்தால் அவரது வீட்டிலிருந்து வெளியில் இழுத்து வீதியில் வைத்து சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார்.

நாகராஜா ஹேமலதா என்ற 22 வயது பெண்ணே இவ்வாறு கொல்லப்பட்டவர் ஆவார். கடந்த 06.09.96 அன்று இவரது வீட்டிற்கு வந்த இராணுவத்தினர் இவரை இழுத்துச் சென்று சுட்டுக் கொன்றுள்ளனர். இவரது உயிரற்ற உடல் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் வீதியோரத்தில் கிடக்கக் காணப்பட்டது.

## தனங்கிளப்பில் மாட்டு வண்டி கண்ணி வெடியில் சிக்கியது

கடந்த 06.09.96 அன்று தென்மராட்சியிலுள்ள தனங்கிளப்புப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினர் புதைத்து வைத்திருந்த நிலக் கண்ணி வெடியில் பொதுமக்கள் பயணம் செய்த மாட்டுவண்டி ஒன்று சிக்கியதில் அதில் பயணம் செய்த இருவர் இந்த இடத்திலேயே பலியானார்கள். நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

பலியானவர்களில் ஒருவர் கிருஷ்ணசாமி உதயகுமார் (21) என அடையாளம் காணப்பட்டுள்ளது மற்றவர் பற்றிய விபரம் அறியப்படவில்லை.

## ஊர்காவல் படை மீது தாக்குதல்

கடந்தவாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறீலங்கா ஊர்காவல் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு ஊர்காவல் படையினர் கொல்லப் பட்டுள்ளனர். அவர்கள்வசமிருந்த ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

## கொழும்பு விகாரையில் கைதான உதவித் தொழில் ஆணையாளர் விடுதலை

(கொழும்பு)

கொழும்பில் நடைபெற்ற மத்தியவங்கி குண்டு வெடிப்பு, மற்றும் கொலன்னாவை எண்ணைக் குத தாக்குதல் ஆகியவற்றை செய்தவர்களுக்கு தங்குமிடம் கொடுத்தவர் என்றும் விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவானர் என்றும் கூறி 09.02.1996 அன்று கொழும்பு நாரஹென் பிட்டி விகாரையில் வைத்து கைது செய்யப்பட்ட வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமலிங்கம் தர்மலிங்கம் (56) கொழும்பு பிரதம நீதிபதியால் நிரபராதி என கூறப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 13.09.96 அன்று அவரது வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோது அரசாங்கதரப்பில் அவருக்கு எதிராக குற்றம் சுமத்த போதிய ஆதாரங்கள் இல்லையெனத் தெரிவிக்கப் பட்டதையடுத்து நீதிபதி அவரை விடுதலை செய்தார். உதவித் தொழில் ஆணையாளராக கடமையாற்றிய தர்மலிங்கம் நாரஹென்பிட்டி விகாரையில் மிக நீண்ட காலமாக தங்கியிருந்தார். 09.02.96 அன்று வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட தமிழர் என்பதற்காக, மிகத் திட்டமிட்டு அவரைக் கைது செய்த சிறீலங்கா பாதுகாப்புப் படையினர் அவர் தங்கியிருந்த விகாரை வளவில் RPG ரக ஏவுகணைகள் ஏகே 47, ரீ 56 ரக துப்பாக்கிகள், குண்டுகள் தயாரிக்கப் பயன்படுத்தும் மூலப் பொருட்கள் என்பவற்றை மீட்டதாகவும் கொழும்பில் புலிகளுக்கு புகலிடம் அளித்த மிக முக்கியமான நபரை கைது செய்துவிட்டதாகவும் கூறினர்.

இந்த விடயம் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் மிகப் பெரிய அளவில் பிரசாரப் படுத்தப்பட்டது. சிங்கள மக்கள் மத்தியிலும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள், மற்றும் முதலீட்டாளர்கள் மத்தியிலும் இழந்த தமது பிரதிமையை மீட்பதற்கு ஆயுதப் படையினரே ஆயுதங்களைக் கொண்டு வந்து புதைத்துவிட்டு பின்பு புலிகளின் ஆயுதங்களை மீட்டு விட்டதாக நாடகமாடினார்கள் என்று முன்பு நாரஹென்பிட்டி விகாரையின் பீடாதிபதியான பௌத்த பிக்கு உட்பட பலர் கூறியிருந்தனர். அப்போது அவர்களது கூற்று உண்மைக்குப் புறம்பானது என்று சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு மறுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

09.07.96 முதல் விற்பனையாகின்றது

125 பிராங்குகள் மட்டுமே




இதோ வெளிவந்துவிட்டது. வூட்லன்ஸ்சின் புதிய தொலைபேசி அட்டை WORLD CALL CARD உங்கள் வீடுகளில் இருந்தோ, அல்லது நீங்கள் நிற்கும் இடத்தில் இருந்தோ எவ்வித செலவுமின்றி

N° de Vert பாவித்து எதுவித தடங்கலும் இல்லாமல் Mci நிறுவனத்தால் முதன் முதலாக இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் நாடுகளுக்கு மட்டும் பாவிக்கக்கூடிய விசேட தயாரிப்பு இதுவே.

இலங்கை 15 நிமி. - பாகிஸ்தான் 15 நிமி. - பங்களாதேஷ் 15 நிமி. - இந்தியா 18 நிமி.

குறிப்பு: N° de Vert பாவிப்பதால் ஏற்படும் நன்மை, நீங்கள் முதல் தடவை 5 நிமிடம் பாவித்த பின்பும் மிகுதி 10 நிமிடத்தை பாவிக்கும் போது மேலதிகமாக பணம் செலவிடத் தேவையில்லை.

வர்த்தக ஸ்தாபனங்களுக்கு விசேட விலை உண்டு.

Woodlands Tele communication Centre

70, RUE LOUIS BLANC, 75010 PARIS. Tel: 46 07 76 04 - Fax: 40 07 76 90

மொத்த விற்பனைக்கு: 08 24 31 43 – 08 51 90 54

(ADV)

## ரசிகப் பெருமக்களுக்கு முக்கிய அறிவித்தல்

# போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள் !

**தரத்தில் சிறந்த உண்மையான எமது CD, Audio க்களை வாங்குங்கள். நீங்கள் கொடுக்கும் பணத்திற்கு நிகரான Original CD, Audio க்களை கேட்டு வாங்குங்கள்.**




# காதல் தேசம்

இசை: A.R. ரகுமான்
இயக்கம்: கதிர்
தயாரிப்பு: K.T. குஞ்சுமோன்

*இத் திரைப்படத்தின் பாடல் உரிமைகள் எந்த ஒரு நிறுவனத்திற்கும் போலி CD க்களை உருவாக்க வழங்கப்படவில்லை என மிகத் தாழ்மையுடன் ரசிகப் பெருமக்களுக்குத் தெரிவிக்கிறோம்.*




எமது ஒறிஜினல் CD (Disc) என்பதன் மேல் கீழ் Made in Europe என்றும், CD இன் உள் வட்டத்தின் பின்புறமாக Bhasky CD AA 024 என்றும் உள்ளது.

**காதல் தேசம் படத்தின் பாடல் உரிமை எமக்கு மட்டும் வழங்கப்பட்டுள்ளது. வேறு எந்த CD நிறுவனத்திற்கும் அந்த உரிமை கிடையாது. அந்த நிறுவனங்களின் பெயர்களைத் தாங்கிவரும் காதல் தேசம் CD க்கள் போலியானவை.**

## போலி CD →




போலியில் உள் வட்டம் பெரிதாக உள்ளது. Original இல் சின்னதாக உள்ளது

Original CD இல் உள் வட்டத்தில் பின்புறமாக Bhasky CD AA 024 என உள்ளது

Made in Europe கிடையாது. Original Cd இல் Made in Europe இருக்கும்

# AYNGARAN AGENCIEES

Edco House - 10-12 High street, Colliers Wood, London SW19 2AE. - Tel: 0181 545 0090 - Fax: 0181 543 0933 (ADV)

# தெற்கில் அரசின் பிரச்சாரத்துக்கு நேர் மாறாகவே வடக்கில் நிலைமைகள் உள்ளன

## - குமார் பொன்னம்பலம் -

சிறீலங்கா அரசு முன்வைத்த இனப் பிரச்சினைக்கான தீர்வு யோசனைகளைத் தான் வெளிப்படையாகவே எதிர்ப்பதாக திரு.குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். இது பற்றி கொழும்பிலிருந்து வெளியாகும் சிங்களப் பத்திரிகையான ராவயவுக்கு அவர் வழங்கிய செவ்வியிலிருந்து சில பகுதிகளை இங்கே தருகின்றோம்.

கேள்வி:- ***மக்கள் முன்னணி அரசின் இரண்டு வருடங்கள் பற்றி உங்கள் கருத்து.***

பதில்:— நாட்டை படு மோசமான நிலைக்குக் கொண்டு சென்ற இரண்டு வருடங்கள். யுத்தத்தை நிறுத்துகின்றேன் அமைதியை ஏற்படுத்துகின்றேன், ஜனாதிபதி முறையை ஒழிக்கின்றேன் என வாக்குறுதிகளை வழங்கி ஜனாதிபதி ஆட்சியைக் கைப்பற்றினார். ஆனால் இன்று வரை இவை இரண்டையுமே நிறைவேற்றவில்லை.

கேள்வி:- ***மக்கள் முன்னணி அரசு போரை முடித்து அமைதியை ஏற்படுத்தும் முகமாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடாத்தியபோதும் அதனை முறித்து 3 ஆவது ஈழப் போரை ஆரம்பித்தது புலிகள் அல்லவா?***

பதில்:— இல்லை. பேசுக்கள் தொடர்ந்த போது விடுதலைப் புலிகள் தமது கோரிக்கைகளை அரசுக்கு தெரியப்படுத்தினார்கள். இது வரை காலமும் கஷ்டப்பட்ட மக்களுடைய கஷ்டங்களைப் போக்குவது முதலாவதாகவும் அரசியல் யோசனைகளை இரண்டாவதாகவும் முன்வைத்தார்கள்.

கேள்வி: ***சாதாரண தமிழ் மக்களின் கஷ்டங்களைத் தீர்க்க அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டது அல்லவா? பொருட்களுக்கான தடையை அகற்றியது உண்மைதானே.***

பதில்:— இது பற்றி தெற்கில் செய்யப்பட்ட பிரச்சாரத்திற்கு எதிர்மாறான நடவடிக்கைகளே வடக்கில் நடந்தன. அரசு புலிகளுடன் கடிதங்களை மட்டும் பரிமாறிக் கொண்டதே தவிர பொருட்களுக்கான தடையை அகற்ற நடவடிக்கை எடுக்கவில்லை.



கேள்வி: ***கொழும்பில் வாழும் தமிழர்களைப் போல் இந்த அரசியல் தீர்வில் ஏதாவது நன்மை இருப்பதாக நீங்களும் கருதுகிறீர்களா?***

பதில்:— தமிழ்ச் சமூகம் இனவாதம் படும்போது முன்வைக்கப்பட்ட திட்டம் பற்றி என்னைப் பொறுத்தவரை எந்த நன்மையும் இல்லை. இந்த யோசனையை நான் கணக்கிலெடுக்கவும் மாட்டேன். அதை விட அரசின் இந்த யோசனை பற்றி வடக்கு கிழக்கு மக்கள் இது வரை ஏதாவது கூறியிருக்கிறார்களா? மேலும் அரசினால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் கூட இது பற்றி ஏதாவது பேசுகிறார்களா? கொழும்பில் அரசின் உதவிகளைப் பெற்றுக் கொண்டுள்ள அரசியல் குழுக்களின் தலைவர்கள் மட்டும் இது பற்றிப் பேசுகிறார்கள். அவர்கள் அங்கு செயல்படுவதற்கு அப்படித்தான் நடக்க வேண்டும். ஆகையால் வெட்கம் கெட்ட முறையில் அரசுடன் இணைந்து பேசிக்கொள்கின்றார்கள். இவர்களைத் தவிர வேறு யாராவது இந்த யோசனைகளுக்கு ஆதரவளிக்கிறார்களா தயவு செய்து காட்டுங்கள்.

கேள்வி:- ***நீங்கள் அரசியல் தீர்வு ஒன்றை ஏற்றுக் கொள்ள தயாரற்ற ஒரு இனவாதி என நான் கருதுகின்றேன்?***

பதில்:— நான் இந்த யோசனையை ஏற்றுக் கொள்ளமாட்டேன். அரசாங்கம் தமிழ் மக்கள் மீது குண்டுகளை வீசியபடி முன்வைத்த யோசனை இது. இது அரசின் ஒரு வஞ்சகமான முயற்சி என்பதை நான் வெளிப்படையாகவே கூறுவேன்.

கேள்வி:- ***இனப் பிரச்சனைக்கான தீர்வுக்கு அரசியல் ரீதியான ஆரம்ப நடவடிக்கைகள் எப்படி எடுக்கப்பட வேண்டும் என நினைக்கின்றீர்கள்?***

பதில்:— தெற்கில் உள்ள அணியினை ஒரு அரசியற் கட்சியாலோ அன்றி அரசாங்கத்தாலோ இதனை தீர்க்கமுடியாது. தெற்கில் உள்ள அரசியற் கட்சிகள், குழுக்கள் முதலில் ஒன்று கூடி தமிழ் மக்களுக்கு என்ன கொடுக்கலாம் என்பதை முதலில் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் ஒரு அரசு எடுக்கும் முடிவை அடுத்த அரசு எதிர்க்கும். ஒரு கட்சி எதிர்க்கும், ஒரு கட்சி ஆதரிக்கும். இது தான் வரலாறாக உள்ளது. ஆகையால் முதலில் இவர்கள் எல்லோரும் இணைந்து தீர்மானிப்பது தான் நல்லது.

கேள்வி:- ***கொழும்பு 7-ல் அலுவலகத்தை வைத்துக்கொண்டு நீங்கள் அர்த்தமற்ற கதைகளைக் கூறுவதாக தமிழ்க் குழுக்கள் அபிப்பிராயப்படுகிறார்களே?***

பதில்:— நான் எனது மனதில் பட்ட கருத்தை கூறுகின்றேன். அதே நேரம் தமிழ்க் குழுக்கள் வஞ்சகத் தனமானவர்கள் என்பதையும் பணத்துக்காகவே பேசுபவர்கள் என்பதையும் சிங்கள மக்கள் நன்கு தெரிந்து வைத்துள்ளனர். நான் பேசுவது சிங்கள மக்களுக்கு பிடிக்காதபோதும் எனது கருத்தை வெளிப்படையாகப் பேசுவதை அவர்கள் புரிந்து வைத்துள்ளனர்.

# துன்னாலையில் மோதல்

வடமராட்சிப் பகுதியிலுள்ள துன்னாலையில் கடந்த 08.09.96 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2.50 மணியளவில் விடுதலைப் புலிகள் சிறீலங்காப் படைமீது நடத்திய தாக்குதலில் ஒரு படையினர் கொல்லப்பட்டதாகவும், 2 பேர் காயமடைந்ததாகவும் சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை செயலகம் அறிவித்துள்ளது.

துன்னாலை தெற்கிலுள்ள சிறீலங்கா இராணுவ முன்னணிக் காவலரண் ஒன்றின் மீதே இத் தாக்குதல் நடைபெற்றதாக அந்த அறிவித்தலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# சந்திக்கு வராத சங்கதிகள்

கொழும்பு நகரத்திலுள்ள ஒரு முக்கிய சோதனைச் சாவடிக்கு முன்னால் அந்த சொகுசுக் கார் வந்து நின்றபோது அங்கு காவலில் நின்ற சிறீலங்காப் பொலிசாருக்குச் சந்தேகம் வந்து விட்டது. இந்தியரைப்போல தோற்றமளித்த ஒருவர் அந்த சொகுசுக் காரில் இருந்தது தான் அவர்களது சந்தேகத்திற்குக் காரணம்.

அவர்கள் அந்தக் காரை ஓரம்கட்டச் சொல்லி அதைச் செலுத்திய அந்த மனிதரிடம் அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் எல்லாவற்றையும் கேட்டதோடு காரையும் சோதனை போடவேண்டும் என்றார்கள்.

அந்த மனிதருக்குக் கோபம் வந்து விட்டது. உடனே தனது கைத் தொலைபேசியை எடுத்து இந்தியத் தூதுவரிடம் தொடர்பு கொண்டார். ஒரு சில நிமிடங்களுக்குள் இந்தியத் தூதரக வாகனம் ஒன்று ஒரு உயர் அதிகாரி சகிதம் அங்கு விரைந்து வந்தது.

அந்த மனிதர் அந்த தூதரக அதிகாரியிடம் விளாவோ விளாவென்று விளாவினார். அவரைச் சமாதானப்படுத்திய அந்த அதிகாரி அவரை தடுத்து நிறுத்திய பொலீஸ்காரர்களிடம் அவர் யார் என்பதையும் அவர் ஓட்டி வந்த கார் யாருடையது என்பதை விபரமாக எடுத்துச் சொன்னார்.

அதைக் கேட்டதும் பொலீஸ்காரர்களுக்கு சன்னி பிடிக்காத குறை. எங்கே மேலிடத்தில் பொல்லாப்பு வந்து விடுமோ என்று பயந்துபோன அவர்கள் அவரிடம் காலில் விழாத குறையாக "சொறி சேர்.. நியலி வெரி சொறி சேர்" என்று மன்னிப்புக் கேட்டார்கள்.

அந்த பிரபலமான மனிதர் இந்தியக் கிரிக்கட் வீரர் அசாருதீன். அவர் வந்த கார் சிறீலங்காக் கிரிக்கட் கப்டன் அர்ஜுனா ரணதுங்கவுடையது.

* * * * *

PLOT குழு உட் கொலைகளுக்கு பெயர் பெற்றது. இந்த உட் கொலைகளாலே அது பல தடவை உடைந்து சிதைந்திருக்கின்றது. சில மாதங்களுக்கு முன் நடந்த இன்னொரு உட் கொலை கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலையில் இருந்த புளொட் குழுவை சிற்றெறும்பான நிலைக்குத் தள்ளிவிட்டது.

புளொட் குழுவின் திருகோணமலைப் பொறுப்பாளராக இருந்தவர் அர்ச்சுனா. இவர் தீவிரமான உமா விசுவாசி. அமைப்பின் மூத்த உறுப்பினரான இவர் உமா மகேஸ்வரனுக்காக மாலை தீவுப் புரட்சியில் பங்கெடுத்து சிறையில் இருந்து மீண்டார். மாலை தீவுச் சிறையில் இருந்த காலத்தில் மனமுடைந்து போயிருந்த இவர் சிறை மீண்ட பின் சித்தார்த்தமானவரும் மாணிக்கமானவரும் முழுங்கி வந்த உமா இசத்தால் கவரப்பட்டு தீவிரமாக இயங்கி வந்தவர்.

நாளடைவில் மாணிக்கமானவர், சித்தார்த்தமானவர் கொம்பனியின் உமா இசப் பரப்பல் சுத்தப் பம்மாத்து என்பதையும் உமா மகேஸ்வரனின் கொலையின் பின்னணியில் இந்த இருவருக்கும் சம்பந்தமுண்டு என்பதைத் தெரிந்து கொண்டபின் நியாயம் கேட்க ஆரம்பித்தார்.

மாணிக்கமானவர் புளட் குழுவின் பாரம்பரியப் பாணியில் அவரைத் தட்டிவிட்டார். வழமை போல் தலைமைப் பீடத்துக்கு எதிராகச் சதி செய்தார் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

இங்கே ஐரோப்பாவில் சில தீவிரமான உமா விசுவாசிகள் சித்தார்த் அன்ட் மாணிக்கம் கொம்பனி உண்மையிலேயே உமா இசத்தைப் பரப்புவதாக நம்பி இரகசியமாக இயங்கிக் கொண்டிருந்தனர். அர்சுனாவின் கொலை அவர்களுக்கு பெரிய அதிர்ச்சி வைத்தியத்தைக் கொடுத்து விட்டது இதைக் கண்டித்து சித்தார்த்தமானவரிடம் போர்க் கொடி தூக்கினார்கள். நான் தட்டிக் கேட்டால் எனக்கு இது தான் நடக்கும் என சித்தார்த்தமானவர் கையை விரித்து விட இப்போது அவர்களில் பெரும் பகுதியினர் புளொட் குழு செயற்பாட்டில் இருந்து ஒதுங்கி விட்டனர்.

இனியாவது விடுதலை என்பது சித்தார்த்தன் நினைப்பது போல பாராளுமன்றத்தில் யாசித்துப் பெறுவதல்ல. போராடிப் பெறுவது என்பதை அவர்கள் புரிந்து கொண்டால் சரி.

உங்கள் வீட்டு மங்கள நிகழ்ச்சிகளுக்கும்
மற்றும் அனைத்து மேடை நிகழ்ச்சிகள், கொண்டாட்டங்களுக்கும்
இன்னிசை மழையில் உங்களை மகிழ்விப்பவர்கள்
ஈழநிலா
ஐரோப்பாவின் முன்னணி இசைக் குழு
தொடர்புகளுக்கு: இயக்குனர் S.S. தில்லைச்சிவம் - 42 06 44 86
(ADV)